# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பாயிரம் | .... | 1 |
| 2. | இல்லற இயல்பு | .... | 16 |
| 3. | துறவற இயல் | .... | 67 |
| 4. | ஞானம் | .... | 85 |

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# திருக்குறள் வசனம்

(அறத்துப்பால் உரைநடை)

—:—

## 1. பாயிரம்

எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் பாயிரம் இன்றி யமையாதது. பாயிரம் இன்றேல் பனுவலும் இன்று என்பது நூலோர் துணிபு. மாடத்துக்கு எப்படிச் சித்திரம் இன்றியமையாததோ, மாநகர்க்கு எங்ஙனம் கோபுரம் இன்றியமையாததோ, எவ்வாறு அழகிய நங்கையர்க்கு அணிகலன்கள் தேவையாக உள்ளனவோ அவ்விதமே ஒரு நூல் ஆயின் அதற்குப் பாயிரம் மிக மிக வேண்டற் பாலது.

இவ்விலக்கணத்திற்குப் புறம்பாகாமல் இருக்கவே வள்ளுவனாரும் தாம் இயற்றிய குறள் நூலுக்குப் பாயிரமாக நான்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொண்டனர். அவையே கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்பன: அவற்றின் பொருளை நண்டுச் சிறிது சிந்திப்போமாக.

## 1. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்தாவது புலவன் தான் வழிபட்டு வரும் கடவுளையேனும், தான் செய்யப்புகும் நூலுக்கேற்ற எற்புடைக் கடவுளையேனும் வாழ்த்துதலாம்: திருவள்ளுவர் கண்ட கடவுள் யாது? அதனைப் பற்றி என்ன கூறுகிறார்? கடவுட்கும் நமக்கும் என்ன தொடர்பு உண்டு? இது குறித்து நாம் செய்யக்கடவதாகிய கடமைதான் எது? என்பனவற்றையே ஈண்டு உணர்தற்குரியவை யாகும். திருவள்ளுவர், முதலாவது, கடவுள் ஒருவர் உண்டு என்பதை அழகிய உவமை கொண்டு தெற்றத் தெளிய வைக்கின்றனர். எப்படி எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத்தை முதலாக உடையனவோ அது போலவே, உலகமானது ஆதியாகிய பகவனை—அதாவது கடவுளை—முதலாகக் கொண்டது என்கிறார். உலகைக் காட்டிக் கடவுள் உண்மையை வள்ளுவர் நிலைநாட்டியது உன்னுதற்குரிய செய்தியாகும். கடவுள் என்னும் சொல்லுக்கு மனம், மொழி, மெய்களைக் கடந்தவன் என்பது பொருளாகும். இவ்வாறு, கடந்த பொருள் ஒன்று உண்டு என்பதை எப்படி உணர முடியும்? அதனை உணரவே உலகத்தைக் காட்டி உணர வைத்தனர். நாம் ஒரு நாற்காலியைப் பார்க்கிறோம். அந் நாற்காலி தானாக உண்டாகி இராது என்பதை நாம் அறிவோம். அது பிறன் ஒருவனால் செய்யப்பட்டது என்பதை நாம் யூகித்து அறிகிறோம். ஆனால் அந் நாற்காலியைச் செய்தவனை நாம் காணவில்லை. அதுபோலவே காணப்படும் உலகைக் கொண்டு காணப்படாத கடவுள் இருப்பை உணரலாம். இதனை நன்கு அறியவே உலகத்திற்கு முதல்வன் ஆதிபகவன் என்று கூறினார். கடவுளுக்கு அகர எழுத்தைக் காட்டியதிலும் ஓர் உண்மை தோன்றுகிறது.

அதாவது அகரம் யாதொரு விகாரமும் இன்றி நாதமாத் திரையில் வாயைத் திறந்த அளவில் இயல்பால் பிறக் கிறது. அதுபோலவே இறைவனும் செயற்கை உணர்வால் அன்றி இயற்கை உணர்வால் முற்றும் உணரும் உணர் வுடையார் என்க. இத்தகைய கடவுளை ஒருசிலர் கருதுவது கூடக் கிடையாது. கருதாதவர் எப்படித் தொழப்போகின் றனர். இத்தகையவர் பெரும்பாலும் சில நூல்களைக் கற்ற வர்களே ஆவர். அவர்கள் கற்ற கல்வி பயன் அற்ற கல்வியே. கடவுள் திருவடிகளை வணங்காராயின் பயனற்றவர் களே. ஆகவே, படிப்பிற்குப் பயன் கல்வி அறிவே. இறைவன் திருவடிகளை வணங்குதலே பிறவிப் பிணிக்கு மருந்தாகும். அதனால்தான் அவை நல்ல தாள்கள் ஆயின. அறிவிற்குப் பயன் அவன் தாளைத் தொழுதலும் பிறவி அறுத்தலும் ஆகும்.

இறைவன் இயற்கையில் கருணை நிரம்பியவன். அருள் பழுத்தவன். தன்னை யார் நினைக்கின்றார்களோ அவர்கள் உள்ளமாகிய தாமரையில் விரைந்து சென்று குடிபுகுபவன். அப்படிப்பட்டவனுடைய மாட்சிமை பொருந்திய திருவடி களை வணங்கி இடைவிடாமல் சிந்தித்து வருபவர் எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வர் அன்றோ?

கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவன். அவனுக்கு இன் னார் இனியார் என்பது கிடையாது. அத்தகையவன் திரு வடிகளைப் பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டியது நம் கடமை. அப்படிக் கொண்டால் இடைவிடாமல் அதனைச் சிந்தித்தால் எக்காலத்தும் பிறவித் துன்பம் உளவாகாது. பிறவித் துன்பம் என்பது சிறிதன்று பெரியதாகும். அத் துன்பம் மூன்று விதத்தில் வரக்கூடியது. ஒன்று

தன்னைப் பற்றி வருவது, மற்றொன்று பிற உயிர்களைப் பற்றி வருவது, மூன்றாவது தெய்வத்தைப் பற்றி வருவது. இவை அனைத்தும் வேண்டுதலும் வேண்டாமையும் உடைய இறைவன் திருவடியை நினைத்த வண்ணம் இருந்தால் அருகே நெருங்கமாட்டா. இறைவனது மெய்ம்மை நிறைந்த புகழை நாம் விரும்பி அதனையே இடைவிடாது கூறிக்கொண்டும் சிந்தித்துக் கொண்டும் வருதல் வேண்டும். இங்ஙனம் செய்பவர்க்கு மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை ஆகிய இரண்டு வினையும் உளவாக மாட்டா. நல்வினை கூடவோ வேண்டத்தக்கதன்று என்று சிலர் எண்ணலாம். நல்வினையும் பிறவிக்குக் காரணமாய் இருப்பது. பிறவி அறுதலே பேர் இன்பமாகும். ஏனையவர்கள் புகழும் ஒரு புகழ் அன்று. அப் புகழைச் சொல்லுவதில் பயனில்லை. இறைவன் புகழைச் சொல்லுவதே நற்பயனாகும்.

இறைவன் திருவுருவைக் கோயில்களிலும் படங்களிலும் காணும் மக்கள், இறைவனும் நம்மைப்போல மானிடன் போலும். அவனுக்கும் நம்மைப்போல மெய், வாய், கண், மூக்கு, செவி உள்ளன என்று கூறலாம். ஆம், அவை நம் பொருட்டு ஆண்டவனுக்கு அமைந்த உறுப்புக்களே. அவன் பெற்ற உறுப்புக்களுக்கும் நாம் பெற்ற உறுப்புக்களுக்கும் வேறுபாடு உண்டு. அவன் பெற்ற உறுப்புகள் அவனுக்கு அடங்கியுள்ளவை. ஆனால் நாம் பெற்ற உறுப்புக்களோ நம்மை அடக்குபவை. அதனால்தான், அவ்விறைவனைக் குறிப்பிடுகையில் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட இறைவனது மெய்யான ஒழுக்க நெறியின் கண் தவறாது நின்றவர் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையாக வாழ்வார்கள்.

இவ்வளவு நன்மைகளைத் தருபவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாக அன்றோ இருக்க வேண்டும். ஆகவே அவனைத் தனக்குவமை இல்லாதவன் என்றே கூற லாம் அன்றோ? அவனது திருவடிகளை இடைவிடாது சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திப்பவரே மனக் கவலையை மாற்றவல்லவர் ஆவார். சிந்தியாதவர் மாற்ற வல்லவர் ஆகார். மனக்கவலை என ஈண்டுக் கருதப்பட்டவை பிறவிக்குக் காரணமாகிய காம, வெகுளி மயக்கங்களாகும். உலக மக்கட்கு இறைவன் திருவடியாகிய தெப்பமே தெப்ப மாகும். அத் தெப்பம்தான் பிறவிக்கடலை நீந்தத் துணை செய்ய வல்லது. அறவாழி அந்தணன் ஆதலின், அவ் வந்தணன் தானே பிற வாழி நீந்தத் துணைபுரிய வல்லது. இறைவனுக்கு யாதொரு குணமும் இல்லை என்றாலும் அவன் மக்களினின்று வேறுபட்டவன் என்னும் காரணத்தால் எண்வகை குணமுடையவன் என்று கூறுதலில் தீங்கு இல்லை. அவனுக்குரிய குணங்களாகக் கூறப்புகின் தன் வயத்தன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேர் அருள் உடைமை, முடிவில் ஆற்ற லுடைமை, வரம்பில் இன்பம் உடைமை எனலாம். கடை யிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம் கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை ஆயு ளின்மை அழியாவியல்பு ஆகிய எவ் எண்வகைக் குணம் உடையவன் என்று அவனைக் கூறினும் இழுக்கு வாராது. இத்தகையவன் திருவடிகளை வணங்குந்தலை சிறப்புடைய தலை அன்றோ? தலையால் வணங்கவேண்டும் என்றால் வாயால் வாழ்த்த வேண்டும், கையால் தொழவேண்டும். என்பன கூறாமல் தெரிகிறதன்றோ? இப்படிச் செய்யாமல் நாம்

உறுப்புக்களைப் பெற்றுப் பயன் இல்லை. மெய் வாய் கண் மூக்குச் செவிகளைப் "படைத்தும், ஸ்பரிச உணர்ச்சியும், பேசும் வாய்ப்பும், காணும் இயல்பும் முகரும் நுகர்ச்சியும் கேட்கும் நிலையும் பெறாத இப் பொறிகளால் பயன் உண்டோ? இல்லை அல்லவா? இது போலவே எண் குணத்தான் தாளை வணங்காத்தலையாலும், ஏனைய உறுப்பாலும் பயன் இன்று என்க. எனவே நாம் பிறவியாகிய கடலை நீந்தி வீட்டின்பமாகிய கரையை அணுக வேண்டுமானால் இறைவனது திருவடிகளாகிய புணையைப் பற்றியே நீரவேண்டும். இதனினும் வேறு வழி இல்லை. இதுவே நாம் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும்.

## 2. வான் சிறப்பு

வான் என்றது ஈண்டு வானின்று பொழியப் பெறும் மழையே ஆகும். வான் சிறப்பு எனவே கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு நன்மையாகிய அறம், பொருள், இன்பங்களும் நடத்தற்குக் காரணமாகிய மழையினது சிறப்பு என்பது பெறப்படுகிறது.

மழையினைத் தேவாமுதம் என்று கூறினும் மிகையாகாது. தேவாமுதம் சாவா மருந்தாகும். இம் மழைப் பொழிவால் உலகம் நிலைபெற்று வருதலாம், அதனை அமிழ்தும் என்று கூறாது என்னவாகக் கூறுவது? உலகம் நிலை பெறுகிறது எனவே மக்களும் பிறவி எடுத்து எக்காலத்தும் சாவாது நிலை பெற்று வருவதாகும். மழையாகிய பொருளுக்கு ஏனைய பொருளுக்கு இல்லாத ஒரு பெருமையும் உண்டு. ஏனைய பொருள்கள் உணவுப் பொருளை உண்டு பண்ணுது. தாமும் உண் பொருளாக இருக்கமாட்டா. இரண்டில் ஒன்றே செய்ய வல்லவை.

ஆனால் மழையோ எனில், உண்கின்றவர்களுக்கு நல்ல உணவுப் பொருள்களை உண்டு பண்ணி, அவற்றை உண்கின்றவர்களுக்குத் தானும் உணவாய் நின்று உதவ வல்லது. அதாவது பருகும் நீராக நின்று பயன் தருவது. எனவே மழை உயிர்களின் பசியையும், நீர் வேட்கையையும் நீக்க வல்லது. இத்தகைய மழை விண்ணில் இருந்து பொழிதலைச் செய்யாமல் தவறி விடுமானால், மக்கள் யாவரும், பசியால் வாடவேண்டியவர்களே. ஆகாயத்தினின்று பெறும் நீரே உயிர்கட்குத் தேவையானது. உலகைச் சுற்றிக் கடல் நீர் இருந்தும் பயன் இல்லை. ஆகையால் மழையில்லையாயின் உயிர்கள் பசியால் இறக்க வேண்டியவைகளே. உழவர்கட்கு உயிராய் இருப்பதும் மழை. மழை பெய்யத் தவறின் ஏரினால் உழுதலை உழவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள். அவர்கள் உழவில்லையாயின் உணவுப் பொருள்கள் இல்லையாகிவிடும்.

மழைக்கு மற்றும் ஓர் ஆற்றல் உண்டு. தான் பெய்யாமல் உலகைக் கெடுக்கும் ஆற்றலும் பெற்றது. அப்படிப் பெய்யாமல் கெட்ட உலகைக் கெடா வண்ணம் மழையைப் பெய்து காக்கவும் வல்லது மழையே ஆகும். மழை இல்லையாயின் புல்கூடத் தலைகாட்டாது என்றால் வேறு என்ன கூறுவது? புல் ஓர் அறிவு உயிர். அதாவது ஸ்பரிச உணர்வாகிய மெய் அறிவு ஒன்றே உடையது. அதுவே தலைகாட்டாது எனில் ஏனைய அறிவுகளைப் பெற்ற உயிர்கள் எப்படி வாழ இயலும்? மழைக்கு இருக்கும் வன்மையே வன்மை. அவ் வன்மையை எண்ணும்போது, நகைக்காமல் இருக்க இயலவில்லை. கடல் எத்துணைப் பரப்புடையது, அப் பரப்புக்கேற்ற நீரையும் கொண்டதல்லவா? கடலுக்கு நீர் இல்லாக் குறையுண்டோ? அக்

கடவுளர்க்கும் மழை வேண்டற்பாலது என்றால் யார்தாம் கவலைப்படாமல் இருப்பர்? மேகமானது அதன் நீரை முகந்து மீண்டும் அதனிடத்திலேயே பொழியாமல் போனால் கடல் தன் தன்மையில் குறைந்தே போகும். கடல் தன்னீர்மை குறைதல் என்பது நீர் இன்மையால் குறைதல் என்பது அன்று. தன்னிடம் உள்ள முத்து, பவழம், மீன், ஆமை முதலியன பிறவா என்பதாம். மழையின்றேல் கடலின் நிலை இவ்வாறு ஆகிறது. தேவர்கட்கும் மழை வேண்டற்பாலது. மழை இல்லையாயின் மக்களால் செய்யப்படும் விழாவும் பூசனையும் இல்லாமற் போகும். மேலும் தானமும் தவமும் ஆகிய இரண்டும் உலகில் நிலை நிற்கமாட்டா. தானமாவது தரும வழியில் தேடிய பொருளைத் தகுதி உடையவர்களுக்கு அன்புடன் கொடுத்து உதவுதல். தவமாவது மனம் பொறிவழி போகாமல் நிற்றல் பொருட்டு விரதங்களால் உண்டி சுருங்குதல் முதலியவற்றை மேற்கொள்ளுதல். எனவே எவ்வகை மேம்பட்டவர்கட்கும் நீரை இன்றி உலகியல் அமையாது. அதாவது பொருள் இன்பங்கள் சிறப்புற நடவா என்பதாம்.

## 3. நீத்தார் பெருமை

நீத்தார் ஆவார் முற்றும் துறந்த முனிவரே ஆவார். இவர்களே அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய பொருள்களை உள்ளபடி உணர்த்த வல்லவர்கள். அவர்களுடைய பெருமையே ஈண்டு நீத்தார் பெருமை எனப்பட்டது.

நீத்தார் பெருமையை எல்லா நூல்களும் சிறப்பித்தே கூறும். அப்படிக் கூறும்போது சிறந்த பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே சிறந்த பொருள் என்று நூல்களின் துணிபும் என்றும் விதந்து கூறும். ஆனால் அந் நீத்தார்

தாம் தம் ஒழுக்கத்தின் கண் நின்று துறந்தவராக இருத்தல் வேண்டும். ஒழுக்கத்தின் கண் நின்று துறத்தல் என்பது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களைத் தவறாது ஒழுகுதலாம். இப்படி ஒழுகுவதால் அறம் வளரும். அறம் வளர வளரப் பாவம் தேயும். பாவம் தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்க நித்தியம் இன்னது அனித்தியம் இன்னது என்பது அறியப்பட்டு அவற்றின் வேற்றுமையும் நன்கு புலனாகும். இதனால் அழிதற்குரிய பொருள்கள் இன்ன என அறிந்த பின் இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்பும் பிறவித் துன்பங்களும் இன்ன என ஏற்படும். இப்படிப்பட்ட உணர்ச்சி மோட்ச இன்பத்திற்கு அவாவை எழுப்பும் அல்லவா? இந்த அவா பிறவிக்குக் காரணமான பயனற்ற முயற்சிகளை எல்லாம் ஒதுக்கி மோட்ச வீட்டிற்குக் காரணமான யோக முயற்சியில் மனம் செல்லும் இந்த முயற்சியால் மெய் உணர்வு பிறந்து எனது என்னும் புறப்பற்றும் யான் என்னும் அகப்பற்றும் ஏற்படும். இவ்விரண்டு பற்றையும் வெறுத்து விடுதலே துறந்தார்க்குரிய ஒழுக்கமாகும். இதுவே ஒழுக்கத்தின் கண் நின்று துறத்தல் ஆகும். இவ்வாறு துறத்தல் குறிப்பிட்ட ஒரு சமய நூல் துணிபெனக் கருதுதல் வேண்டா. எல்லாச் சமயங்களின் கருத்தும் இதுவே. இவ்வாறு ஒழுக்கத்தின் கண் நின்று துறந்தவர் பெருமையை ஓர் அளவுக்கு உள்படுத்திச் சொல்ல முடியுமோ முடியாது. உலகில் இதுகாறும் எத்துணைபேர் மடிந்திருப்பார்கள் என்பதைக் கணக்கிட முடியுமோ முடியாது. அது போலவே துறந்தார் பெருமையும் அளவுபடுத்திக் கூற இயலாது.

இவ்வுலகில் பிறப்பின் தன்மை இன்னது மோட்சத்தின் இயல்பு இன்னது என்பதைத் தம் நுண்ணறிவால்

உணர்ந்து பிறவி அறவேண்டும் என்பதற்காகவே இப்பிறவியி லேயே துறவறத்தை மேற்கொண்டவர்களது பெருமையே உலகில் உயர்ந்ததாகும். இதனால் நாம் உணர்வது யாது? தம் ஆணைச் சக்கரம் செலுத்தி அரசு ஆள்கின்ற அரசர்கள் பெருமையும் இவர்கள் பெருமை முன் நில்லாமல் இவர்கள் பெருமையே உலகில் சிறந்து காணப்படும் என்பது தெரிகிறதன்றோ? ஆகவே எல்லாப் பெருமையிலும் நீத்தார் பெருமையே தலை சிறந்தது. துறந்தவர்கள் திண்மை என்னும் அங்குசத்தால் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் யானைகளை அடக்குவாராயின் அவர்கள் எல்லா நிலத்திலும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஒரு விதையாவர். இவர்கள் அம் மோட்ச உலகில் நின்று முளைப்பவர். இவ்வுலகில் பிறந்து இறந்து உழலும் இயல்பினர் அல்லர். இவ்வாறு ஐம்புலன்களையும் அடக்கின துறவிகளுடைய ஆற்றற்குச் சான்று காட்ட வேண்டுமானால் இந்திரனையே காட்டலாம். இந்திரன் சகல போக போக்கியங்களை அனுபவிப்பவன். தேவர்கட்கு எல்லாம் தலைவன். அப்படி அவனே முனிவர்கள் பலரின் சாபங்களுக்கு ஆளாகின்றார் அல்லவா? முனிவர்களின் உதவியை நாடவேண்டியவனாய் இருக்கின்றான் அல்லவா? ஒரு முறை கௌதம முனிவருடைய சாபத்திற்கு ஆளானான் அல்லவா? விருத்திராசுரனைக் கொல்ல ததீசி முனிவர் முதுகெலும்பை வச்சிராயுதமாகக் கொண்டு, அவ்வசுரனைக் கொன்றான் அல்லவா? அதனைக் கொண்டு, மலைகளின் சிறகுகளை அரிந்தான் அல்லவா? அகத்தியரை வேண்டிக் கடலில் ஒளிந்த விருத்திராசுரனைக் காணக் கடலைக் குடித்து நீர் வற்ற வேண்டினான் அல்லவா? இவை மட்டுமா? இந்திரன் முனிவர்களை கண்டாலும் எண்ணினாலும் அஞ்சு

தற்குக் காரணம். முனிவர்கள் நில உலகில் தவம் செய்கின்றார்கள் என்றால், அவன் பீடத்தின் கீழ் இடப்பட்ட கம்பளம் நடுங்கும். அது நடுங்க ஆதனமும் நடுங்கும். அப்போது அவன் அடையும் பீதியை அளவிட்டுக் கூற முடியாது. ஆகவே துறந்தவர்களின் பெருமைக்கு இந்திரன் தகுந்த சாட்சி என்று கூறுவதில் தவறில்லை. முனிவர்களே எல்லா வகையிலும் மிக மிகப் பெரியவர்கள். ஏனெனில், அவர்களே செயற்கரிய செயல்களைச் செய்பவர்கள். செயற்கரிய செயல்களைச் செய்யாதவர்கள் சிறியவர்களே. செயற்கரிய செயல்கள் என்று இங்குக் குறிப்பிடப்பட்டவை, மனத்தை, அது சென்ற வழி செல்ல ஒட்டாமல் அடக்குதலே யாகும். மேலும் இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், சமாதி முதலான எண் வகை யோக உறுப்புக்களில் ஈடுபடுதல் ஆகும். இயமமாவது பொய், கொலை, காமம், பொருள்மேல் விருப்பம், ஆகியவற்றினைச் செய்யாமை, பெற்றது கொண்டு மகிழ்தல், கற்க வேண்டியதைக் கற்றல்; பரிசுத்தம் உடலினை விரதத்தால் வாட்டுதல், பூசனை, ஆசிரியர்க்குத் தட்சணை ஈதல் முதலியன மேற்கொண்டு ஒழுகுதல், நியமம் ஆகும். நிற்றல், இருத்தல், கிடத்தல் நடத்தல், முதலியன செய்தல் ஆசனம் ஆகும். பிராணயாமம் செய்தல் வளிநிலை எனப்படும். ஐம்பொறிகளைப் புல வழியே செல்ல ஒட்டாமை தொகை நிலையாகும் யோகநிலையில் வீற்றிருந்து தொகை நிலையாகும். மனநிலையினை ஒரு வழி நிறுத்தல் பொறையாகும். தான் பிறன் ஆகா நிலைமையுடையது சமாதியாகும். நீரில் பல கால் மூழ்கலும், நிலத்தில் இருந்தும், தோல் உடுத்தும், சடை தாழவிட்டும், எரியோம்பியும், ஊரினைச் சாராது

வாழ்க்கையும், காட்டகத்தே இருந்தும், கடவுள் விருந்தோம்பலும் ஆகிய அரிய செயல்களைச் செய்தலும் அவர்கள் இயல்பு. சிறியர் ஆவார் மனத்தை வேண்டியவாறே செலுத்துவர். பிறர் பொருளை விரும்புவர். எதற்கும் வெகுளி கொள்வர். உலகமே துறந்தவர்களின் அறிவின் கண்ணே அமைந்ததாகும். இத் துறவிகள் சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகிய இவ்வைந்தின் கூறுபாட்டை நன்கு உணர்ந்தவர்கள். இவர்களது பெருமையை இவ்வுலகமானது, இம் முனிவர்கள் தம் ஆணையாகச் சொன்ன மந்திர மொழிகளால் நன்கு உணர்த்தி நிற்கும். மந்திர மொழியைக் கூற வல்லவர்கள் இவர்களாயின், இவர்கள் வெகுண்டு கூறினும் அருளுடன் கூறினும் அதன் பயன் உடனே தெரிய வல்லதாகும். ஆகவே இவர்கள் நிறைமொழி மாந்தர்களேயாவார். இவர்கள் நற்குணம் என்னும் மலையின் முடிவில் நின்றவர்கள். அதாவது துறவு, மெய் உணர்வு, ஆசை இன்மையாகிய நற்குணங்களில் முடிவாய் விளங்குபவர் என்க. இப்படிப்பட்டவரிடம் மக்களும் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறின்றி நடப்பாராயின், அவர்களின் கோபத்திற்கு ஆளாகவும் நேரிடும். அப்போது அக் கோபத்தினைத் தடுத்துக்கொள்ள இயலாது. இதனால் இவர்கள் கோபம் கொண்டவர்கள் என்று எண்ணற்க.

இவர்கள் எவ்வுயிரிடத்தும் அருள் காட்ட வல்லவர்கள். அதனால் இவர்களை அந்தணர் என்னும் சொல்லாலேயே வள்ளுவனார் அழைக்கின்றனர். அதாவது அழகிய தட்பத்தினை (அருளினை) உடையவர் என்பதாம். இதன் மூலமேனும் அந்தணர் யாவர் என்பதை உணர்கிறோமாக.

## 4. அறன் வலியுறுத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட முனிவர்களால் உணர்த்தப் பட்டவை அறம், பொருள், இன்பம் என்பன. அவற்றுள் அறம் என்பது இம்மை இன்பமும், மறுமை போக மும், வீடு பேறும் ஈயவல்லது. ஆனால் பொருளும் இன்பமும் இம் மூன்று பேற்றையும் தரவல்லவை அல்ல. ஆகவே அறன் இவ்விரண்டினும் வலியுடையதாகும்.

அறம் வீடு பேற்றையும் தரவல்லது, துறக்கம் முதலிய செல்வத்தையும் தரவல்லது. ஆதலின் உயிர்க்கு உயர்வைத் தருவது அறத்தைவிடச் சிறந்த பொருள் வேறு எதுவும் இல்லை. இத்தகைய அறத்தினை மறக்கலாமோ? மறந்தால் கெடுதி நேரும் என்பதைச் சொல்ல வேண்டுமோ? ஆகவே, அறத்தைத் தம் தம் இயலுக்கு ஏற்ப அதனை எவ் விடத்தும் செய்துகொண்டே வருதல் வேண்டும். ஒரு சிறிதும் செய்யாமலொருவி இருத்தல் கூடாது. இல்லற த்தை மேற்கொண்டவர் செய்யும் அறம் தம் தம் பொருளின் அளவுக்கு ஏற்பவும் துறவறத்தில் ஈடு பட்டவர் புரியும் அறம் தம் தம் சரீர நிலைக்கு ஏற்ப வும் அறத்தினைச் செய்தல் வேண்டும். இதனை மனம் வாக்குக் காயம் முதலிய திரிகரணங்களால் நற்சிந்தையின் மூலமும், நற்சொல்லின் மூலமும், நற் செயலின் மூலமும் இயற்றலாம்.

அறமாவது யாது என்பதை உணராதவர்கள் பலர் உளர். அறமாவது மனத்தில் கள்ளம் கபடு அற்று விளங்கு வதே ஆகும். இதுவே அறம். ஏனையவை யாவும் உண்மை யில் ஆரவாரத் தன்மையுடையவை. அவை பயனும் கொடாதவை. பொறாமை, பேர் ஆசை, கோபம், தீச்சொல்

முதலிய குணங்களை விட்டு விளங்கினலும் அறம் என்று சொல்லப்படும்.

இத்தகைய அறத்தினை இப்போதே மேற்கொள்ளுதல் வேண்டுமோ, நாம் இளையர் தாமே இறக்கும் தருவாயில் பார்த்துக் கொள்வோம் என்று சும்மா இருந்து விடுதல் கூடாது. அதனை அவ்வப்பொழுதே மேற்கொண்டு நடத்தி வருதல் வேண்டும், அப்படி நடத்தி வந்தால், அவ்வறம் நாம் இறக்கும் தருவாயில், நமக்கு அழியாத துணைப் பொருளாக இருந்து உதவி புரியும். இவ்வறம் தொடர்ந்து அடுத்த உடம்பு எடுக்கும்போது உதவி புரியும். இத்தகைய அறத்தின் சிறப்பினை நீங்கள் நேர்முகமாக உணர வேண்டுமாயின், பல்லக்கில் ஏறிச் செல்பவனையும், அப் பல்லக்கினைச் சுமந்து செல்பவர்களையும்கண்டே தெரிந்துகொள்ளலாம். இவர்கள் யாவர்? மக்கள் பிறப்பினர்கள் தாமே. அவ்வாறிருக்க ஒருவன் அமர்ந்து செல்ல, மற்றவர்கள் சுமந்து செல்வானேன்? அமர்ந்தவன் முற்பிறப்பில் அறத்தினைச் செய்து இந் நிலையினை அடைந்தவன் என்பதை சுமந்து செல்பவர்கள் அது செய்யாது வாளா இருந்தவர்கள் என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இந்த அறச் செயல் ஒரு நாளும் விடாமல் தொடர்ந்து செய்யப்பட்டு வருமாயின் பிறப்பையும் போக்கும் திறமை படைத்ததாகும். பிறப்புத்தரும் துவாரத்தினை அடைக்கும் கல் போன்றது. பிறவிக்குக் காரணங்களாக இருப்பவை அறியாமை, அகங்காரம், ஆசை, விருப்பு, வெறுப்பு என்பன இவற்றையே வட நூலார் பஞ்சகிலேசம் என்பர். பிறப்பு நீங்கி வீடு பெற அறத்தினைச் செய்ய வேண்டாவோ? ஆகவே அறத்தினால் தான் இன்பம் வரும். அறத்தால் அன்றி ஏனையவற்றால் வருவன இன்பமாயினும் பின்

ளுல் துன்பம் தருவனவே யாகும். புகழையும் சிதைக்கக் கூடியனவும் ஆகும். இதனுல் அறத்தைச் செய்பவர் இம்மையில் இன்பமும் மறுமையில் புகழும் பெறுவர் என்க. மேலும் ஒருவன் செய்ய வேண்டுவது அறம் என்பதையும், ஒழிக்க வேண்டுவது தீவினையையே என்பதையும் சிந்தனையில் கொள்ளுதல் வேண்டும் அல்லவோ?

# 2. இல்லற இயல்பு

---

## இல்வாழ்க்கை

உலகில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய வாழ்வு இரண்டு. ஒன்று இல்லற வாழ்வு. மற்றொன்று துறவற வாழ்வு. இல்லற வாழ்வே இங்குக் குடும்பம் எனப்படும். இல்லறத்தில் வாழ்பவர் ஆசிரியரிடத்தில் அடங்கி ஒடுங்கிக் கல்வி பயின்று, நோன்புகளை மேற்கொண்டு நடக்கும் மாணாக்க நிலையில் உள்ளவனையும் நில உலகில் அநுபவிக்க வேண்டிய இன்பங்களை நன்கு அநுபவித்துத் தான் மேற்கொள்ளும் தவ ஒழுக்கத்திற்குத் துணையாய் இருக்கும் பொருட்டுத் தன் மனையாளையும் உடன் அழைத்துச் சென்று தவம் புரிபவனையும், உலகப்பற்றை அறவே ஒழித்து யோகப் பயிற்சியில் ஈடுபட்டவர்களையும் அவர் அவர்கள் நெறியில் தவறாதிருக்கத் துணை செய்யும் கடப்பாடுடையவராவார். இல்லறத்தார் இவர்கட்குச் செய்யும் கடப்பாடு யாதெனில் இவர்கள் பசி, நோய் குளிர் முதலியவற்றால் நலிவுறாதிருக்க உணவும், மருந்தும், வாழ இடமும் கொடுத்து உதவுதலாகும்.

பாரத இவ்வுலகில் அநாதைகளாக இறப்பவர்களும் உண்டு. அவர்களை அடக்கம் செய்யவோ, ஈமக்கடன் ஆற்றவோ எவரும் இல்லாமல் இருக்கலாம். அப்படிப் பட்டவர்களையும் அடக்கம் செய்து ஈமக்கடன்களைப் புரிய

வேண்டிய பொறுப்பு இல்லறத்தாரைச் சார்ந்ததே ஆகும். சில காலம் சிலரை ஆதரித்து வந்தவர் திடுமெனக் கைவிடவும் நேரும். அப்பொழுது ஆதரிக்கப்பட்டவர் அல்லல்பட நேரிடும். அந்தக் காலத்திலும் அப்படித் திடுமெனக் கைவிடப்பட்டவர்களையும் ஆதரிக்க வேண்டியது இல்லறத்தாரே ஆவார். உணவின்றி வருந்தும் ஏழை எளியவர்கட்கு உணவும் கொடுத்து உதவுபவரும் இல்லறத்தாரே என்க.

இல்லற நெறியினர் பிதுர்க்கடன் புரிவது இன்றியமையாதது. பிதிர்க்கள் என்பவர் பிரமனால் படைக்கப்பட்ட ஒருவகைத் தெய்வ இனத்தார் ஆவார். இவர்கள் இருப்பிடம் தென் திசை என்பது அறிஞர் துணிபு. இது கருதியே வள்ளுவரும் இவர்களைத் தென்புலத்தார் என்றே குறிப்பிட்டுள்ளார். தெய்வத்தையும் மறத்தல் கூடாது. முன்பின் தெரியாமல் புதிதாக வந்து உதவியை நாடியவர்கட்கும் உதவுதல் வேண்டும். உறவினர்கள் ஏழைகளாயின் அவர்களது ஏழ்மையை அகற்றி ஆதரவு காட்ட வேண்டும் தன்மையும் யாதோர் இடையூற்றிற்கும் இடந்தருதல் இன்றிக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். தம்மையும் காத்துக் கொண்டால்தானே பிறரையும் காக்க இயலும்.

இல்லறத்தார் பொறுப்பு மிகுதியாதலின் பொருள் தேடுதல் அவர்கட்கு இன்றியமையாததாகும். ஆனால் அப்படிப் பொருளைத் தேடும் காலத்தும் பழிப்புக்கு இடம் தரும் வழிகளில் பொருளைத் தேடாமல், நல்வழியில் அப்பொருளைத் திரட்டித் தம் உதவி வேண்டி நின்ற முன் சொல்லப்பட்டவர்கட்கு உதவி புரிதல் நலம் தரும் செயலாகும். இப்படிப் பழிக்கு அஞ்சிப் பகுத்து உண்டுவரும் இல்லறத்தாரின் வாழ்வு எக்காலத்தும் அழியக் கூடிய

நன்று. வாழையடி வாழையாக வளரவல்லது. இல்வாழ்க்கையில் பகுத்து உண்ணுதல் மட்டும் போதாது. இல்லறத்தார் தன் வாழ்க்கைத் துணைவியரிடத்து அன்பு உடையவராய் இருப்பதோடு பிறர்க்குப் பகுத்துக் கொடுத்தலில் அறப் பண்பு உடையவராயும் திகழ்தல் வேண்டும். இவ்விரண்டு அருங் குணங்கள் இல்லறத்தாருக்குப் பண்புடைமையும் பயனுடைமையும் ஆகும். இல்லறத்தார் தம் இல்லாளிடத்தில் அன்பு காட்டாதபோது இல்லறம் இனிது நடவாது. ஆகவே அன்புடைமை அவர்களது இல்வாழ்விற்குப் பண்புடைமை ஆயிற்று. இதனால்தான் அறனுடைமை பயனுடைமை ஆயிற்று.

இங்ஙனம் கூறப்பட்ட முறைப்படி இல்லறத்தை இனிதுற நடத்தினால் புறத்துறையாகிய வனத்தில் சென்று தவம் புரியவேண்டிய நியதியும் தேவை இல்லை. இவர்கள் ஐம்புலன்களின் சேட்டைகளை ஒடுக்க முயல்பவர்களைவிடத் தலைசிறந்தவர்கள் என்றும் கருதப்படுவர். ஆனால் இவ்வில்லறத்தார் இவ்வில்லறத்தின் இயல்போடு கூடி வாழ்பவராக இருக்க வேண்டும். இல்லறத்தார் தவம் செய்பவர்களை அத் தவத்தின் வழி ஒழுகுமாறு அவர்கட்கு வேண்டுவன உதவவேண்டும். அப்படி உதவுதலுடன் தாமும் தம் கடமைகளினின்று தவறாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்தத் தன்மைகள் இவ்வில்லறத்தாரிடம் காணப்படுமானால் தவம் செய்வார் நிலையினும் உயர் குணம் உடையவர் என்று போற்றப்படுவார்.

இன்னோர் அன்ன சிறப்பு இயல்புகள் இல்லறவாழ்வில் நிலைத்து இருத்தலின், அறன் என்று கூறப்படுவது இல் வாழ்க்கையே அன்றி வேறன்று. ஆனால், துறவறம் அறமாகாதோ என்று சிலர் சந்தேகிக்கலாம். அதுவும் சிறந்ததே

ஆகும். ஆனால் அதனைப் பிறர் பழிப்புக்கு இடம் தராத வாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இல்லறத்தைப் போன்ற நன்மையை அத் துறவறம் தரவல்லதாகும்.

துறவறம் பிறர் பழிக்கு ஆளாகாமல் இருக்கவேண்டும் என்பது, துறவறத்தார் கூடா ஒழுக்கத்தை மேற்கொள்ளா மல் இருக்கவேண்டும் என்பதேயாகும். இதனையே மறை முகமாகப் பிறர் பழிக்கு ஆளாகாமல் என கூறியவாறு மிற்று மேலும் துறவறத்தில் மற்றொரு துன்பமும் இருக் கின்றது. அதாவது துறவறத்தார் ஐம்புலன்களையும் அவை செல்லும் வழியில் செலுத்த விடாமல் அடக்கி ஆள வேண்டும். ஆனால் இல்லறத்தானுக்கு இந்தத் தொந்தரவு இல்லை. ஐம்புலன்களால் அனுபவிக்க வேண்டியவற்றை நன்கு அனுபவிக்கலாம். கண்களால் இனிய காட்சியைக் காணலாம், காதுகளால் இனிய கீதங்களைக் கேட்கலாம், மூக்கினால் நன் மணத்தை முகர்ந்து இன்புறலாம், வாயினால் நன்கு சுவைத்து உண்ணலாம், உடம்பினால் மக்களைத் தழுவி இன்புறலாம். இந்த ஐம்புல நுகர்ச்சிகளை இல்லறத் தானுக்கு விலக்காக நம் முன்னோர் வைத்திலர்.

ஆகவே இம் முறையில் இவ்வுலகில் வாழவேண்டிய முறையில் ஓர் இல்லறத்தான் வாழ்ந்து வருவானானால், அவன் நிலவுலக வாழ்க்கை உடையவனாயினும் தெய்வங்க ளுள் ஒருவன் என்றே கருதப்படும் சிறப்புடையவனாவான்.

## 2. வாழ்க்கைத் துணை நலம்

இல் வாழ்க்கைக்கென இயம்பப்பட்ட முறைகள் செவ்வனே நடை முறையில் அமைய வேண்டுமாயின், அதற்குப் பெருந் துணையாக அமைபவள் மனையாள்

ஆவாள். இது பற்றியே அவளை வள்ளுவர் வாழ்க்கைத் துணை என்ற சீரிய பெயரால் அழைப்பாராயினர்.

இவ்வாழ்க்கைத் துணைவி மனை அறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாக இருத்தல் வேண்டும். தன்னை மணந்தவனுடைய வருவாய்க்கு ஏற்ற வாழ்க்கையை நடத்துபவளாய் அமைதல் வேண்டும். இவள் பால் அமையவேண்டிய நற்குணங்கள் துறந்தாரைப் போற்றுதலும் விருந்தினரை உபசரித்தலும் வறியவர்களுக்கு உதவி அவர்கள் இடத்து அருளுடையவளாய் அமைதலும் ஆகும். நற்செய்கைகள் எனப்படுவன வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்தலும், சமையல் தொழிலில் வல்லவளாய் இருத்தலும், உலக நடையை அறிந்து நடத்தலும் என்க. இன்னோரன்ன இயல்புகள் அமையப் பெறாத இல்லக்கிழத்தி ஏனைய இயல்புகளான அழகுடைமை, செல்வக் குடிப்பிறப்பு முதலியன அமைந்தவளாய் இருப்பினும் அவற்றால் பயன் இல்லையாம். இவள் மேற்கொண்ட வாழ்க்கை சிறப்புடையதாகாது. இவள் மட்டும் முன்னர்க் கூறப்பட்ட நற்குண நற்செய்கைகள் மட்டும் உடையவளாய்க் காணப்படின், இவள் புக்க வீடு எல்லா நலன்களையும் பெற்ற இல்லமாகத் திகழும். யாதொரு குறையும் அற்றதாக அமையும். இவள் அக்குண நலங்களைப் பெற்றிலள் என்றால் அவ்வில்லம் எத்துணை சிறப்புடையதாயினும் சிறப்புக்களைப் பெறாத இல்லத்திற்கே ஒப்பானது.

நற்குண நற்செய்கைகளுடன் இல்வாழ்வாளிடத்துக் கற்பென்னும் கலங்கா நிலைமையாகிய குணமும் இருத்தல் இன்றியமையாதது. இத்தகைய கற்புடையவளை ஒருவன் மனைவியாகப் பெறும் பேற்றைப் பெறுவானாயின், அவன்

பிற ஒன்றைப் பெற வேண்டும் என்னும் நியதியே இல்லா மல் போகும். கற்புடைய மாதர் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் பலவாகும். அவற்றுள் ஒன்றாகத் தாம் மணந்த கணவன்மாரைத் தெய்வமெனத் தொழுதலாகும். இப்படிக் கணவனையே கடவுளாகத் தொழும் கற்புடைய மங்கை வேறு தெய்வத்தையும் தொழமாட்டாள். இப்படித் தொழாதது தவறும் அன்று. எந்த மாது தன் கணவனையே தெய்வமாகத் தொழுகின்றாளோ அவள் மழை பெய்யாமல் வறட்சி மிகுந்த காலத்திலும், மழையே பெய்க என மேகக் கூட்டங்கட்குக் கட்டளை இடுவாளாயின், மழையும் தடை யின்றிப் பொழிந்தே தீரும். இவளுக்குத் தெய்வமே ஏவல் செய்யக் காத்திருக்கும்.

பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவரும் தான் வயது வந்து ஒரு மணவாளனை மணந்த பின், தன்னைக் கற்பி னின்று தவறாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்; தன்னை மணம் செய்து கொண்டவனை உண்டி முதலிய வற்றைப் பக்குவமாக சமைத்துக் கணவனை உண்பித்து அவனைப் போற்றி வருதல் வேண்டும். இப்படி இவள் ஒழுகத் தொடங்கினால் இவளுக்கும் இவளை மணந்த மண வாளனுக்கும் புகழ் ஏற்பட ஏதுவாகும். இந்தப் புகழ் நிலைக்குமாறு பார்த்துக்கொண்டு சோர்வு தட்டாமல் வாழ்க் கையை நடத்தவேண்டும்; மறதி என்பதை அறவே ஒழிக்க வேண்டும்.

சிலர், மாதர்களது கற்புக் கெடாமல் இருக்க வேண்டு மாயின், அவர்களைக் காவல் காத்து வருதல் இன்றியமை யாதது என்று கருதுவர். அப்படிக் கருதுதல் கூடாது. அப்படி அம் மாதர்களை மதில் காவலாலும் வாயில் காவலா லும் காத்தல் முறையன்று. அது காவலும் ஆகாது. மாதர்

களே தம் கற்பொழுக்கம் கெடாதவாறு பார்த்துக் கொள்ளுதல் முறையாகும். இப் பெண்டிர் தம் கணவரை வழிபடுதலைப் பெறுவராயின் அவர்கள் தேவர்கள் வாழும் வானின் கண் சிறந்த புகழைப் பெறுவர். அதாவது இவர் களைத் தேவர்களே போற்றுதல் புரிவர். இத்தகைய கற்புடைய மாதர்களை மனைவியாகக் கொண்டவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? இவர்கள் ஏறு போன்ற பீடு நடையைக் கற்புடைய மாதரானை மணந்தபோதுதான் பெற முடியும். அப்படிப் பெறாதபோது இகழ்வையே அடைவர்.

இப்படி இல்லறத்தை நல்லறமாக வாழும் இயல்புடையவர் வாழ்க்கை மேலும் சிறப்புறும் காலம் நற்பிள்ளைப் பேற்றைப் பெறும் காலமே ஆகும். அதுவே மனையாள் நற்குண நற்செய்கை பெற்ற காலத்து நல்ல அணிகலமாக அமைய வல்லது.

## 3. புதல்வரைப் பெறுதல்

இல்லறத்தானுக்கு ஏற்பட்டுள்ள கடமைகள் பலவாகும். அவற்றுள் முன்பே சில கூறப்பட்டன. அவற்றை மீண்டும் விளக்கிக் கூற முற்படின் முனிவர் கடன், தேவர் கடன், தென் புலத்தார் கடன் எனக் கூறி நம் நினைவிற் கொணரலாம். இக் கடன்களை இல்லறத்தான் முனிவர்களுக்குரிய கடனை முனிவரிடம் சென்று கேட்கும் கேள்வியாலும், தேவர்கட்கு ஆற்றவேண்டிய கடனை யாகம் முதலியவற்றாலும், தென் புலத்தாருக்குச் செய்ய வேண்டிய கடனை மக்களைப் பெறுதலாலும் முடித்துக் கொள்ளுதல் முறை என்பது நம் முன்னோர் கொண்ட முடிபாகும். இவற்றுள் இறுதியில் கூறப்பட்ட பிதுர்க் கடனை முடிக்கும் பொருட்டு, நன் மக்களைப் பெறவேண்டியது இல்லறத்

தானது இன்றியமையாக் கடனாகும். இதனால்தான் வள்ளுவர் தாம் அறிந்த பலவற்றின் அறிவு நிறைந்த மக்களைப் பெறுதலை விட நல்ல பேறாகத் தாம் வேறு எதையும் கண்டறியவில்லை என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றனர். ஆகவே, ஒருவன் பெறவேண்டிய பேறு அறிவுடைய பிள்ளையைப் பெறுதலே என்றும் வற்புறுத்திக் கூறுவாராயினர். இத்தகைய அறிவுடை மக்களைப் பெறுவதால் யாது பயன் என்று சிலர் வினவலாம். இத்தகைய பிள்ளையைப் பெற்றவர் ஒரு வேளை வினை காரணமாக தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் முதலிய பிறவிகளைப் பெறினும், அப் பிறவிகள் தோறும் துன்பத்தால் பாதிக்கப்பட மாட்டார்கள். இவர்கட்குப் பிறக்கும் பிள்ளைகளும் அறிவு நிறைவுடையவர்களாக மட்டும் இராமல், பழி பாவங்கள் வருதற்குரிய செயல்களில் ஈடுபடாதவர்களாகவும் இருக்கவேண்டும். இந்தப் பேறுதானே சிறந்த பேறு. இப் பேற்றையே செல்வப் பேறு என்றும் கூறலாம். தம் மக்களையே தம் பொருள் என்று கூறுதற்கும் இவர்களே தகுதி வாய்ந்தவர்கள். இந்தப் பிள்ளைகள் சம்பாதிக்கும் காலத்துச் சம்பாதித்துத் தான தருமங்களைச் செய்துவரின், அதுவே பெற்றோர்கள் புண்ணியம் அடைதற்கும் ஏதுவாகும்.

குழந்தை இன்பமே சிறந்த இன்பம். குழந்தைகளை பெற்றோர் உண்ணும்போது தாமும் உடன் இருந்து அவர்கள் உண்ணும் உணவுடன் இருந்து தம் சிறு கைகளால் பிசைந்து அளைந்து துழாவிக் கூழாகக் குழம்பிக் காணப்பட்டாலும், அது குழந்தைகளின் தாமரைக் கைகளால் அளாவப்பட்டமையின் கிடைத்தற்கரிதான தேவாமுதத்தைப் போன்று சிறப்புடைய உணவாகும். இனிமையும்

பெற்றதாகும். இவர்கள் கைப்பட்ட உணவு அமுதம்போல் இன்பம் தருவது போலவே, இவர்கள் பேச்சைக் கேட்டலும் செவிக்கு இன்பம் தருவதாகும். இவர்கள் மெய்யைத் தழுவி இன்புறலும் உடற்கு உற்சாகம் ஊட்டுவதாகும். மழலைச் சொற்களை பெற்றோர்களை இன்பக் கடலில் ஆழச் செய்யும் என்றால், இவர்களை வயது வரப்பெற்றுக் கல்வி அறிவில் மீதூரப் பெற்றுக் கற்றோர் நிறைந்த அவைகளில் சொல்மாரி பொழிகையில் பேசும் பேச்சு மிக்க இன்பம் தாவல்லதாய் இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இத்தகைய இன்பம் தரும் சொல்லைவிட யாழ் இசையும் புல்லாங்குழல் இசையும் பெற்றோர்கட்கு இன்பம் பயவா. ஆனால் தம் குழந்தைகளின் மழலை மொழியைக் கேட்டுச் சுவைக்காதவர் மட்டும், குழல் ஓசை இனிமையுடையது யாழ் ஓசை இனிமையுடையது என்று கூறுவர்.

பெற்றோர் பிள்ளைகளைப் பெற்று விடுவதில் மட்டும் பயனில்லை. இவர்களை நல்ல முறையில் வளர்த்து கல்வி அறிவில் சிறப்புடையவர்களாகச் செய்து, கற்றவர் நிறைந்த சபையில் தம் மக்களை முன்னால் இருத்தற்குரிய முறையில் பயிற்று வருதல் வேண்டும். பொருள் சேர்க்கையை இவர்கட்குச் சேர்த்துக் கொடுக்காமல் கல்வி அறிவையே மிகுதிப் படுத்தி வருதல் பெற்றோர் கடமையாகும். செல்வப் பொருளால் பிள்ளைகள் துன்பமே அடைவர். தந்தைமார் கல்வி அறிவில் குறைவுடையவராயினும் தம் மக்களைத் தம்மினும் அறிவுடையவர்களாகச் செய்தலே கடமையாகக் கருத வேண்டும். இப்படித் தம் மக்களை அறிவுடையவர்களாகச் செய்வதால், ஏற்படும் இன்பம் பெற்றோரை மட்டும் சாராது. உலகில் காணும் எல்லா உயிர்கட்கும் இன்பம் தருவதாகும்.

இங்ஙனம் அறிவு மிக்க பிள்ளைகளாகத் துலங்குவார்களானால், இவர்கள் சான்றோர் என்னும் பெயரைப் பெற்று விளங்குவர். இப்படி உலகத்தார் சான்றோன் எனத் தன் மகனைப் புகழ்கின்றனர் என்று பெற்ற தாய் கேட்பாளேயானால் அவள் அடையும் மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ? அவளுக்கு அவனைப் பெற்ற காலத்தில் எழுந்த மகிழ்ச்சியினும் பெரு மகிழ்ச்சி ஏற்படும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வாறு பெற்றோர்கட்கு இன்பம் தரும் பிள்ளைகள் வளர்ந்து நல்ல பருவம் உற்று ஒழுகி வரும்போது, வெகு விழிப்புடன் நடந்து கொள்ளுதல் தலையாய கடமையாகும். இவர்கள் நடக்கையைக் கண்டு ஊரார் "இப் பிள்ளையைப் பெற பெற்றோர் எத்தகைய தவத்தைச் செய்தனரோ?" என்று கூறும் புகழ் மொழியைத் தேடித் தருபவராக இருக்கவேண்டும்.

## 4. அன்புடைமை

குடும்பத்தில் ஈடுபட்டவர் தம் இல்வாழ்வு இனிது நடக்கத் தனக்கு ஒரு வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொள்கின்றனர். அவளைப் பெற்றதன் பயனாக நற் பிள்ளைப் பேற்றையும் அடைகின்றனர். இதனை அடைந்ததோடு அல்லாமல் இவர்கள் இவர்களைச் சேர்ந்தவரிடத்தும், ஏனையவர்களிடமும் அன்புடையவராகவும் இருத்தல் வேண்டும். இல்லறம் இனிது நடக்கப் பிற உயிர்களிடத்தில் அருள் பிறக்க வேண்டும். இவ்வருள் பிறத்தற்கு அடிப்படையாக வேண்டற்பாலது அன்புடைமையே ஆகும். அன்பின் பயனே அருளுடைமை. இதனால்தான் "அருள் என்னும் அன்பு ஈன் குழவி" என்று ஆசிரியர் வள்ளுவர் பெருந்தகையாரும் அறிவுறுத்தியுள்ளார்.

"இவர் அன்புடையார் அன்பில்லார்" என்பதை எங்ஙனம் அறிவது என்று சிலர் ஐயுறலாம். இதனை அறிதல் மிக எளிது. அன்பினை அடைத்துவைக்க இயலாது. அதனை அடைத்தற்குரிய தாழ்ப்பாளும் இல்லை. இஃது எப்படியும் வெளிப்பட்டு விடும். தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பம் கண்ட அன்புடையார் கண் தன்னை அறியாமல் கண்ணீரைச் சிந்தி தமக்கு இருக்கும் அன்புடைமையை எல்லாரும் அறிய வெளிப்படுத்தி நிற்கும். இதனால் இவர் அன்புடையார் என்பதை நன்கு அறியலாம். அன்புடையவர் எதையும் தமக்குத் தமக்கு என்று வைத்துக்கொள்ள மாட்டார். சமயம் வந்தபோது தம் உடம்பையே தியாகம் செய்து தம் அன்புடைமையை நிலை நிறுத்துவர். இவர்கட்கு சான்றாகப் பலரைக் காட்டலாமாயினும், புறாவின் பொருட்டுத் தராசுத் தட்டில் ஏறித் தன்னையே ஈந்த சிபிச் சக்கரவர்த்தியையும், விருத்திராசுரனைக் கொல்ல இந்திரனுக்குத் தம் முதுகு எலும்பை ஈந்த ததீசி முனிவரையும் எடுத்து இயம்பலாம். இவர்கள் தம்மையே ஈந்த தனிப்பெரும் பண்பாளர். இவ்வன்புடைமையைப் பெறாதவர் எதையும் தமதாகவே கொண்டு பிறர்க்கு ஈயாத லோபிகளாக இலங்குவர்.

அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனாகவே மக்கள் உயிர்க்கு உடம்போடு கூடிய தொடர்ச்சியினைக் கருதவேண்டும். அன்பு காட்டுதற்கே உடம்பு உயிர் ஆகிய இரண்டும் தொடர்ந்து மக்கட் பிறவியை எடுத்தது என்பதை உணர்தல் வேண்டும். இங்ஙனம் காட்டப்படும் அன்பு, தன்னைத் தொடர்ந்தார்மாட்டு மட்டும் நின்றுவிடாமல் பிறர் மாட்டும் விருப்பமுடையவராதலைத் தரும் அவ்விருப்பம் பகை தவிர்த்த நட்புடைமை என்று கூறப்படும். அஃது அளவிறந்த சிறப்புடைமையையும் தரவல்லதாகும்.

உலகில் குடும்பஸ்தன் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பம் துகர்ந்து பின் துறவறத்தையும் அடைந்து பேர் இன்பத்தினையும் துய்க்கிறான். இப்படி இம்மை இன்பமும் மறுமை இன்பமும் எப்படி அடைகிறான்? இவன் இல்லறத்தில் கட்டுப்பட்டு இருக்கையில் அன்புடையவனாய் ஒழுகிய நெறியின் பயன் காரணமாகவே இவ்விருமை இன்பமும் பெறுகிறான் என்று சொல்வதில் ஐயம் இல்லை.

அன்பு அன்பு என்று கூறுகின்றீரே, இவ்வன்பு அறம் செய்வதற்கு மட்டும் துணை செய்யவல்லது, கொடுமையை நீக்குதற்கும் அது துணை செய்ய வல்லதோ என்று சிலர் வினவலாம். இவ்வினாவும் நல்ல வினாவே. இந்த ஐயம் நிகழ வேண்டா. அறத்திற்குத் துணையாகும் அன்பு மறத்திற்குத் துணையாகாமல் போகுமோ? போகாது. ஆகவே, பகைமையை ஒழிப்பதற்கும் அன்பே காரணம் என்பது உறுதியாகும். அன்பினை என்றும் மறவாமல் மேற்கொள்ளுதல் முறைமையாகும். எப்படி எலும்பு அற்ற புழுவினை வெயில் காய்ந்து கொன்று போடுமோ அதுபோல அறக்கடவுள் அன்பில்லாத உயிரை உலகில் நிலைக்கச் செய்யாமல் அழித்துப் போடும். அப்படி அழித்தல் தவறு அன்று அல்லவா? அன்பில்லாதவர் உலகில் வாழ்ந்து என்ன பயன்? வெயிலுக்கு இன்னார் இனியார் என்பது இல்லை. ஆகவே அது புழுவினைக் காய்ந்து கொல்ல வேண்டும் என்னும் நியதியும் உடையதன்று. ஆனல். புழு தானகவே வெயிலில் சென்று அவ் வெய்யிலின் வெம்மையைத் தாங்க இயலாமல் மடிந்து போகின்றது. அது போலவே அன்பு இல்லாதவரைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை. அவர்களே தம்மைத் தாம் அழிவுக்கு உட்படுத்திக் கொள்ளும் நிலையை அடைந்து விடுகின்றனர். இவர்களே

அறத்தின் முன் அன்பில்லாது தம் இயல்பில் கெடு கின்றனர்.

அகத்தில் அன்பில்லாதவர் வாழ்க்கை வாழ்க்கை யாகாது. அப்படி அன்பின்றி வாழ்கின்றனரே என்று கூறுவது கொடிய வலிய நிலத்தில் வற்றிய மரம் தளிர்த்து வளர்கிறது என்று சொல்வதற்குச் சமமாகும். ஆகவே வன்னிலத்தில் வற்றல் மரம் தழைக்காதது போலவே, அன்பில்லாதவர் இல்லறத்தில் நல்வாழ்வு நடத்துகின்றனர் என்பது பொய்யே ஆகும்.

இல்வாழ்க்கை உடையவர்கள் கை கால் முதலிய உறுப்புக் குறைவின்றி இருக்கலாம். இவைபோல செல்வம், வீட்டு வசதி, வேலையாள் வசதி உடையவராகவும் இருக்க லாம் இவை புறத்து உறுப்புக்கள். அகத்துறுப்பாக உள் ளது அன்புடைமை. இவ்வன்புடைமையாகிய அகத்துறுப்பு இல்லாதபோது புறத்துறுப்பு இருந்தும் பயனின்று.

இத்தகைய காரணங்களை நாம் நன்கு சிந்தித்துக் காண்கையில், அன்பு முதன்மையாக நிற்க அதன் வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் என்று உணர் கிறோம். இத்தகைய மாண்புகட்கெல்லாம் காரணமாகும் அன்பினைப் பெறுதவர்கள் யாவரும் முழு மக்கள் என்று கூறுதற்கு உரியவர் ஆகார். அவர்கள் உடம்புகள் என் பினைத் தோலால் போர்த்த உடம்புகள் என்றே கூறும் தகுதியுடையன. அவர்கள் உயிர் நின்ற உடம்பினர் ஆகார். ஆகவே உடம்பினைப் பெற்றவர் அன்புடையவராதல் வேண்டும் என்பது புலனுகிறதன்றோ ?

## 5. விருந்தோம்பல்

இல்லறத்தார் உபசரிக்க வேண்டியவர்கள் தென் புலத்தாராகிய பிதுர்க்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார்

ஆகிய நால்வருடன் தனக்கும் யாதொரு தீங்கும் நேரா வண்ணம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது கடமை என்பது நாம் அறிந்ததாகும். இவ்வைந்து வகையினர்க்கும் உதவி புரிதலில் வேறுபாடு உண்டு. முன்னைய இருவர்களாகிய தென்புலத்தார், தெய்வம் இவர்கள் கண்ணுக்குப் புலப்படா நிலையில் இருப்பவர் ஆதலின், அவர்கள் உள்ளவர்களாக எண்ணி அவர்கட்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டிய பொறுப்பில் இல்லறத்தார் அமைகின்றனர். இறுதியில் உபசரிக்கப்பட வேண்டியவர்கள் இல்லறத்தாருக்கு வேறாகாத சுற்றத்தாரும் தாமும் ஆக இருத்தலின், அவர்கட்குச் செய்யும் உபசரணையும் அத்துணைச் சிறப்புடையதாதற்கு இடம் இல்லை. எனவே, டைஇ நின்ற விருந்தினர்களாகிய முன்பின் அறியப்படாத புதியவர்கட்கு ஈதலே சிறப்பினும் சிறப்பாகும். இப்படிப் புதிதாக வந்தவர்கட்கு உபசரித்தற்கு அன்பு இன்றியமையாதது என்பதால், விருந்தோம்புதலுக்கும் அன்புடைமைக்கும் தொடர்பு உண்டு என அறிதல் வேண்டும்.

குடும்பத்தில் மனையாளோடு வாழ்வு நடத்துவது என்பது வெறும் பிள்ளைப் பேறு பெறுதற்கு அமைந்தது என்பதில்லை. இல்லறத்தானை நாடி வரும் விருந்தினரைப் போற்றி அவர்க்கு உபகாரம் செய்வதற்கும் ஆகும் என்பதை மறத்தல் கூடாது. சாவாமைக்குக் காரணமாக உள்ளதும் கிடைத்தற்கரியதும் ஆன தேவாமுதம் கிடைப்பினும், தாமே தனித்து உண்ணாமல் வந்த விருந்தினர்க்குக் கொடுத்து உண்ண வேண்டும் என்று அறநூல் விதிக்கும் ஆயின், விருந்தினரை உபசரிக்கவேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? வந்த விருந்தினர் வெளியில் இருக்கத் தனக்குக் கிடைத்த தேவாமுதத்தைத் தானே

உண்ணுதல் கூடாது. அது வேண்டத்தக்கதும் அன்று என அறநூல் கூறுகிறது.

இப்படி வந்த விருந்தினர்க்குக் கிடைத்தற்கு அரிய பொருள் கிடைப்பினும் ஈந்து உபசரிப்பதனால் யாது பயன் என்று கேட்பினும் கேட்கலாம். யார் இங்ஙனம் தம்மை நாடி வந்த விருந்தினரைத் தினமும் உபசரித்து வருகின்றனரோ, அவர்களுடைய வாழ்க்கை வறுமையால் துன்புறாது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். இறைக்கும் கிணறு சுரக்கும் என்பதுபோல விருந்தினர் பொருட்டுச் செலவு செய்யச் செய்யப் பொருளும் குன்றாது வளர்ந்து கொண்டே இருக்கும். இந்த அளவிலும் விருந்தினரை உபசரிப்பவர் வாழ்வு நின்றுவிடாது. இவர்கள் இல்லமே தான் விரும்பி வாழ்வதற்குரிய இல்லமாகக் கருதிச் செல்வதற்குரிய செல்வியாகிய இலக்குமியும் தன் மனம் உவந்து வாழத் தொடங்குவாள். ஆனால் குடும்பஸ்தர் மட்டும் வந்த விருந்தினரை முகம் கோணாமல் உபசரிக்கும் இயல்புடையவராய் இருத்தல் வேண்டும். தம் செல்வம் நல் வழியில் பயன்படுகிறதே என்னும் காரணமே திருமகள் மனம் மகிழ்வதற்குரிய காரணமாகும். வரும் விருந்தினர்களும் ஞான ஒழுக்கங்களில் பழகுபவராய் இருத்தல் வேண்டும்.

இம் முறையில் நல்ல விருந்தினரை உபசரித்து மிகுந்ததைக் கொண்டு தாம் உண்டு வந்தால் இல்லறத்தார் நில பலம் உடையவராயின் அவர்கள் புலத்தில் விதையிட்டுத்தான் பயிராக்க வேண்டும் என்பதும் இல்லாமல் அவர்கள் நிலங்கள் தாமாகவே நல்ல விளைவு தந்து பயன் அளிக்கும். இதனால் வருவிருந்து ஓம்புபவர் செல்வம் குன்றபடாது செழித்து ஓங்கும் என்பது தெரிகிறதல்லவா?

விருந்தினரை உபசரிக்கும் இல்லறத்தான் இம்மை இன்பம் மட்டும் துய்ப்பவர் அல்லர். மறுமையிலும் இன்பம் அடைவர் என்பது. இவர் நில உலகை விடுத்து வானுலகு அடையும்போது, அங்குள்ளார் இவர்களை நல்வரவு கூறும் வாய்ப்புடையவனாய் விளங்குவான் என்பது அறநூலார் கணிபாகும். இவர் இப்படி வானத்தவர்க்கு நல்விருந்தின ராக அமைவதற்குக் காரணம் தம்பால் வந்த விருந்தினரை உபசரிப்பதோடு நில்லாமல் இனி வரும் விருந்தினரையும் எதிர்நோக்கி இருப்பதே யாகும். இங்ஙனம் விருந்தின ருக்குச் செய்யும் சிறப்பினால் அடையக்கூடிய பயன் இவ் வளவினையுடையதென வரையறுக்க முடியாது. விருந்தின ராக வருபவருடைய தகுதிக்கேற்ற பயனை இல்லறத்தார் அடைவர். பொருளின் அளவு சிறியதாயினும், அது தக்கார் கையில் புகுந்த மாத்திரத்தில் வானையும் தொடும் படி வளர்ந்து பயன் தரவல்லதன்றோ? அது போலவே தகுதி உடைய விருந்தினர்க்கு மட்டும் செய்யப்படும் உதவி அதற்கேற்ற பயனையே தரவல்லது. பொருள் படைத்தவர் அதனைப் பாதுகாப்பதில் பயன் இல்லை. அதனால் விருந்தினரையும் உபசரித்து வருதல் வேண்டும். அப்படிச் செய்யாதவர் பின்னால் 'அந்தோ வீணே பணத்தை வருந்திக் காத்து இப்போது உயிர் உய்வதற் கான பற்றுக்கோடு இன்றி வருந்தவேண்டி இருக்கிறதே' என்று துன்புற நேரிடும். செல்வம் உடையவர்களை எல்லாம் செல்வர் என்று உன்னிவிட முடியாது. செல்வர்களாக இருப்பவரையும் வறியவர்கள் என்றே கூறிவிடலாம் ஏனெனில் பொருளைப் படைத்தும் அப் 'பொருளால் எய்தக் கூடிய பயனாகிய விருந்தினரை உபசரிக்கும் குணம் பெறாது விடுகின்றனர் அன்றோ? ஆனால் இந்தக் குணம் எல்லாரிடத்தும் அமையும் குணமாகாது. உபசரிப்பின்

மையினை அறியாதாரிடத்து அமையும் மடமைக் குணமே ஆகும்.

"நாம் செல்வர். விருந்தினராக வருபவர் முன்பின் அறியாதவர். ஏதோ நம் உதவி நாடி வருகின்றனர். அவர்களே வந்து விட்டமையால் அவர்களை உபசரிக்க வேண்டியதாயிற்று" என்னும் மனக் கசப்புடன் அவ் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் பயன் இல்லை. அனிச்சம் என்பது ஒரு மலர். அது மிக மிக மென்மை வாய்ந்தது. அதனை மூக்கின் அருகே வைத்து முகர்ந்து பார்ப்பினும் உடனே வாடும் தன்மையது என்றால் அதன் மென்மையை மேலும் விளக்க வேண்டுமோ? வேண்டா. ஆனால், விருந்தினர் அனிச்ச மலரினும் மென்மை வாய்ந்தவர். அவர்கள் இல்லறத்தாரை நாடி உதவி பெற வரும்போதே, இல்லறத்தார் சிறிது வேற்று முகத்துடன் பார்ப்பாரேயானால் உடனே வாட்டம் உறுவர். உபசாரம் பெற வந்த மனமும் மாறித் திரும்பிப் போவர். ஆகவே, இனிய முகத்துடனே விருந்தினரை வரவேற்று உபசரிக்கவேண்டும். இன் முகம் காட்டியும், இன் சொல் கூறியும் இனிமையாக உபசரித்தலுமே இல்வாழ்வார் விருந்தினரை உபசரிக்கும் முறையாகும். எனவே இல்லறத்தாருக்கு இன் முகம் வேண்டற்பாலது என்பது தெரிகிறதன்றோ?

## 6. இனியவை கூறல்

விருந்தினர்களை உபசரிப்பது கடமை எனக் கொண்ட இல்லறத்தார் அதற்குத் துணையான இன் சொல் கூறுதலை மேற்கொள்ள வேண்டும் அல்லவா? இந்த இன் சொல் அன்போடு கலந்து வஞ்சனை இல்லாது அறத்தினை உணர்ந்தவர் வாயினின்று வரும் இயல்புடையனவாக இருக்கும். இன் சொல் அகத்தால் விரும்பிப் பிறர்க்குக் கொடுத்தலைவிடக்

கண்டவுடனே முகத்தால் விருப்பம் காட்டி இன்சொல் கூறு தலே சாலச் சிறந்ததாகும். அறம் என்பது எது? அஃது எங்கு இருக்கிறது என்போமானால் கண்டபோதே முகத்தால் விரும்பி, இனிமையோடு பார்த்து பின்பு மனத்தோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுதனிடத்தில்தான் அமைந்துள்ளது. இந்த இன்சொல் அறத்தை எவர் மேற்கொள்ளினும் அவர்கள் துன்பந் தரும் தரித்திரத்தால் நலிவு அடையார். ஆனால், இன்னார் இடத்தில் இன் சொல் வழங்குதல் என்பது இன்றி எல்லாரிடத்தும் இன் சொல் கூறுபவரே வறுமையால் வருந்தார்.

மக்கள் எத்தனையோ ஆபரணங்களை அணியலாம். அவை யாவும் உண்மை அணிகலன்கள் அல்ல. மக்கட்கு உண்மை ஆபரணங்களாக இருப்பவை எவர்க்கும் தாழ்ந்து போதலும் இன்சொல் கூறுதலுமே ஆகும். நாம் பேசும் பொருளால் நன்மை பயக்கும் சொற்களையே மனத்தில் நன்கு ஆராய்ந்து பேசிவர வேண்டும். இப்படிப் பேசிவரின் பாவங்கள் தேய்ந்துபோக அறமானது வளர்ந்துகொண்டே வரும். இங்ஙனம் பேசுதலைப் பண்பில் தலைபிரியாச் சொல் எனவும் கூறலாம். இது மக்கட்கு இம்மையில் நீதியை உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்க வல்லதாகும். ஆனால் பிறர்க்குத் துன்பம் செய்யாத இனிய சொல்லாக இருக்கவேண்டும். இதுதான் இருமை இன்பத்தையும் தரும். “உலகம் தன் வயமாகும்” இத்தகைய நன்மைகள் எல்லாம் இன்சொல் பேசுவதால் ஏற்படும்போது, நாம் வன்சொல் பேசலாமோ? இந்த உண்மைகளை அறிந்தும் வன்சொற்களைப் பேசுவோமானால் “பழத்தை விட்டுக் காயை விரும்பிப் புசிப்பது போலாகும்.” எனவே இன்சொல் கூறுதலில் விழிப்புடன் இருக்கவேண்டும்.

## 7. செய்ந்நன்றி அறிதல்

உலகில் செய்யப்படும் பாவங்கள் பலவற்றுள் பிறர் செய்த நன்றியை மறப்பதும் ஒன்றாகும். நன்றியை மறத்தல் கூடாது. மறத்தல் மீளமுடியாத குற்றம் என்று நீதி நூல் கூறுகிறது. நாம் பிறர்க்கு நன்றி புரிந்த வண்ணமாக இருக்க வேண்டும். நமக்கு முன்பு இவன் நன்றி செய்துள்ளான். ஆகவே, அவனுக்கு இப்பொழுது நாம் நன்றி புரிதல் வேண்டும். என்று கருதிச் செய்வதில் பயன் இல்லை. இப்படிப் பிறர் நமக்கு நன்றி செய்யாத நிலையிலும் நாம் நன்றி செய்துவரின் அதற்குக் கைம்மாறாக மண்ணுலகை யும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஒப்பாகக் கூறமுடியாது. நன்றிக்கு அளவு இல்லை. அது பெரிய நன்றி. இது சிறிய நன்றி என்று வேற்றுமை கூற இயலாது. ஆனால் ஆபத்தான காலத்தில் செய்யப்படும் நன்றி சிறியதே யானாலும் அது அக்காலச் சந்தர்ப்பத்தை நோக்க உலகப் பரப்பைவிட மிகப் பெரியதாகும். பயனைக் கருதாமலும் நன்றி புரிதல் வேண்டும். அப்படிப் புரிவதனால் ஏற்படும் அன்புடைமையை ஆராயின், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

நன்றியின் பலன் பெரிது. அதனைச் சிறிய அளவில் செய்வதாக இருந்தாலும், அந் நன்றியின் பயனை நன்கு ஆராய்ந்தவர்கள் பனையினும் பெரிதாகக் கொள்வர். இதனால் ஏற்படும் பயனை ஓர் அளவிற்கு உட்படுத்திக் கூற இயலாது. இவ்வுதவியினை ஏற்றவருடைய அமைதியின் அளவும் உள் பட்டதாக இருக்கும். சால்பாகிய அமைதி பெரியதாக இருப் பின், அதன் உதவியின் அளவும் பெரியதாகும். இப்படி உதவி செய்பவரது நட்பை மறக்கலாமோ? மறத்தல் கூடாது. இவர்களை மறவாது இருத்தல் போலவே, துன்பம் உண்டான

காலத்தில் பற்றுக்கோடாக இருந்தவர்களையும் மறத்தல் கூடாது. துன்பம் துடைத்தவரை இம்மையில் மட்டும் மறத்தல் கூடாது என்பதன்று· எழ் எழ் பிறவியிலும் மறத்தல் கூடாது. ஏன் மறத்தல் கூடாது ? இவ் வினாவிற்குப் பல வகையில் விடை கூறலாம். நன்றி மறத்தல் நல்லதாகாது என்று பொதுவாகக் கூறலாம். ஏனெனில் எவர் பிறர் செய்த நன்றியை மறக்கின்றனரோ அவர்கட்கு உய்யும் வழியே கிடையாது. பசு மடியை அறுத்தவர், மாதர்களின் கருவினை அழித்தவர், பெரியோர்கட்குக் கொடுமை இழைத்தவர் ஆகிய பாவங்களைச் செய்தவர் உய்ய வழி யுண்டு. செய்த நன்றியை மறந்தவர்கட்கு உய்ய வழியில்லை.

நன்றி அல்லாதவற்றை அப்பொழுதே மறந்து விடுதல் நல்லதாகும். ஆனால், சிலர் ஒன்று கேட்கலாம். அதாவது கொல்லும் தன்மையதான தீங்கு செய்தவர்களையும் நாம் மன்னித்து விடுதல் வேண்டுமோ என்பது. ஆம். மன்னித்துத்தான் விடவேண்டும். இப்படிச் சொன்னால் அன்ன தீமையைச் செய்தவராயினும், ஒரு நாளேனும் ஒரு நன்றியை நமக்குப் புரிந்திருப்பாராணால், அதனை அப்போது எண்ணியாகிலும் நாம் பொறுத்தே போகவேண்டும், எனவே பிறர் செய்த நன்றியை மறக்க இயலுமோ ? சிந்தித்துப் பாருங்கள்.

## 8. நடுவு நிலைமை

நடுவு நிலைமை என்பது இன்னார் பகைவர், இன்னார் நண்பர், இன்னார் பகையும் நண்பும் இல்லாதவர் என்ற காரணத்தால் பட்சபாதமாக நடவாது எல்லார்க்கும் ஒப்பும் படி நடந்து கொள்ளும் நற்குணமாகும். நமக்கு இவர் நன்றி செய்தவராயிற்றே. ஆகவே இவரிடம் நாம் நடுநிலைமை

தவறி நன்மை செய்யலாம் என்று செய்யவும் கூடாது நினைக்கவும் கூடாது. ஆகவே நடுவுநிலைமை என்னும் இவ்வறமே தலைசிறந்த அறம் என்றும் கூறலாம். நடுவுநிலைமையில் இருந்து ஒருவன் தவறாமல் நடப்பானானால் அவனுடைய செல்வம் அழிவுறாது, அது அவனுடைய சந்ததிக்கும் பயன் தருவதாய் வலிமையுடையதாய் அழிவுறாது.

செல்வத்தைத் தேடும் வழிகள் பல. அவற்றுள் ஒன்று நடுநிலைமையில் தவறி நடப்பதனாலும் தேடுவதாகும். அப்படி நடுநிலைமை தவறி நடப்பதனால் வரும் செல்வம் நன்மையே தர வல்லதாயின், அது வேண்டற்பாலது அன்று. அது வந்த அன்றே அதனை ஒழிய விடவேண்டும். ஒருவன் நற்பிள்ளைப் பேற்றைப் பெறுதற்கும் தீய பிள்ளைகளைப் பெறுதற்கும் காரணம் நடுநிலைமை தவறாமல் நடந்து கொண்டமையும், நடுநிலைமை தவறி நடந்து கொண்டமையும் காரணமாகும். ஆகவே இவன் நடுநிலைமை தவறியவன்; இவன் நடுநிலைமை தவறாதவன் என்பதை அவன் அவனுடைய பிள்ளைகளைக் கொண்டு மதிப்பிட்டு விடலாம். நடுநிலைமை தவறியவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லாமற் போதலும் உண்டு. சிலர் வேறாக நினைக்கின்றனர். "அதோ பாருங்கள், அவர்கள் நடுநிலைமை தவறி நடந்த காரணத்தால்தான் இவ்வளவு செழிப்புடன் வாழ்கின்றனர். இதோ பாருங்கள், நடுநிலைமையில் இருந்து சிறிதும் வழுவாது இருந்தும் இந்தத் தாழ் நிலையை அடைந்திருக்கின்றனர்" என்றுகூடக் கூறலாம். அப்படிக் கூறுவது பொருந்தாது. மக்கள் வாழ்வில் ஒருவன் சிறக்க வாழ்வதும் மற்றவன் சீர்கெட்டு வாழ்வதும் அவர் அவர்களுடைய முன்னைய வினையை பொறுத்தது. ஆகவே சான்றோர்களாக

இருப்பவர் மனத்தினாலும் நடுநிலைமையில் இருந்து தவறாமையே சால்புடையதாகும்.

இல்லறத்தாராக இருப்பவர் தம் மனம் அறிந்த ஒன்றிலிருந்து நடுநிலைமை தவறி நடப்பாராயின்; அவர் அழிவார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். நடுநிலைமை தவறாமையால் கேடுவரினும் வரட்டும். அக் கேட்டினை—தாழ்வினை—அறிஞர்கள் ஒரு தாழ்வாகக் கொள்ளமாட்டார்கள். சான்றோராக இருப்பவர்கள் தராசின் முள்போல் நடுநிலை உடையவராய் இருக்கவேண்டும். அன்பு கருதியும் பகைமை கருதியும் ஒரு சார் சாரக்கூடாது. இப்படி இருத்தலே அச் சான்றோர்க்கு அணி எனப்படும். நடுநிலைமை சொல்லின் கண் மாறுபடாமையாலும் காட்டுவதேயாம். இவ்வாறு சொல்லில் கோணுதல் இல்லாமை எப்பொழுது வரும்? மனத்தில் கோணுதல் இல்லாதபோது அன்றோ வரும். எனவே மனத்தாலும், சொல்லாலும் கோணுதல் கூடாது. இங்ஙனம் நடுநிலைமை இல்லறத்தாருக்குச் சிறப்புடைய பண்பானாலும் வணிகனும் இதில் மிகவும் எச்சரிக்கை உடையவனாய் இருத்தல் வேண்டும். எப்படித் தன் பொருளையே பொருளாகக் கருதி விற்கின்றானோ அது போலவே பிறர் பொருளையும் தன் பொருளைப்போல் கருதி வாணிபம் செய்யவேண்டும்., அதுவே அவன் வாணிபத்திற்கு நல்லதாகும். இவன் கொள்வது மிகுதியாகவும் கொடுப்பது குறைவாகவும் கொடுத்தல் கூடாது. இதையும் மனத்தில் கொள்ளவேண்டும்.

## 9. அடக்கமுடைமை

அடக்கம் என்பது உடல் அடக்கம் என்பதை மட்டும் குறிக்காது. உடம்புடன், மொழியும் மனமும் அடங்கி இருக்கவேண்டும். இவ் வடக்கமுடைமை தேவர் உலகத்துக்

கொண்டு சேர்க்க வல்லது. அடக்கம் இன்மை பாவிகளுக்கு உறைவிடமாகிய இருள் நிறைந்த நரலோகத்தில் கொண்டு போய் சேர்க்க வல்லது. இத்தகைய பயன் அடக்கமுடைமையாலும், அடக்கமின்மையாலும் ஏற்படுதலின், அடக்கமுடைமையைத் தலைசிறந்த பொருளாக எண்ணி அதனைச் சிதைய விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இப் பண்பு உயிர்கட்குச் சிறந்த செல்வமாகும். இதைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை என்றும் கூறி விடலாம். அறிவாகத் துலங்குவதும் இவ் வடக்கமான குணமே ஆகும். இந்த உணர்ச்சி குடும்பஸ்தருக்கு வருதல் வேண்டும். இதன் பயன் நல்லோரால் அறியப்பட்டு அடக்கமுடையவனுக்குப் பெருமை தரவல்லதாக இருக்கும். தன் நிலையில் வேறுபடாது நின்று அடக்கமான கொள்கையுடையவனாக இருப்பின், அவனது மாண்பு மலையினும் மாணப் பெரியதாகும். இதனால் இல்லறத்தார் ஐம்பொறிகளால் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை அனுபவியாமல் இருந்து அவற்றை அடக்குதல் என்பது கருத்தன்று. ஐம்புலன்களால் துய்க்க வேண்டியதைத் துய்த்து அடக்கமுடையவராக ஒழுக வேண்டும் என்பதே கருத்தாகும்.

அடக்கமுடைமை யார்க்கு இருத்தல் வேண்டும்? ஏழை எளியவர்களுக்குத்தான் இருத்தல் வேண்டும் என்று கூடக் கருதலாம். அப்படிக் கருதுதல் தவறு. இக் குணம் எவர்க்கும் அமைதல் சிறப்புடையதாகும். அவர்களினும் செல்வம் உடையவர் தம் மனம், மொழி, மெய்களால் அடங்கிப் போதல் அவர்கட்கு இயற்கையில் அமைந்த செல்வத்தினும் மேலும் ஒரு செல்வம் அமைந்தது போலாகும். எல்லார்க்கும் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டவர் எவரையும் குறிக்கும் என்றாலும் குடிப் பிறப்பு, கல்வி

யாவர் இவற்றால் பெருமிதமுடையாரையும் உள்ளடக்கி இது இங்குக் கூறப்பட்டது என்க.

ஆமை தனக்கு ஆபத்து நேருங்காலத்தில் தன் நான்கு கால்களையும் தன் ஒரு தலையையும் முதுகு ஓட்டிற்குள் இழுத்துக்கொண்டு தன்னை விபத்தில் இருந்து காத்துக் கொள்ளும். அதுபோலவே ஐம்புலன்களையும் இப்பிறவியில் அவை செல்லும் நெறியில் செல்ல ஓட்டாமல் அடக்கி ஆண்டுவரின், இவ்வடக்கம் வினைவயத்தால் எழ் பிறவிகள் ஏற்படினும், அப் பிறவிகள்தோறும் அவனுக்கு அரண் செய்து காக்கவல்லதாகும். ஐம்பொறிகளையும் அடக்க வேண்டுமோ? ஐந்தனுள் ஏதேனும் ஒன்றை அடக்குதற்கு வழி இல்லையோ என்று வினவுவாராயின், அவர்கட்கும் விடை கூற இயலும். தம்மால் காக்கப்படுவனவாகிய எவற்றைக் காத்துக்கொள்ள மாட்டாதவராயினும் நாவாகிய பொறியையேனும் மிகுதியாகப் பேச ஓட்டாமல் காத்துக் கொள்வதில் எச்சரிக்கை உடையவராய் இருத்தல் வேண்டும். அன்றேல், இதனையேனும் காவாமல் அதன் போக்கில் போக விட்டுவிட்டால் தாம் சொல்லும் சொற்களில் குற்றம் ஏற்பட்டுத் துன்பத்திற்கு ஆளாக நேரிடும்.

பிறர்க்குப் புண்படாதவாறு பேசுதல் வேண்டும். பல நற்சொல் கூறியும் அவற்றுள் ஒன்று தீச் சொல்லா இருப் பின், சொன்னவனுக்கே தீங்காக முடியினும் முடியும். தீச் சொல் என ஈண்டுக் கூறக் கருதியது பொய்யும், கோள் கூறலும், கடுஞ்சொல் பேசுதலும் ஆகும். ஏன் இப்படி நா அடக்கத்தையே பன்னிப் பன்னிப் பேசப்படுகிறது என்று சிலர் எண்ணலாம். நாவினால் பிறரைச் சுடுவதால் ஏற்படும் புண் ஆறாப் புண் அழியாப்புண். தீயினால் சுடப் பட்ட புண்ணானாலும் அது மறைந்து விடும் ஆறிவிடும்.

நாவினால் சுட்ட புண் ஆறாது. ஆகவே பன்னிப் பன்னிக் கூறவேண்டியதாயிற்று. கோபம் பொல்லாது. அது மீறி வர வல்லது. அப்படி வர வல்லதையும் தன் கல்வி அறிவினால் அடக்கிக் கல்வி அறிவுடையவனாதலை ஒருவன் காட்ட வல்லவனாயின் அவனை அறக் கடவுள் சென்று அடைந்து அவனை மேன்மேலும் நல்வழியில் கொணர வழிதேடும். எனவே அடக்கமுடையவராய் இருக்கப் பாடுபடுக.

## 10. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் என்பது அந்த வருணத்தார், ஆசிரமத்தார் நிலைக்குரியனவாக ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையவராதலாம். இவ்வாறு ஒழுக்கமுடையவராதல் மெய் முதலிய அடங்கினவர்களுக்கு இயலும் ஆகலின், இக் குணத்திற்கும் அடக்கமுடைமைக்கும் தொடர்பு உண்டென அறிக.

ஒழுக்கமுடைமை எவர்க்கும் சிறப்பினைத் தருவதாகும். அதனால் இஃது உயிரைவிட பாதுகாக்கத் தக்க குணம் ஆகும் எனலாம். இதனால் உயிரினும் சிறந்தது ஒழுக்கமுடைமை என்பதை உணர்தல் வேண்டும். எனவே, இவ்வொழுக்கமுடைமையாகிய குணத்தை அழிவுபடாமல் எவ்வாறேனும் வருந்தியாகிலும் காத்துக் கொள்ளுதல் வேண்டும். இப் பண்பு இம்மை மறுமை ஆகிய இருமைக்கும் துணை செய்யவல்லது. சிலர், குடிப் பிறப்பே உயர்வளிக்க வல்லது ஒழுக்கம் வேண்டற்பாலது அன்று எனவும் கூறலாம். ஒழுக்கமுடைமைதான் உயர்குலம் உடைமை எனப்படும். பிறப்பால் உயர்குடிப் பிறப்புடையேம் என்று கூறுவதால் பயன் இல்லை. ஒழுக்கம் இன்மையே இழிபிறப்பாகக் கருதப்படும். பார்ப்பார் தாம் பிறப்புரிமை கருதித் தம்மை உயர் குடியினர் என்று கூறிக்கொள்வர். அதுவும் தவறே. அவர்கள் வேதத்தினைப் பார்ப்பவர்கள் தாம் அதனை ஓது

புவர்கள் தாம். அவ்வேதத்தினை மறந்தாலும் மீண்டும் தம் நினைவுக்குக் கொண்டு வரலாம். ஆனல், அவர்களுக் குரிய ஒழுக்கத்தை மறந்தாராயினும் இழுக்கமுடையவரே ஆவார். இவ்வாறு பார்ப்பார்மீது வைத்துக் கூறியதனல் ஏனைய பிறப்பினர் தம் தம் ஒழுக்கத்தினின்றும் தவறிப் போகலாம். அப்படித் தவறிவிட்டாலும் அவர்களை இழி பிறப்பினராகக் கருதமாட்டார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. எவருமே ஒழுக்க நெறியினின்று தவறுதல் கூடாது என்பதை மறத்தல் கூடாது.

எவன் பொறாமைக் குணம் உடையவனுய் இருக்கின் றனே அவனுக்கும் உயர்ச்சி கிடையாது. அவன் சுற்றத்தா ருக்கும் உயர்ச்சி கிடையாது. அது போலவே ஒழுக்கம் கெட்டவனுக்கு உயர்வே ஏற்படமாட்டாது. இந்த இழிவு ஏற்படுவதால் மனவலிமைபடைத்த நல்ல மாந்தர் ஒழுக்கத்தி லிருந்து சிறிதும் தளரமாட்டார். இப்படித் தளறுவதால் குற்றம் உண்டாகும் என்பதை அவர்கள் நன்கு அறி வார்கள். ஒழுக்கமுடைமையால் மேன்மை அடைவர். ஒழுக்கம் இன்மையால் எய்தாத பழியையே எய்துவர்.

ஒழுக்கமுடையவராய் இருப்பதால் பயன் பெரி தாகும். பின்னல் வரப்போகும் நன்மையாகிய மரத்திற்கு விதையாக நின்று உதவ வல்லது இவ்வொழுக்கமுடை மையே ஆகும். இக்குணம் நன்மைக்கு வித்தாகும் என்றல் ஒழுக்கமின்மை என்றும் துன்பம் தரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒழுககமுடைமையாகிய பண்புடையவர் தம் வாயா லும் தீய மொழிகளைத் தவறியும் கூறமாட்டார்கள். உலகத் தோடு பொருந்த ஒழுகுதலும் ஒழுக்கமுடைமையின் பால் படும். இந்தக் குணம் அமையப் பெருதவர் எவ்வளவு கற்

திருப்பினும் அக் கல்வி அறிவுடைமையால் பயன் இல்லையாம். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் இன்ன என்பதும் அறியவேண்டின், அதுவே அறநூல்கள் விதித்தவற்றை ஏற்று, விதிக்காதவற்றைத் தள்ளி விடுதலாகும். கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்பதே நல்லறிஞர் துணிபாகும். அவ்வாறு இருப்பதனால் இவ்வொழுக்கமாகிய கல்வியைக் கல்லாதார் கல்வி, பயன் அற்ற கல்வி என்பதனால்தான் உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவரைக் கல்லாதார் என்றே ஆசிரியர் வள்ளுவர் கூற முன் வந்தனர்.

## 11. பிறன் இல் விழையாமை

நல்ல இல்லறத்தார் தாம் மணந்த ஒருத்தியுடன் நல்வாழ்வு நடத்துவதே அவருக்கு நல் அறமாகும். அவ்வாறின்றிப் பிற மாதரை இச்சித்து வாழும் வாழ்வு சீரிய வாழ்வு ஆகாது. இவ் விழிவான ஒழுக்கம் கூடாது. அதனால்தான் ஒழுக்கமுடைமையாகிய நற்பண்பிற்கும் இதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை விளக்கலாம். ஆசிரியர் வள்ளுவனார் ஒழுக்கமுடைமையைப் பின்பற்றிப் பிறன் இல் விழையாமையைப் பற்றிப் பேசலானார்.

நல்ல அறநூலையும் பொருள் நூலையும் பயின்றவர்கள் பிறனுக்கு வாழ்க்கைப்பட்டவளை எக்காலத்தும் காதலித்து ஒழுக மாட்டார்கள். இக்குணத்தைப் பெறுவாராயின் அவர்கள் பால் அறமும் நிலவாது. பொருளும் பொருந்தாது. உலகில் யார் பேதையார் என்று கருதுவோமானால் பிறன் இல்லாளை விரும்பி அவளைக் கூடுதற்கு வீட்டின் கடைவாயிலில் நிற்பவர்களே என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். இவர்கள் பாவத்தில் ஈடுபட்டவர்களுக்குள் ஒருவர் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இழிகுலமகளிரோடும் பரத்தையோடும்

இன்புறுவதாக எண்ணி இன்புறுபவர் உண்மையில் அறத்தையும் பொருளையும் இழந்தவராகிய பயனைப் பெறுகின்றார்களே அன்றி வேறில்லை. இவர்களைப் போலவே பிறனது இல்லாளை இச்சித்துப் பிறன் வாயிற் கடையில் நிற்பவர் அச்சம் காரணமாகத் தாம் எண்ணிய இன்பத்தையும் முற்றிலும் துய்க்கப் பெறாமல் இழப்பவரே ஆவார். ஆகவே இவர்கள் பேதையார் என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

"இவன் யோக்கியன். எத்தகைய தீய செயற்கும் இடந்தராதவன். இவனிடத்தில் நாம் முழு நம்பிக்கை வைக்கலாம்" என்று எண்ணிக்கொண்டு இருக்கின்றவனுடைய மனையாளையே ஆண்டுகொள்ள ஒருவன் எண்ணுவானானால் அவனை என்னென்று கூறுவது? அவனை உயிருடைய மனிதனேயானாலும் இறந்த மனிதன் என்றே கூற வேண்டும்.

சிலர் எல்லாப் படியாலும் சிறப்புற்று இருக்கலாம். ஆனால் அச்சிறப்புக்கள் அனைத்தும் பிறன் மனையாளை விரும்பி வாழ்பவனானால் பயனற்றுப் போவான். அவனை ஆன்றோர் மதியார். இவளை அடைதல் எளிது. ஆதலின் அடைவோம் என்று பிறனது இல்லிற்கு ஒருவன் செல்வானானால், அவனுக்குப் பழி எக்காலத்தும் நிலை பெற்று நிற்கும். இவனுக்குப் பகையும், பாவமும், அச்சமும், பழியும் எக்காலத்தும் நீங்காமல் தொடர்ந்து வரும். இவனுக்கு இம்மையினும் மறுமையினும் இழுக்கே உண்டாகும்.

இல்லறத்தாராக இருப்பவர் அறத்தினின்றும் வழுவாதவராக உள்ளார் என்று எப்பொழுது கூறலாம் எனில், பிறனுடைய மனையாளின் பெண்மையை விரும்பாத காலத்தில்தான் அவ்வாறு கூறலாம். பிறன் இல்லாளை எறிட்டும் பாராத பார்வையே பேர் ஆண்மை எனப்படும். இதுவே

சான்றோர் இயல்பு. இஃது அறனுடைமை மட்டும் ஆகாது. சிறப்பிய ஒழுக்கமும் ஆகும். புறப்பகையினும் வன்மையுடைய அகப்பகையாகிய காமத்தை அடக்கும் ஆற்றல் பெற்றவரைப் பேர் ஆண்மை உடையவர் என்று கூறுமல் வேறு என்ன கூறுவது? இந்தப் பண்பு யாரிடத்து அமைகிறதோ அவர்கட்கு அறனும் ஒழுக்கமும் ஏற்படும் என்னலாம். எல்லா நலனுக்கும் உரியர் யாவர் எனில், பிற னுக்குரியாளுடைய தோளை விரும்பாதவரே என்னலாம். இல்லறத்தான் அறன் அல்லாத பாவமானவற்றைச் செய்தா லும் செய்யலாம். ஆனல், தன் மனையாளை விட்டுப் பிறன் மனையாளை விரும்பும் குணம் தீமை பயப்பதாகும். இது கூடவே கூடாது.

## 12. பொறையுடைமை

பொறுமையுடையவராய் இருத்தல் என்பதே பொறை யுடைமை எனப்படும். காரணம் கருதியோ அறியாமை யாலோ ஒருவன் தகாதவற்றைச் செய்யவும் கூடும். அக் காலங்களிலும் பொறுத்தல் சாலச்சிறப்புடையதாகும். நெறி யல்லா நெறியில் நின்றும் செய்யத் தகாதவற்றைச் செய்த காலத்தும் பொறுத்தலும் பொறுமைக்கு அறிகுறியாகும்.

நிலம் பொறுமைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். அது தன்னைத் தோண்டுகிறவனையும் பள்ளத்தில் அழுத்தி மூடி விடாமல் அவனைத் தாங்கி நிற்கிறது. அது போலவே தம்மை இகழ்கின்றவர்களையும் பொறுத்தல் தலையாய அற மாகும். பிறர் செய்த தீய செயலையும், தீய மொழிகளையும் பொறுத்தல் அறமேயாலுைம், அவர்களது வரம்பு கடந்த கூடத்தைகளை மறத்தல் பொறுமையினும் சிறந்த பண்பா டாகும். சிலர்க்குச் செல்வம் இருந்தும் அச்செல்வத்

தாம் தம்மை நாடி வந்த விருந்தினரை உபசரியாமல் விடுவாராயின், அவர்கள் செல்வமுடையவர் ஆகார். வறுமை உடையவரே ஆவார். அது போல வன்மையுள் வன்மையாது எனில், உடல் வன்மை அன்று. பொருள் வன்மை அன்று. ஏனைய வன்மைகளும் அல்ல. ஆனால் அறியாமை காரணமாகத் தீமை செய்தவர்களைப் பொறுத்தலே ஆகும்.

தான் சால்புடையவன், நிறையுடையவன் என்னும் பெயரைப் பூணவேண்டுமாயின், பொறையுடைமையாகிய குணத்தினைப் போற்றி ஒழுகவேண்டும். இப்படி எவரையும் பொறுக்கும் குணமுடையவர்களை அறிஞர் பொன் போல் கருதி இடைவிடாமல் நினைந்த வண்ணம் இருப்பர்! ஆனால் பொறுக்கும் இயல்பு அற்றவர்களை அங்ஙனம் ஒரு பொருளாக மதித்து வைக்கமாட்டார்.

பொறுத்தலினால் என்ன பயன் என்று கேட்கலாம். அப்பொறுமைக் குணம் உலகம் அழியும் அளவும் புகழைத் தர வல்லதாகும். அப்படிப் பொறுக்காமல் கோபவயத்தால் உடனே தண்டித்து விடுதல் அன்றைய ஒரு நாளைக்கு மட்டுமே இன்பம் தரவல்லதாகும். நம்மைப் போலப் பிறர் பொறுப்பதில்லையே நாம் மட்டும் ஏன் பொறுத்தல் வேண்டும் என்றும் கேட்கலாம். அவர்கள் அறியாமையால் தாம் செய்யத் தகாத கொடிய செயல்களைச் செய்கின்றனர். அது அவர்கட்குத் தீங்கையே பயக்கும் என்று அதற்காக நாம் வருந்தி அவர்கட்கு அறம் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பதே நன்மை பயக்கவல்லதாகும். பிறர் மனச் செருக்கால் தகாதவற்றைச் செய்வார்கள். அக்காலத்திலும் நாம் நம் தகுதி நோக்கிப் பொறுத்துக் கொண்டு இத்துறையில் அவர்களை வெற்றி கொண்டதற்காக மனம் மகிழவேண்டும்.

பொறுமைக் குணமுடையவர்களைத் துறந்தவர்களை விடத் தூய்மையானவர்கள் என்று கூறிவிடலாம். ஏனென்றால் துறவிகள் காட்டகத்தில் ஐம்பொறிகளை மட்டும் அடக்கிப் பொறுத்த வண்ணமாக இருப்பவர். ஆனால் இல்லறத்தாரோ ஐம்பொறிகளை அடக்காத முறையில் அவற்றின் வழி தம் மனத்தைச் செலுத்துபவர் ஆதலின், இல்லறத்தார் நெறியைக் கடந்து தீய சொல் கூறுபவர்களையும் பொறுத்துக் கொள்ளுதல் அருமையினும் அருமை அன்றோ? மேலும் இதனை வற்புறுத்திக் கூறுவோமானால், உணவு வெறுத்து விரதங்களைக் காத்து வருபவர் பெரியவர்கள். அப்பெரியவர்களும் பிறர் கூறும் தீய சொற்களைப் பொறுப்பவர்கட்குப் பின்னே நிற்க வேண்டியவர்களே. ஆகவே பொறையுடைமை இல்லறத்தாருக்கு மிக மிக இன்றியமையாக் குணமாகும்.

## 13. அழுக்காறாமை

அழுக்காறு என்னும் சொல் பொறாமை என்னும் பொருளைத் தருவது. அழுக்காறாமை என்பது பொறாமை படாதிருத்தல் என்பதாம். அழுக்காறு என்னும் உடன்பாட்டுச் சொல்லாலும், அழுக்காறாமை என்னும் எதிர்மறைச் சொல்லாலும் இதனைக் குறிப்பிட்டாலும், இக்குணம் கூடாது என்பதை நன்கு வலியுறுத்தவே ஆகும். வள்ளுவனார்க்குச் சிற்சில குணங்கள் கடிய வேண்டுவன என்றும் கூறுங்காலத்து உடன்பாட்டு மொழிகளால் கூறி அவற்றின் தீமைகளை எடுத்துக் காட்டி அக் குணங்களை மக்கள் மேற்கொள்ளக் கூடாதெனை அறிவுறுத்துவார். அவர்க்கு சிற்சில தீய குணங்களிடத்து வெறுப்பு மிகுதி. அவற்றை உடன்பாட்டுச் சொல்லால் கூறவும் மனம் இல்லாதவராய் எதிர் மறைச் சொல்லாலேயே கூறுவார். அப்படி எதிர்

மறைச் சொல்லால் கூறிய தீக் குணங்களுள் அழுக்காறுமை யும் ஒன்றாகும்.

அழுக்காறாகிய பொறாமைக் குணம் அமையப் பெறா திருத்தல் ஒழுக்கத்தின் நெறி என்று கொள்ளுதல் வேண் டும். எவரிடத்தும் பொறாமைப்படாதிருத்தலே சாலவும் நல்லது. இந்தப் பண்பு எல்லாப் பண்பினும் சிறந்தது எவரிடத்தும் என்று கூறுவதில் பொருள் உள்ளது. அஃதா வது பகைவர் ஆக்கம் கண்டும் பொறாமைப்படாதிருத்தலே ஆகும். பிறருடைய ஆக்கம் கண்டு பொறாமைப்பட்டால் இம்மைக்குப் பயன் தரும் செல்வமும், மறுமைக்குப் பயன் அளிக்கும் அறமும் ஒரு சேர இழப்பன். இவை இரண்டும் வேண்டா என ஒருவன் விரும்புவானாயின், வேண்டுமானால் பொறாமைப்படலாம். ஆகவே, அறிவுடையவராய் இருப்ப வர், அழுக்காறு கொள்வதால் தமக்குத் துன்பமே வரு தலின், அறன் அல்லாதவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். அஃதாவது கல்வி, செல்வம் முதலியன பெற்ற வர்களிடத்துத் தீங்கினைச் செய்யவோ, சொல்லவோ, செய்தலும் செய்யார்.

பொறாமைக் குணம் உடையவர்கட்கு வேறு பகைவர் களே வேண்டுவதில்லை. பொறாமைக் குணமே அவர்கட்குப் பெரும் பகையாக இருந்து கேட்டினை அளிப்பதாகும். அழுக்காற்றிற்கு ஏனைய தீக் குணங்கட்கு இல்லாத வன்மை யும் உண்டு. ஏனைய தீக் குணங்கள் தீக் குணங்களை மேற் கொண்டவர்களை மட்டும் கெடுக்கும். ஆனால் அழுக்காறோ வெனில், தன்னையும் கெடுக்கும்; தன் சுற்றத்தார்களையும் கெடுக்கும். உடுக்க உடை இன்றிச் செய்துவிடும்; உண்ண உணவின்றி ஆக்கிவிடும். இவற்றைவிட வேறு கொடுமையும் செய்ய வேண்டுமோ?

பொறாமைக் குணம் கொண்டால் இலக்குமி மெல்ல நீங்கி விடுவாள். அவள் நீங்கினால் பாதகம் இல்லை. நீங்கிப் போகும்போது, தனக்குத் தமக்கையாக இருக்கின்ற மூதேவியை அப்பொறாமைக்காரனிடம் ஒப்படைத்து நீங்குவாள். இஃது எத்துணைக் கொடுமை பாருங்கள்! அழுக்காறாகிய குணத்தை என்னென்று கூறுவது! அதனைப் பாவி என்றே கூறலாம். இஃது என்ன செய்யவல்லது? உள்ள செல்வத்தையும் அழித்து நரகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமே.

ஒரு சிலர் "பொறாமைப்படுபவர் செல்வம் உடையவராய்ச் சிறக்க வாழவில்லையோ? பொறாமைப்படாதவர் தாழ் நிலையில் தானே உள்ளனர்" என்று வினவலாம். ஒருவன் செல்வனும் வறியனும் இருத்தற்கு அவன் முற்பிறவியில் செய்த புண்ணிய பாவமே காரணமாதலின், பொறாமைக் குணம் இருந்து செல்வனானான், அஃது இன்மையால் வறியவனானான் என்று கருதவேண்டா. இதன் பயன் இப்பிறவியில் தெரிவதோடு அடுத்த பிறவியிலும் நன்கு தெரியும். உண்மையில் இது குறித்து ஆராய்ந்து பார்த்தால், பொறாமைப்பட்டவர் பெரியவர் ஆயினார் என்று கூறுதற்கும் பொறாமை இல்லாதவர், பெருமைக் குணத்தில் இருந்து நீங்கினார் என்று கூறுதற்கும் முடியாது.

## 14. வெஃகாமை

வெஃகுதல் என்பது பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதுவதாம். வெஃகாமை என்பது பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை என்பதாம். "பிறர் பொருளைக் கண்டு பொறாமைப் படுதல்தான் குற்றம் என்பது கொள்வதற்கு இல்லை. அப் பொருளை "நாம் வெளவிக் கொண்டால் என்ன?" என்று எண்ணுதலும் பெருங் குற்றமாகும்.

பிறர்க்குரிய பொருளை வெள்வு விரும்பினால் விரும்பு என்றவர் கெட்டு ஒழிவதோடு நில்லாமல், அவர்களுடைய குடியும் கெடும். குற்றமும் அவர்கட்கு உண்டாகும். ஆனால் நடுநிலைமை தவறுதற்கு அஞ்சுபவர் இத்தகைய காரியங்களைச் செய்ய முற்படார். அவர்கட்கு இக் காரியத்தை மேற்கொண்டால் என்ன பயன் கிடைக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். பிறன் பொருளை வெளவக் கருதுவது சிறிது காலத்திற்கு மட்டும் இன்பம் தரும் சிற்றின்பமே ஆகும். இச் சிற்றின்பத்தால் அறத்தால் வரும் நிலை யுடைய இன்பத்தை இழந்து விடுவர். பிறன் பொருளை வெளவுதல் அறனல்லாச் செயல் என்பது அவர்கள் எண்ண மாகும். ஐம்புலன்களைப் பாவ வழியில் செல்ல விடாது வென்றவர்களும் குற்றம் இல்லாத அறிவுடையவரும் ஆகிய பெரியோர் எவ்வளவுதான் வறுமை உற்றாலும், வறுமை காரணத்தாலும் பிறர் பொருளை அடையச் சிறிதும் விரும் பார். பிறனுக்குரிய பொருளை விரும்புதல் பெருங் குற்ற மாகும். அக் குற்றத்தை ஒழிக்காமல் மேற்கொண்டவர், எவ்வளவு அறிவுடையவராயினும், அவ்வறிவினால் ஆகிய பயனை அடையார். அறிவிற்குப் பயனாவது பிறனுடைய பொருளை விரும்பாமையாகும்.

இல்லறத்தில் நின்று தன் ஒழுக்க நெறியில் சிறிதும் தவறாது அருளாகிய அறத்தை விரும்பி நடப்பவர் பிறன் பொருளை விரும்பி அதனை அடைதற்குரிய குற்றமான வழிகளை நாடுவாரானால், அவர்கள் அழிந்து போவார். ஆகவே, பிறர் பொருளை அவாவிக் கொண்டு அதனால் ஆகின்ற உயர்வு எவ்வளவானாலும் அதனை விரும்புதல் கூடாது. ஏனெனில் அதனைப் பின்னால் துய்க்கும்போது அதன் பயன் நன்றாதல் இல்லை. தீயதாகவே முடியும். நாம்

பிறர்க்குரிய பொருளை வெள்வக் கருதாமல் இருந்தால் நம் செல்வம் என்றும் குறையாது. வளர்ந்துகொண்டே இருக்கும். திருமகளும்தான் இருந்து வாழ்வதற்குரிய இடமாகப் பிறன் பொருளை வெளவாதவனையே நாடுவாள்.

பிறனுக்குரிய பொருளை விரும்புதல் ஏதோ சாதாரணமிய குணம் என்று எண்ணிவிடுதல் கூடாது. அத் தீக்குணம் அழிவைத் தேடித் தரும். எனவே; பிறன் பொருளை வெளவக் கருதாமல், வேண்டா என்னும் குணமாகிய செருக்குடன், நாம் திகழ்வோமானால், நமக்கு வெற்றி உண்டாகும். இதனால் பகையும் பாவமும் வரும். இதனை நன்கு சிந்தித்துப் பிறர் பொருளை வெளவாது இருப்போமாக.

## 15. புறங் கூறாமை

வெஃகாமையாகிய குணம் மனத்தால் நிகழ்வது. புறங் கூறாமையாகிய குணம் மொழியால் வரக்கூடியது. ஆகவே இரண்டற்கும் தொடர்பு உண்டு. புறங் கூறாமை என்பது பிறரைக் காணாதபோது அவர்களை இகழ்ந்து உரையாமையாகும். புறங் கூறுதலும் ஒரு பெரிய குற்றம். ஒருவன் அறம் என்னும் சொல்லையும் தன் வாயால் கூறாது, பாவச் செயல்களைக் கூறுபவனாயினும், அவன் புறங் கூறும் இயல்பு மட்டும் இல்லாதவன் என்று பிறர் கூறும் பெயரை எடுப்பானாயின் அதுவே தலைசிறந்த மாண்பாகும். சிலர் காணாத போது இழித்துப் பேசுவர். அவர்களையே நேரில் கண்ட போது, முகத்தால் இனிமை காட்டிப் பொய்யாக நகைத்துப் பொய் நட்புப் பாராட்டுவர். இது பெரும் பாதகச் செயல். இது அறத்தைச் சிதைத்துப் பாவச் செயல்களைச் செய்வதைவிட மிகத் தீயதாகும். இதைவிட இறந்துவிடல் சாலச் சிறந்தது என்றே கூறலாம். புறங் கூறி

உயிர் வாழ்தல் மிகக் கொடிது. புறங் கூறாது உயிர் விடு தல் தரும நூல்கள் கூறும் உயர்வு ஏற்படும். ஆகவே புறங் கூறும் இழி செயல் வேண்டா. ஒருவரை நாம் வெறுப்பதா யின், அவர்களைக் கண்டபோது சிறிதும் தாட்சண்யம் பாராது, இழித்துப் பேசி விடலாம். பின்னுல் ஒன்றும் இழி வாகப் பேசுதல் கூடாது. புறங் கூறுபவன் அறனை நன்று என்று கூறினும் நாம் உண்மை என்று கொள்ளுதற்கு இல்லை. ஏனெனில் அவன் புறங் கூறும் இயல்பினனாய் இருத்தலின், அவன் மனம் அறிந்து கூறுகின்றான் என்று கூற இயலாது. அவன் புறங் கூறும் இயல்பில் இருந்து அவன் உள்ளத்தின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

பிறனொருவனைப் பற்றிக் கூறுபவன் தன் பழியையும் நினைத்து இப்படி அன்றோ பிறர் நம்மைப் பழிப்பர் என் பதை முன்னர் உணர்ந்து பின்னர்ப் பிறரைப் பற்றிப் புறங் கூறுதல் வேண்டும். புறங் கூறுபவர் குண்டுணிகள் ஆவர். அவர்கட்கு நட்பின் பெருமை இன்னது என்பதே தெரியாது என்னலாம். நல்ல நண்பர் இருவர் கூடி வாழ்வதைக் கண்டு பொறாமை கொண்டு ஒருவரைப் பற்றி ஒருவரிடம் கூறி அவர்கள் நட்பைப் பிரிப்பர். இதற்குக் காரணம் அவர் இனிய சொற்களைப் பேசி அயலாரோடு நட்புக் கொண்டு பழகுதலை அறியாத அறியாமையேயாகும். இதன் பயன் யாது? புறங்கூறுபவருக்கு எவரும் பகைவராக அமைவதே யாகும். இப்படிப் பேசிப் பழகியவர் தம்மை நெருங்கி நட் புடன் வாழ்பவர்களைப் பற்றியும் புறங் கூறித் திரிவர். இத் தகையவர் அயலாரைப் பற்றிப் புறங் கூறுவர் என் பதைச் சொல்லவும் வேண்டுமோ? புறங்கூறியே வாழ்வர். இப்படிப்பட்ட புறங்கூறி வாழ்பவர்களையும் இப் பூமி தாங்கி நிற்கிறது. என் செய்யும்? எல்லோரையும் தாங்கி

நிற்க வேண்டியது அதன் கடனாக இருத்தலின், இக் கொடியினையும் தாங்கவேண்டும் என்னும் காரணத்தால் தாங்கி நிற்கிறது.

இப்படிப் புறங் கூறுவதால் ஏற்படும் இழுக்கைப் பற்றிக் கூறுகின்றீரே. இதனின்றும் விடுதலை பெற்று உய்ய வழி இல்லையோ என்று சிலர் வினவலாம். அப்படி மனம் மூறிதல் வேண்டா. எத்தகைய தீய வழியிலிருந்தும் நீங்க மார்க்கம் உண்டு. நாம் பிறர் குற்றத்தை எடுத்துக் கூறும் போது நம் குற்றத்தைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் எந்த உயிர்க்கும் தீங்கு ஏற்படாது. வினைவயத்தால் மறு பிறவி ஏற்படினும் அப் பிறவியிலும் தீங்கு ஏற்படாது. இதுவே புறங் கூறும் இழி குணத்தை நீக்க வழியாகும்.

## 16. பயனில சொல்லாமை

மக்கள் பேசும் வாக்கின் கண் நிகழும் பாவம் நான்கு. அவை பொய் கூறுதல், கோள் சொல்லுதல், கடுஞ் சொல் பேசுதல், பயன் இல்லாத வார்த்தைகளைப் பகர்தலாகும். இந் நான்கனுள் பொய் கூறுதல் துறந்த முனிவர்களால் மட்டுமே கடியவல்ல செயலாகும். ஏனைய குறளையும், கடுஞ் சொல்லும் பயனில சொல்லுதலும் இல்லறத்தானால் கடியப்படவேண்டிய குணங்களாகும். இத் தீய குணங் களைக் கடிதற்கு வழி உண்டு. இன்சொல் கூறுவதால் கடுஞ் சொல் கூறுவதால் வரும் பாவத்தைப்போக்கிக்கொள்ளலாம். கோள் சொல் கூறுதலைப் புறங் கூறாமை என்னும் குணத்தை மேற்கொண்டால் போக்கிக்கொள்ளலாம். பயனில சொல் லாமையாகிய குணத்தை தனித்த முறையில் போக்கிக் கொள்ள வேண்டும். பயனில சொல்லாமை என்பது தமக்

கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுடன் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமையாகும்.

பயன் அற்ற சொற்களைப் பேசுவதனுல் பல தீமைகள் ஏற்படுகின்றன. அறிவுடையவர் பயனற்ற வார்த்தைகளைப் பேசுபவர்களை வெறுப்பர். ஏனையவர்களும் இகழ்ந்து கூறுவர். பயனற்ற சொற்களைப் பல நல்லறிஞர் முன்னிலையில் கூறுதல் நன்மை பயவாத செயல்களை நண்பர்களுக்குச் செய்வதை விடத் தீமையுடையதாகும். இப்படிப் பயனற்ற வார்த்தைகளைப் பேசுபவனை நீதி நெறி இல்லாதவன் என்று நல்லோர் கூறுவர். இந்தக் குணம் படைத்தவன் பண்பற்ற சொற்களைப் பலர் இடையே பகர்வனுயின் அவன் நீதி நெறியில் படாதவனுய் நற்குணம் அற்றவனுய் ஒதுக்கப் படுவான். சீர்மையுடையவர் என்பதற்கு அடையாளம் பயனுடைய சொற்களைப் பேசுவதே ஆகும். அப்படிப் பேசாது பயனற்ற சொற்களைப் பேசினுல் சீர்மை நீங்கிச் சீர்கேடு உண்டாகும். பயனற்ற சொற்களைப் பேசுபவனை மகன் என்றே கூற மாட்டார். அவனை மக்களுக்குள் பதர் என்றே கூறிவிடுவர். நீதியோடு கூடாத சொற்களைச் சொன்னுலும் அது ஏற்றுக் கொள்ளற்குரியதாகும். ஆகவே, பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தலே நலம் பயப்பதாகும். பயன் இன்னது பயன் இன்மை இன்னது என்று ஆராயும் அறிவு உடையவர் எந்தக் காலத்தும் பயன் இல்லாத சொற்களைப் பேசவே மாட்டார். பயன் அறிந்து பேசுதலாவது வீடு பேறும் மேற்கதிச் செலவும் முதலாயின அறிந்து பேசுதலாகும். மயக்கத்திலிருந்து நீங்கிய தூய அறிவுடையவர்கள் பயன் இல்லாத சொற்களை மறந்தும் கூறமாட்டார். அப்போது தான் அவர்கள் மருள் தீர்ந்தவர்கள் என்றும் குற்றமற்ற அறிவுபடைத்தவர் என்றும் கருதப்படுவர். எனவே, நாம்

பேசுவதாக இருந்தால் பயனுடைய சொற்களையே பேச வேண்டும். எக்காலத்தும் பயன் அற்ற சொற்களைப் பேசுதல் கூடாது.

## 17. தீவினை அச்சம்

தீவினையான செயல்களைச் செய்வது மட்டும் தீதாகாது. செய்வதற்கு நினைத்தலும் தீதாகும். அதனால் தான் அத் தீவினையைச் செய்தற்கு முதலில் அஞ்சுதல் வேண்டும். ஆனால் தீவினையைச் செய்வதற்கு எவரும் அஞ்சிவிடுவர் என்று கூறிவிட முடியாது. முன் செய்த தீவினையுடையவர் தீவினை செய்யச் சிறிதும் அஞ்சமாட்டார். ஆனால், சீரிய மக்கள் அம் மயக்கமான செயலைச் செய்ய அஞ்சி நடுங்குவர். இப்படி ஒரு சாரார் நடுங்குதற்கும் மற்றொரு சாரார் நடுங்காமைக்கும் காரணம் யாதாக இருக்கலாம் என்று கருதலாம். ஒரு சிலர் அஞ்சாமைக்குக் காரணம் அவர்கள் முன் பிறப்பில் தீவினைகள் பல புரிந்து வந்திருப்பதே காரணமாகும். அஞ்சுபவர் அஞ்சுதற்குக் காரணம் அத் தீச் செயலைப் புரிந்து பழகாமையே ஆகும்.

தீ தன்னைத் தொட்டவரைச் சுட்டெரிக்கும் தன்மையது. அது போலவே தீவினை என்பது எப்படியும் தீமையே நமக்குத் தேடித்தர வல்லது. ஆதலின், அத் தீயைக் கண்டால் நாம் அஞ்சுவது போலத் தீவினையைச் செய்வதற்கும் நாம் அஞ்சுதல் வேண்டும். தீயைக் காட்டிலும் இத் தீவினையினிடத்து ஏன் அச்சம் கொள்ளுதல் வேண்டுமெனச் சிலர் வினவலாம். தீ தீண்டினாரை மட்டும் சுடும் தன்மையது. ஆனால் தீவினையோ எனில் அப் பிறவியில் மட்டும் அன்றி அடுத்த பிறவியிலும், அத் தேசத்தில்

அன்றி எத்தேசத்திற்குச் சென்றாலும் அந் நேரத்தில் மட்டும் அன்றி எந் நேரத்திலும் சுடும் தன்மையுடையதாதலின் தீயினும் அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. உண்மையில் பேசுவோமானால் தீய செயல்களைத் தமக்குத் தீங்கு செய்தவர்கட்கும் செய்யாதவர்களிடத்தும் செய்யாதிருத்தல் அறிவினுள் எல்லாம் தலையாய அறிவாகும். மறந்தாயினும் பிறர்க்குத் தீங்கு செய்தல் கூடாது. அப்படித் தீங்கு செய்ய எண்ணினால் அறக் கடவுள் தீங்கு செய்யக் கருதியவனுக்குத் தீங்கினைச் செய்ய முன் வரும். அதாவது அவனை விட்டுத் தான் நீங்கிவிடும் என்பது புலனாகிறது. தீயவை செய்தற்குப் பல காரணங்கள் உண்டு. வறுமை காரணமாக நான் தீமை செய்தேனே ஒழிய மற்று வேறு எதற்கும் அன்று என்று காரணம் காட்டுவர். அது தவறான கொள்கையாகும். வறுமையை ஒழிக்க தீய செயலைப் புரிகின்றேன் என்று ஒருவன் கூறினால், அவன் வறுமையில் இருந்து மீளாமல் மேலும் வறுமையிலேயே ஆழ்வான் என்பதில் ஐயம் இல்லை. இவ் வறுமை இந்த ஒரு பிறவியில் மட்டும் பற்றி வாட்டி விட்டுவிடாது. அடுத்து வரும் பல பிறவிகள்தோறும் தொடர்ந்து தீமையைப் பயந்தே வரும். பொருள் வறுமை மட்டும் இவனுக்கு ஏற்படாமல் நற்குண நற்செய்கையாலும் இவனுக்கு வறுமை ஏற்படும் என்பதை நாம் மறத்தல் கூடாது. அதாவது நற்குண நற்செய்கை அற்றவனாய் வாழ்வான்.

தனக்குத் தீங்கோ துன்பமோ வாராதிருக்கவே எவனும் பார்த்துக்கொள்வான். அப்படிப்பட்டவன் தனக்குத் தீங்கோ நோயோ வராதிருக்க எண்ணினால் பிறர்க்குத் துன்பம் செய்யும் பாவச் செயல்களைப் புரிதல் கூடாது. செய்தால் மேலும் கெடுதியே அடைவான். ஏனெனில் எந்த விதமான

பெரிய பகையுடையாரும் அதனை ஒரு விதத்தில் நீக்கித் தப்பிப் பிழைப்பர்; ஆனால் வினைப்பகை அவன் பிழைப்பதற்குரிய மார்க்கத்தைக் காட்டாது. அவனை அழிக்கவே வழி தேடும். இதனை நல்ல எடுத்துக்காட்டாகக் கொண்டு விளக்கலாம். நிழல் நம் உடலை விட்டுப் பிரியாது, எவ்வளவு தூரம் சென்றாலும் நம்மோடு கூடவே தொடரவல்லது. யார் ஒருவர் தீய செயல்களைச் செய்கிறார்களோ அவர்கள் நிழல் உடலை விட்டு நீங்காது அவர்களுடைய பாதங்களில் மறைந்து நின்று, சமயம் வந்து வெளிப்பட்டுத் தோற்றம் அளிக்கிறதோ அதுபோலத் தீச் செயலால் ஆகிய தீங்காகிய பயன் வெளிப்பட்டு தீங்கினைப் பயந்தே விடும். இதனால் தீச் செயல் காலம் வந்தபோது வருத்த வல்லது என்பதை உணரலாம். எனவே தன்னைத் தீவினைக்கு ஆளாக்காமல் காத்துக் கொள்ளவும், தன் மாட்டுத்தானே அன்பு கொள்ளவும் விரும்பும் ஒருவன் தீவினையைச் சிறு அளவேனும் செய்யாதிருப்பானாக. இந்தப் பழக்கத்தை ஒருவன் மேற்கொண்டு—அதாவது செந் நெறியில் சென்று தீ நெறியில் செல்லாது, தீவினைகளைச் செய்யாது—ஒழுகுவானானால் அவனுக்குக் கெடுதி வாராது என்பதை உறுதியாகக் கொள்க.

## 18. ஒப்புரவறிதல்

ஒப்புரவறிதலாவது உலக நடை அறிந்து ஒழுகுதலாகும். இதனை அறிந்து செய்வதற்கு அற நூல்களில் கூறப்படும் முறையில் ஒழுகுதல் வேண்டும் என்பதில்லை. அப்படி அற நூல்களுள் கூறப்படும் ஒழுக்க முறையில் நடப்பது வேத நடை எனப்படும். இந்த நடை தாமே அறிந்து செய்யும் தன்மையது. இனி ஒப்புரவு ஆற்றும் முறையைச் சிறிது கவனிப்போமாக:

நாம் பிறர்க்கு உதவி புரிந்தால், அவ்வுதவிக்கு மறு உதவி அவர்கள் பின்னால் செய்வார்கள் என்று கருதிச் செய்தல் கூடாது. நாம் இந்தச் சமயத்தில் மேகத்தினை நினைவுக்குக் கொணர்தல்வேண்டும். அது மழையைப் பொழிகிறது. ஆனால் அது உலக மக்களிடமிருந்து ஏதேனும் கைம்மாறு எதிர்பார்க்கிறதோ? இல்லை. எனவே பிரதி உபகாரம் கருதாமல் பிறர்க்கு உதவி புரிதல் வேண்டும். பொருளைத் தேடவேண்டும். அதனையும் நன்கு முயன்று தாமாகத் தேடவேண்டும். தேடிய பொருளை என்ன செய்ய வேண்டும்? பேழையில் பூட்டிச் சேமித்து வைக்கவேண்டுமோ? அற்றன்று. செல்வத்தின் பயன் ஈதல் ஆதலின், அதனைத் தகுதி உடையார்க்கு ஈந்து இன்பம் பெறுதல் வேண்டும். உலக நடை அறிந்து அதன்படி ஒழுகுதல் ஏதோ எளிய செயல் என்று கருதி விடுதல் கூடாது. இஃது ஓர் அரிய செயல். இதனைவிட நல்ல செயல் இவ்வுலகிலும், தேவலோகத்திலும் காண முடியாது என்று கூறுவோமானால் இதனைவிட வேறு என்ன கூறுவது? ஏன் தேவலோகத்திலும் இதனைப் போன்ற நல்ல செயலைக் காண்டல் அரிது எனக் கேட்கலாம். தேவலோகம் ஈவாரும் ஏற்பாரும் இல்லாத லோகம். எல்லோரும் ஒரு தன்மைத்தாய் வாழும் இடம் அந்த இடத்தில் எப்படி உலக நடை அறிந்து ஈய முடியும். ஈய முன் வந்தாலும் ஏற்பார் யார்? இவ்வுலகத்திலும் இதனைப்போல் நல்லது பிற இல்லை என எப்படிக் கூற முடியும் என்று மறித்தும் வினவலாம். இச்செயல் எவரும் செய்யக்கூடிய செயல். இன்னார்தான் இதனை மேற்கொள்ள முடியும் இன்னார் மேற்கொள்ள முடியாது என்று கூற இயலாது. இப்படி உலக நடை அறிந்து அதன்படி நடப்பவன்தான் உடலில் உயிர்

பொருந்தப் பெற்று வாழ்பவன் என்று கூறலாம். இவ்வாறு நடவாதவனை என்னென்று கூறலாம்? செத்தவர்களுள் ஒருவன் என்றுதான் கூறலாம். இதனால் வேத நடையில் வழு ஏற்படினும், அதனைத் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் உலக நடையில் தவறினால் அதனின்றும் தப்பிக்கொள்ள வழி இல்லை என்பது புலனாகிறதல்லவா?

என்னே உலக நடை அறிந்து அதன்படி பிறரை உபசரிப்பவனுடைய பெருமை! அவனுக்கு எதனை உவமை கூறலாம். நல்ல நீர் நிறைந்த பொதுக் குளத்தினை அன்றோ உவமை கூறலாம். இப் பொதுக் குளம் நன்னீரை நிரம்பப் பெற்றிருக்குமானால் எவர்க்கும் நீரைத் தந்து இன்பம் தர வல்லதன்றோ? இதுபோலவே உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவனது செல்வம் பலருக்கு நன்மை பயக்கவல்லது. இவனுக்கு ஊருணியை உவமை காட்டி நின்று விடுவதில் மட்டும் பயன் இல்லை. ஊர்க்கு நடுவே எவரும் எளிதில் பயன் அடையும் வண்ணம் பழுத்து நிற்கும் மரம் ஒன்று இருக்குமானால் அதுவும் அவனுக்கு உவமையாகும். பழம் தரும் மரம் மட்டும் உவமை கூறி நாம் அமைதல் கூடாது. நோய் தீர்க்கும் மரமாகவும் இவனைக் கூறலாம். அம் மரமும் எளிதில் கொள்ளுதற்குரியதாய், மறைவிடத்தில் இல்லாததாய் காலத்தால் மாறுபடாததாய் இருத்தல் வேண்டும். இது போலவே ஒப்புரவு அறிபவன் எளிதில் உதவுபவனாய் காலத்தால் மனம் மாறுபடாதவனாய் இருத்தல் வேண்டும். இப்படி ஊருணியாகவும், பயன் தரு மரமாகவும், மருந்தாகும் மரமாகவும் உள்ளவனை எந்தச் சொல்லால் குறிப்பிடலாம். பெருந்தகையாளன் பேர் அறிவாளன். நயன் உடையான் என்றல்லவோ கூறலாம்.

இப்படி ஒப்புரவுடன் ஒழுகுதல் ஒரு கடமையாகும். இவர்களைக் கடமை அறிந்த இயற்கையறிவுடையவர் என்று கூறலாம். இவர்கள் பொருள் இல்லாது வறுமையுற்ற காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரமாட்டார். ஒப்புரவு செய்தலை யுடையவன் தரித்திரன் ஆவது தவிராது செய்யும் தன்மையுடைய அவ் வொப்புரவுகளைச் செய்யப் பெறாது வருந்துகின்ற இயல்பேயாகும். இவர்கள் வருந்தும் இயல்பு தாம் நுகர வேண்டியதை நுகரவில்லையே என்பதற்காக அன்று பிறர்க்குத் தம்மால் ஆனதைச் செய்ய முடியாமையாகிய வருத்தமே என்பதை உணர்தல் வேண்டும். ஒப்புரவுக் குணத்தை மேற்கொள்வதனால் கேடு வருகின்றது என்றாலும், அதனைத் தன்னை விற்றாகில் மேற்கொள்ள வேண்டியதுதான். ஏனெனில் ஒப்புரவினால் வரும் கேடு, கேடாகாது. புகழே ஆகும்.

## 19. ஈகை

ஈகையாவது ஏழைகளாக வந்து கேட்டவர்க்கு இல்லை என்னாது கொடுத்தலாகும். இதன் பயன் இம்மையில் எய்தும் பயனிலும் மறுமையில் எய்தும் பயனுக்குப் பெருந்துணை செய்ய வல்லது.

ஈகையாவது கொடுத்தல். அக் கொடுத்தலை எவர்க்கும் கொடுத்தலாம் என்பது. துவக்கத்தில் கூறியதற்கேற்ப ஏழை எளியவர்கட்கு ஈவதையே ஈகை என்பது அறிஞர் துணிபு. இவ்வாறு ஏழைகட்குக் கொடாது பிறர்க்குக் கொடுப்பது ஏதோ பின்னால் வரும் குறிக்கோளை மனத்தில் கொண்டு கொடுக்கப் படுவதாகத்தான் நாம் கொள்ளவேண்டும். கொடுத்தலைப்போல நலம் தருவது பிற இல்லை என்றும் கூறலாம். நாம் பொருளை ஏற்கும் வழி நல் வழியாக இருக்க

லாம். நியாய வழியாகவும் இருக்கலாம். ஆனால் அவ்வாறு பிறர் கொடுக்க நாம் பெறுதல் அத்துணை பெருமையாகாது. நாம் பிறர்க்கு கொடுத்துவிடலாம். அப்படிக் கொடுப்பதனால் வீட்டின்பம் கிடைப்பது அரிது என்று பிறர் கூறுகின்றார் என்றாலும் கொடுத்து மகிழ்தலே சாலச் சிறப்புடையது.

கொடுப்பதிலும் சில முறைகளைக் கையாளுதல் நலம். பிறன் நம்மை வந்து கேட்கின்றான் என்றால், அவனது இன்மை காரணமாகத்தான் அவன் கேட்கின்றான் என்பது நமக்குப் புலனாகிறதன்றோ? அப்படிக் கேட்டவனுக்கு நாம் உதவி செய்வதாயின், மீண்டும் அவன் பிறன் ஒருவனிடம் சென்று என்னிடம் ஒன்றும் இல்லை. ஆகவே கொடுத்திடுக என்று கூறாதபடி உதவுதலே சிறப்புடைய செயலாகும். இப்படி ஈபவர்களையே நற்குல மக்கள் என்றும் கூறலாம். இப்படிக் கொடுப்பதில் மற்றொரு குறிப்பும் உள்ளது. அதாவது ஏழை ஒருவன் தன்னிடம் வந்து 'ஐயா, யான் எதுவும் அற்ற பாவி. ஆகவே, எனக்கு ஈக' என்று கூறுதற்கு முன்பே, அவனது வறுமையை உணர்ந்து ஈதல் வேண்டும். மேலும், 'நானே பொருள் இல்லாதவனாக உள்ளேன். நீ வந்து என்னைக் கேட்கின்றனையே' என்று கூறாமலும் ஈதல் வேண்டும். பிறரை அடுத்து யாசித்தல் இழிவு என்று நாம் அறிந்தது மட்டும் அல்லாமல், யாசித்தவர்க்குக் கொடுப்பேன் என்று இருக்கின்ற ஒருவன் தன்னிடத்தில் வந்த யாசகன் தான் கொடுப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடைவானோ அல்லனோ என்று ஐயுறுதலும் ஐயுற்ற அவன் பின்னர் வந்த யாசகனுக்குக் கொடுத்த பொருள் இனிமையைக் கொடுக்கவில்லையாயின், வாங்கியவன் முகம் இனியதாகாது என்றும் அவ்வாறு, ஆகாதிருக்கும்போது ஈந்தவனுக்கு இன்பம் தராது துன்பமே தருவதால் ஏழை மக்

களுக்குக் கொடுப்பேன் என்று இருக்கின்ற ஒருவன் தன் உடல் பொருள் ஆவி மூன்றும் கொடுத்தற்கே உரியவனாக இருத்தல் வேண்டும்.

பசித் துன்பம் மிகக் கொடியது. அது உண்டானபோது அதனைப் பொறுத்திருத்தலே சிறந்தது என்னலாம். தவத்தால் வலிமையுடையார்க்கு வலிமையாவது காற்று, மழை வெயில் இவற்றை மட்டும் பொறுத்தல் மட்டும் பொறுமை ஆகாது. தம்மையுற்ற பசியைப் பொறுத்தலே ஆற்றுதல் என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட பசியை உண்டி கொடுத்து உபசரிப்பவர் உண்மையில் ஆற்றல் உடையவர் அன்றோ? அவர்கள் ஆற்றல் பசியைப் பொறுக்கும் தவசிகளின் ஆற்றலினும் முன் நிற்கவல்லதன்றோ? எதனால் தவசியர் ஆற்றலினும், இல்லறத்தார் ஆற்றல் தலைசிறந்தது. தவசியர் தாம் பசித்து இருக்க வேண்டியவர்கள். பிறர் பசியை ஒழிக்கவும் இயலாதவர்கள், ஆனால் இல்லறத்தாரோ பிறர் பசியையும், போக்க வல்லவர். தமக்கு நேர்ந்த பசியையும் நீக்க வல்லவர் ஆதலின் தவத்தினரினும் ஆற்றல் வாய்ந்தவர்களே. பிறருடைய பசியை ஈகையால் போக்குவதில் பல நன்மைகள் உண்டு. அவற்றுள் ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுவோமாக. ஒருவன் இப்பிறப்பில் புண்ணியப் பயனால் செல்வம் பெற்று வாழ்கின்றான் என்றால் எச் செல்வச் சிறப்புடன் அடுத்த பிறவியினும் வாழ்வான் என்று கூற இயலாது. ஒரு வறிய குடியினும், சென்றுப் பிறக்கலாம். ஆதலால் இப் பிறப்பில் அடைந்த செல்வத்தைப் போலவே அடுத்த பிறவியினும் பெற்று இன்பத்தை நுகர வேண்டுமானால் ஆதரவு அற்ற ஏழை எளியவர்கட்கு ஈந்து அவர்கட்குற்ற பசியினைப் போக்கி வருவாராயின், தாம் பொருளைச் சேமித்து வைக்கும் இடம்

அழிந்து சேமித்து வைத்தவராவார், அடுத்த பிறவியிலும் உதவ வழி தேடியவராவார். மேலும் இப்படிப் பங்கிட்டுப் பங்கிட்டு தனக்குக் கிடைத்த செல்வத்தை ஏழை எளியவர்கட்கு ஈந்து வருவாராயின், அவர்கள் எக்காலத்தும் பசி என்னும் கொடிய நோயால் வருந்துதல் அரிது. வருந்தவே மாட்டார். பசி ஒரு தீப்பிணி. அது உடம்பினின்று ஞான ஒழுக்கங்களை அழித்து அதனால் உடம்புக்குத் துன்பம் செய்ய வல்லது.

இப்படிப் பல்லாற்றானும் இன்பம் தரும் ஈகைப் பண்பை இல்லறத்தான் மறவாமல் மேற்கொள்ள வேண்டும். ஈவதால் இன்பமே வரும். இதனை அறியாது செல்வத்தை அடைத்து வைத்தவர் அதனை இழந்து விடும் அருள் இல்லாதவர்களே யாவர். பிறர்க்கு ஈயாது தாமே உண்டு வருவாராயின், அது பிறர்பால் சென்று இரப்பதை விட மிக இழி செயலாகும். ஒருவனுக்குச் சாதலைப் போன்ற துன்பம் தருவது உளதோ? இல்லையன்றோ? ஆனால் அதுகூட இன்பம் தர வல்லது என்றும் கூறலாம்; எப்போது? நாம் பிறர்க்கு ஈயும் குணம் அமையாதபோது என்க. ஆகவே பிறர்க்கு ஈவதே சாலச் சிறந்த குணமாகும்.

## 20. புகழ்

இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகி இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி என்பதே புகழ் என்னும் சொல்லுக்குரிய பொருளாகும்.

மக்கட்கு அருமையாக உள்ளது உயிர். அதற்குப் பயனாக உள்ளவை ஏழை எளியவர்கட்கு ஈதலும், அங்ஙனம் ஈவதால் புகழ் தோன்ற வாழ்வதுமே யாகும். இதனால்

கல்வி யறிவாலும், ஆண்மைத் திறத்தாலும் பெறக்கூடிய புகழ் அத்துணைச் சிறப்பினைப் பெறாது, ஏழைகட்கு ஈவதால் பெறும் புகழே புகழ் எனப்படும் என்க. இப்படி ஈபவர்களை யாவரும் புகழ்ந்து பேசுவர். அப் புகழ் உரைகள் செய்யுள் வடிவிலேனும் உரைநடை வடிவிலேனும் புலவர்கள் புகழ்ந்து பேசும் புகழ் உரைகளே சாலச் சிறந்தவை. என்றும் அழியாதவை என்று ஒருவாறு மிகுத்துப் பேசலாம். புகழை ஏன் ஒவ்வொருவரும் பெற முயலவேண்டும்? முந்த வேண்டும் என்றுகூட வினவலாம். காரணம் என்னவெனில், உலகில் எல்லாம் அழியக் கூடியவையே. ஆனால் புகழோ எனில் என்றும் அழியாதது. தனக்கு நிகர் ஒன்றையும் பெறாதது இதனால் நிகர் அற்றது எனில், புகழ் பெற உயிரும் கொடுக்கப்படுகிறது. அரிய பொருள்களும் கொடுக்கப்படுகின்றன. இப் புகழின் சிறப்பு நிலவுலகு எல்லையில் மட்டும் நின்று விடாது. தெய்வலோகம் அளவும் எட்டிச் செல்ல வல்லது. அப்படிச் சென்ற காலத்து அவ் விண்ணுலகம் தன்னகத்தே கொண்ட விண்ணவர்களையோ, ஞானிகளையோ போற்றுதல் புரியாது. ஈந்து புகழைத் தேடியவனையே புகழ்ந்து போற்றும்.

நல்ல சதுரப்பாட்டையுடையவர்கள் புகழால் கேடும், சிறப்பும் வருவதாயினும் அவற்றை ஏற்காது தள்ளிவிட மாட்டார்கள். ஆகவே நாம் உலகில் தோன்றினால் புகழுக்குக் காரணமான குணத்தோடு தோன்றவேண்டும். அப்படிப் புகழோடு தோன்றவில்லையாயின் தோன்றாமல் இருப்பதே நலமாகும். தோன்றும்போதே எப்படிப் புகழுக்குக் காரணமான குணத்துடன் தோன்ற இயலும்? தோன்றிய பின் அன்றோ புகழைத் தேடும் குணத்தைப் பெறமுடியும் என்று நாம் நினைக்கலாம். இங்ஙனம் திருவள்ளுவர் கூறியதன்

நோக்கம் பூமியில் பிறந்தவர்கள் யாவரும் எவ்வாறேனும் புகழைத் தேடிக் கொள்ளவேண்டும் என்பதேயாகும். எனவே புகழ் தோன்ற வாழவேண்டும். இது பெறாமல் பிறரால் நாம் இகழப்பட்டால், அது குறித்து நம்மை இகழ்ந்தவர்களை நிந்தித்தலில் பயன் இல்லை. நம்மை நாமே நொந்துகொள்ள வேண்டும். புகழைப் பெறாதது பெரிய வசையாகும். புகழ்தான் இறந்த பின்னும் எஞ்சி நிற்பது. அந்தோ! புகழ் பெறாமையால் மக்கள் யாக்கை மட்டும் இழிநிலை அடைகிறது என்று நினைப்பதற்கு இல்லையே. நிலமகளும் அன்றோ பாதிக்கப்படுகிறாள். அவள் எல்லோரையும் தாங்குவது போலப் புகழைப் பெறாதவர்களையும் தாங்க வேண்டியவளாய் இருக்கிறாள். அப்படி அவர்களைத் தாங்குவதனால், பூமியினை பொருள்களைக் குறைத்து விடுகிறது. என்னே புகழ் பெறாமையால் உண்டாகும் கெடுதி! இதனால் புகழ் பெறா உடம்புகள் பாவ உடம்புகள் என்பது அன்றோ புலனாகிறது? ஆதலின் யாதொரு வசையும் இன்றி வாழ்கின்ற வாழ்வே வாழ்வாகக் கருதப்படுவதுபோல இவ்வுலகில் இசையாகிய புகழுடன் வாழ்வதே நல் வாழ்வாகும். இப் புகழைப் பெறாது வாழ்பவர் இறந்தவர்கட்கு ஒப்பானவர்களே. இதனை உணர்ந்து புகழுடன் வாழ ஒவ்வொரு இல்லறத்தானும் முயலவேண்டும். இதற்கான குண நலங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இக் குணங்களைப் பெற்றால் புகழ் பெறுதலோடு நில்லாமல் தேவலோகத்தில் போகமும் பெற்று இன்புறலாம். உலகில் புகழ் உடம்பு கிடைக்கின்றது. இறந்துபட்ட பின், தெய்வ உடம்பு மறு உலகில் கிடைக்கப் பெறுகிறது. இந் நிலையில் உள்ளவர்களை வித்தகர் என்று நீதி நூல்கள் கூறுகின்றன. இவர்கட்குப் புகழ் காரணமாக உண்டாகும் கேடும் மாணமும் தாழ்வுடையனவாக அறிஞர்க

ளால் கருதப்படமாட்டார். ஏனெனில் இந் நிலை எய்துவதற்கு அறிவின் மிகுதியே காரணமாகும். இஃது எல்லோர்க்கும் எளிதில் கிட்டுதற்குரிய தன்று. இப்படிப்பட்ட புகழை அடையவே உலகில் நாம் தோன்ற வேண்டும். இதை அடையாதபோது உடம்பை எடுத்துப் பயன் இல்லை. இதைவிட நாம் பிறவாது இருத்தலே நன்று. புகழ் பெறாது வாழ்பவர் தம்மையே நொந்து கொள்ளவேண்டும். அப்படிப் புகழ் பெறாதவர் தம்மை நொந்து கொள்ளாதவர் தம்மை மட்டும் பிறர் இகழும்போது இகழ்ந்தவர்களை நொந்து கொள்வதால் யாது பயன்? ஒரு பயனும் இன்று அல்லவா? எனவே உலகில் புகழாகிய எச்சத்தினை எவ்வாறேனும் பெறுதல் வேண்டும். அப்படிப் பெறாராயின் அஃது அவர்க்குப் பெரிய வசையே ஆகும். உலகில் வாழும் மக்கள் புகழோடு வாழ்ந்திலர் எனில், அப்படி வாழாமையால் ஏற்படும் இகழ்ச்சி புகழைப் பெறாதவர்கட்கு மட்டும் வருவதன்று. இத்தகையவர்களைச் சுமந்த நிலத்துக்கும் தீராத வசையே யாகும். அந் நிலம் நல்ல விளைவையும் தராது. ஏன் அந் நிலம் விளையுள் குறைகிறது எனவும் வினவலாம். புகழ் பெறாத உடலங்கள் பாவ உடம்புகள் ஆதலின், அவற்றையும் நாம் தாங்கி நிற்கவேண்டி இருக்கிறதே என்னும் வெறுப்பே யாகும்.

இவ்வாறெல்லாம் புகழ் அடைய வேண்டிய முறைகளை எடுத்துக் கூறியதனால், வசை இல்லாத வாழ்வுடையவர்கள் தாம் நல் வாழ்வுடையவர். அதாவது புகழோடு கூடிய வாழ்வுடையவர்கள் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு புகழ் இன்றி வாழ்பவர் வாழ்வு ஒரு வாழ்வு ஆகாது. இந்த வாழ்வை அடைய எவரும் முந்த வேண்டும்.

இதுகாறும் கூறி வந்த பண்புகள் இல்லறத்தானுக்குரிய பண்புகளாகும். குடும்பத்தானுக்குரிய குண நலங்களாகும். இப் பண்பின்படி ஒழுகவே நாயனார் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று விதந்து கூறினார். இக் குணநலப்படி ஒழுகினல் மக்கள் உடம்பைப் பெற்றவர் அவ்வுடம்பைப் பெற்றதனல் ஆகிய பயனைப் பெறாமல் போகார். இங்குக் கூறப்பட்ட ஒழுக்க முறைப்படி நாம் யாவரும் ஒழுக முற்படுவோமாக.



# 3. துறவற இயல்.

உலகில் மக்கள் மேற்கொள்ளும் நெறிகள் இரண்டு. ஒன்று இல்லறம். மற்றொன்று துறவறம். இரண்டும் அற நூல்களில் விதிக்கப்பட்ட முறைப்படி மக்களால் மேற்கொண்டு நடத்தப் பெறின், மோட்சவாயிற்குத் துணையாக இருப்பனவே ஆகும். ஆனால் ஈண்டு மோட்ச வாயில் என்று குறிப்பிடப்பட்டது. துறவற ஒழுக்கத்தில் நின்று ஒழுகவேண்டிய முறைகளைப்பற்றிக் கூறி அவற்றின் வழியே மோட்சவாயிற்கு வழி என்பதைக் குறிப்பிடுவதே நோக்கமாகும். இனி முறையே துறவறமாவது யாது? அவற்றிற்கென ஓதப்பட்ட பண்பு முறைகள் யாவை என்பனவற்றைச் சிறிது கூறுவோமாக.

துறவறமாவது இல்லறத்தின் வழி தவறாது நடந்து அறிவு நிலை வாய்க்கப் பெற்றவராய் மேல் வரும் பிறவிகளில் இன்னும் என்னென்ன துன்பங்களை அனுபவிக்க வேண்டுமோ என்பதை எண்ணி, பிறவா நெறியாகிய மோட்ச இன்பப் பேற்றைப் பெறும் பொருட்டுத் துறந்தவர்க்குரிய அறமேயாகும். இத் துறவறம் இரு வகைப்படும். நாம் செய்யும் செயல்களில் காணப்படும் குற்றங்கள் நீங்கப் பெற்று, அந்தக் காரணங்களால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் தூய்மை அடையும் பொருட்டு காக்கப்படும் விரதங்களும் அவை தூய்மை ஆனபோது தோன்றுவதாகிய ஞானமும் ஆகும். விரதம் என்று இங்குக் கூறப்படுவது உணவு நிலை குறித்துக் குறிப்பிடப்படுவதன்று. ஆனால் இந்த அறத்தைச் செய்தால் இந்தப் பாவம்

ஒழியும் என்று அறிந்து தம் வன்மைக்கு ஏற்ப ஒரு முடிவுக்குள் அமைத்துக் கொள்ளுதலாகும். இனி அவ்வறங்கள் எவை என்பதை முறையே காண்போமாக.

## 1. அருளுடைமை

துறவற நெறிக்கு முதற்கண் வேண்டற்பாலது அருள் உடைமையே ஆகும். எங்ஙனம் இல்லற நெறிக்கு அன்புடைமை இன்றியமையாததோ அவ்வாறே துறவற நெறிக்கு இஃது இன்றியமையாதது. அன்புடைமை தொடர்பு பற்றி வருகின்ற பண்பாடு. ஆனால் அருளுடைமையோ எனில், அவ்வாறு அன்று. தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்களிடத்தும் காட்டப்படுவதாகிய கருணையே ஆகும். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவரைத் தானே அந்தணர் என்றனர் முன்னோர். அதாவது துறவிகள் முனிவர்கள் என்றனர். செல்வங்களுள் சிறந்த செல்வமாகக் கருதப்படுவது இவ்வருளுடைமையே ஆகும். பொருட் செல்வம் செல்வமாகாதோ எனில் ஆகாது. ஏனெனில், பொருட் செல்வம் இன்னார் இடத்தில் இருத்தல் தகும் இன்னாரிடத்தில் இருத்தல் தகாது என்று சிறிதும் எண்ணாமல் எல்லாரிடத்திலும் சென்று தங்கும் இயல்புடையது. இழிந்தவரிடத்தும் இருக்கும் குணம் வாய்ந்தது. அப்படி இருக்க அதனைச் செல்வம் என்று கூறி விடலாமோ? அருளால் வரும் செல்வம்தான் உயிர்களை ஓம்ப வல்லது. அப்படி ஓம்பிய பலனால் மேம்பாடு உறுதலாகும். எனவே எந்த விதத்திலும் நன்றாகிய மார்க்கத்தில் நின்று அவ்வருளையே பெறுதற்கு முயலவேண்டும். எந்த விதத்திலும் என்று இங்கு விதந்து கூறியது ஐம்பொறிகளால் அறியப்படும் காட்சியும், குறிகளைக் கொண்டு ஆராய்ந்து உணரப்படும் அனுமானமும், இறைவனாலும் இறைவன்

அருள் பெற்ற பெரியோர்களால் இயப்பப் பெற்ற ஆகம நூல் அளவைகளாலும் என்ற மூன்று விதத்திலும் ஏனக் கொள்ளுதல் வேண்டும்; அருளே நமக்குத் துணையாவது என்பது எல்லாச் சமயத்தவர்க்கும் ஒத்த கருத்தாகும். இந்த அருளைப் பெற்றவர் இருள் நிறைந்த துன்ப உலகத்தில் புகமாட்டார். துன்ப உலகம் என்றது நரகத்தை என்று அறிக. மேலும் இவ் வருள்படைத்த பெரியோர்கள் உலகில் உள்ள உயிர்களைப் போற்றி அவற்றின்பால் அருளினைக் காட்டுகின்றனர். ஆதலின் அவர்கட்குத் தம் உயிர் அஞ்சும் தீவினைகள் உண்டாகமாட்டா. மறுமையிலும் நரகத்தை எட்டிப் பார்க்க மாட்டார்கள்.

அருளையே தம் கடமையாகக் கொண்டு ஆள்பவர்க்குத் துன்பம் என்பதே வராது. இதற்குச் சான்று வேண்டு மானால் காற்று உலாவும் இவ்வுலகில் வாழ்பவர்களே உரிய வர் ஆவார். இவ்வாறு உலகர் சான்றாவர் என்பது உலகப் பெருமக்கள் சாட்சியாவர் என்பதாம். அப் பெருமக்கள் யாவரும் இதுவரை அருளுடையவர் துன்புற்றனர் என்று எவர்க்கும் கூறியது இல்லை. அருள் இன்றிக் கொடுமை செய்பவர் அறத்தைச் செய்யாது தாம் துன்புறுகின்ற நிலைமையில் வாழ்பவர்களே ஆவர். பொருள் எப்படி இவ் வுலகில் வாழ இன்றியமையாததோ அதுபோலவே அவ் வுலக வாழ்விற்கு—வீட்டுலக வாழ்விற்கு—அருள் மிக மிக இன்றியமையாதது. ஆனால் பொருள் செல்வத்திற்கும் அருள் செல்வத்திற்கும் வேறுபாடு உண்டு. பொருள் செல்வத்தினை நாம் இழந்தோமானாலும், மீண்டும் அதனைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அருள் செல்வத்தினை நாம் பெற்று இழந்தால், அதனைப் பெறுதல் அரிது. அவர்கள் வாழ்வு நல்வாழ்வாகாது. அழிவு வாழ்வே ஆகும்.

அருள் இல்லாதவன் செய்கின்ற அறம் அறம் ஆகாது. அது எது போன்றது எனில் ஞானம் இல்லாத ஒருவன் மெய்ப்பொருளை உணர்ந்தால் எப்படியோ அப்படியாகும். இதனால் ஏனைய அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமானது என்பதை உணர வேண்டும். இத்தகைய நன்மை தரும் அருளாகிய குணம் அமையாமையால்தான் பலர் பிறரைத் துன்புறுத்த முந்துகின்றனர். அப்படித் துன்புறுத்தச் செல்பவர், தம்மை ஒருவர் துன்புறுத்த வந்தால் தாம் அப்போது எந்நிலை உறுவர் என்பதைச் சிறிதும் எண்ணினால், பிறரை யாரும் துன்புறுத்தப் போகார். இவ்வாறு எண்ணி ஒவ்வொருவரும் நடந்தால் அருள் தானாக உண்டாகும். எல்லா உயிர்களிடத்தும் அருள் பிறத்தற்கு இதைவிட வேறு உபாயம் என்ன இருக்கிறது?

## 2. புலால் மறுத்தல்

மேலுலகை அடைய விரும்புபவர் அருளுடையவரானால் உயிர் இனங்களின் தசையை உண்ண விரும்பார். புலால் உண்ணை எண்ணமுள்ளவன் தன் உடலை ஓம்புவதற்காகப் புசிக்கின்றேன் என்பானேயானால் அவனிடம் அருள் குடி கொள்ளாது. அவனை அறிவீனன் என்றும் கொடியவன் என்றும் உலகம் இழித்துக் கூறும். பொருளின் பயனை ஒருவன் பெறவேண்டுமானால், அதனைப் போற்றுதல் வேண்டும். அதுபோலவே அருளின் பயனை அடைய வேண்டுமென்பவன், ஊன் உண்டலை ஒழித்தல் வேண்டும். சிலர் ஊன் தின்றால்தான் என்ன? ஊன் தின்னுதல் வேறு அருளுடையராதல் வேறு என்று கூறித் தர்க்கிப்பர். என்ன தான் அருள் உடையவராயினும் ஊன் தின்பவர் கொடியரே. மாமிசம் புசிப்பவர் மனம் அருளைப் பற்றிச் சிந்திப்பதுகூட அரிது. கொலைத் தொழில் செய்யவல்ல ஆயுத

மாகிய வில்லும் அம்பும், கத்தியும் வைத்திருப்பவன், அவ் வாயுதங்களால் ஆன பயனாகிய கொலைத் தொழிலைச் செய்யாமல் இருப்பானோ? இரான். அதுபோலவே, புலால் புசிப்பவர், கொலைத் தொழிலை மேற்கொள்ள மனம் இடம் கொடுத்தே தீர்வர். அவர்கட்கு அருள் பிறத்தல் அரிது. அருள் எனில் கொலை செய்யாமையே யாகும். அருள் இன்மை யாது எனில் கொலை செய்தலே யாகும். ஆகவே, புலால் புசியாதிருத்தலே நன்மை தருவதாகும். புண்ணிய மும் ஆகும். ஊன் உண்பவனை நரகம் தன்னிடத்தே கொண்டு சேர்த்துக் கொள்ளும். அவனை விட்டொழிக்கச் சிறிதும் விரும்பாது. அதாவது ஊன் உண்டலால் ஏற்பட்ட பாவத்தால் நரகத்தில் நெடுங்காலம் இருந்து துன்புறுவான் என்க. இப்படிக் கூறியதன் நோக்கம் கொலை செய்பவனுக் குத் தானே பாவம். உண்பவனுக்குப் பாவம் ஏது என்று கூறுவார்களேயானால் அவர்கட்கும் அறிவிக்கவே நரகம் ஊன் தின்பவனையும் தன் இடத்து வைத்துத் துன்புறுத் தும் என்க. மற்றும் அவர்கட்கே வேறு வழியில் பதில் கூறலாம். ஊன் தின்பவர் இல்லையாயின், ஊனைத் தருகின்ற உயிர்ப் பொருள்கள் ஏன் கொல்லப்படும்? ஆகவே, ஊன் உண்டலை ஒழித்தால் உயிர் இனங்கள் கொல்லப்படாமல், அருட் குணம் எங்கும் நிலவும் என்க.

அந்தோ! ஊனை மக்கள் ஏன்தான் உண்கின்றனரோ தெரியவில்லை. அவ்வூன் உயிர் இனங்களின் புண்ணல்லவா? இதனைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டாவோ? ஆகவே, அறிவுடையவர்கள், உயிர் நீங்கிய பின், பிணமாகக் கருதப் படும் அப் பொருளை உண்ணமாட்டார்கள். அறிவினர் தாம் ஊன் உண்டு வாழ்வர். பல யாகங்கள் மட்டும் செய் தால் புண்ணியம் கிடைக்கும் நன்மை கிடைக்கும் என்று

கருதவேண்டா. ஓர் உயிரையும் கொல்லாது ஊன் உண் ணாது வாழ்வதே தலைசிறந்த புண்ணியமாகும். யாகத்தைச் செய்வதனால் வரக்கூடிய பயனைவிடப் பெரும் பயன் அடைவர். உயிர் இனங்களும் புலால் உண்ணாதவனைக் கை கூப்பித் தொழுது வணங்கும். ஊன் உண்ணாதவன் மறு பிறவியில் தேவரினும் சிறந்தவனாய் விளங்குவான் என்க.

## 3. தவம்

தவம் என்றால் என்ன? மனம் தன் போக்கில் போகாமல் தடுத்து நம் வசமாக்குவதே தவமாகும். மனம் தன் போக்கில் போகாமல் இருக்கச் செய்யவேண்மானால், விரதங்களையும், உணவைக் குறைத்து உண்ணுதலையும் மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் நமக்கு வரும் துன்பங்களையும் பொறுத்தல் வேண்டும். பிற உயிர்களுக்குத் துன்பம் வந்தபோது! அத் துன்பத்தினின்று அவைகளைக் காப்பாற்ற வேண்டும்.

தவம் என்றதும், அதற்கு ஓர் உருவத்தைக் கற்பித்து விடுவர் சிலர். காவியுடையும் நீண்ட தாடியும் தவத்திற்கு அடையாளமாகக் கூறி விடுவர். அவையல்ல தவத்திற்கு உருவங்கள். உணவு சுருங்குதல் காரணமாக வரும் துன்பங் களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யா திருத்தலுமே தவ வடிவங்களாகும். ஆனால் இத்தகைய தவ நிலையினைப் பெறுதல் சிறிது சிரமம்தான். தவமும் முன் பிறவியில் தவம் செய்தவர்கட்கே அமைவதாகும். மற்ற வர்கள் அதனை மேற்கொள்ளுதல் வீணேயாகும். தவத்தை முடித்தற்கு அறிவும் வல்லமையும் தேவை. இவ்விரண்டில் நல்ல பயிற்சி இல்லாதவர் தவத்தை முற்ற முடிய மேற் கொண்டு முடிக்க இயலாது.

இல்லறத்தில் ஈடுபட்டவர். பின்பு தவத்தையும் மேற் கொள்ளவேண்டும். இல்லறத்தார் தவத்தை மேற்கொண்ட வர்களுக்கு உணவு, மருந்து, இருப்பிடம் முதலியன தந்து உதவ வேண்டி இருத்தலின், துறவாமல் இருக்க எண்ணு வர். அப்படி எண்ணித் துறவா திருத்தல் தவறு. தானத்தி னும் தவமே சிறந்தது. ஆகவே, இல்லறத்தில் பற்று ஒழிந்து துறவறத்தையும் மேற்கொண்டு தவத்தில் நாட்ட முடையவராக இருத்தல் வேண்டும். ஏனெனில் தவத்திற் குப் பகைவரைக் கெடச் செய்யவும் நண்பர்களை உயரச் செய்யவும் வல்ல ஆற்றல் உண்டு. அதாவது தவத்தை மேற்கொண்டவர்கட்குச் சபிக்கவும் அனுக்கிரகம் செய்ய வும் வல்லமையுண்டு. தவசியர்கட்கு நண்பர் பகைவர் என உண்டோ எனில், அதுவன்று இங்குக் கூறக் கருதிய கருத்து. தவசியர் எவ்வளவு சிறியராயினும், பகைவர் பெரியவர்களாயினும், அவர்கள் கெடுவர் என்பதை அறிவுறுத்தலே, இது கூறப்பட்ட தென்க. தவத்தால் வேண்டியதை வேண்டியபடி பெறலாம். ஆகவே தவத்தை மேற்கொள்ளுதல் சாலவும் பொருத்தமுடையதாகும். நல்ல கதியை விரும்பினும் பெறலாம். மோட்சம் வேண்டினும் அடையலாம். எனவே மறுமை இன்பம் வேண்டினால் தவ முயற்சி மிக மிக வேண்டற்பாலது. தவம் செய்பவர் தாம் தம் கருமங்களைச் செய்தவர் ஆவர். மற்றவர்கள் பொருள் இன்பங்களைப் பற்றிய செயலில் ஈடுபட்டவர்கள் ஆசை காரணமாகத் தங்களுக்கே கேடு சூழ்ந்து கொண்டவர் ஆவர். தவத்தைச் செய்தால் பிறப்பு, நோய், மூப்பு, இறப்பு முதலான துன்பங்களால் துயர் உறும் உயிர் ஞானம் பெற்று மோட்சத்தை அடையும். பொருள் இன்பங்களின் பொருட்டுச் செயல்கள் புரியின். சிற்றின்பமே கிடைக்கும்.

பெற்றுப் பல பிறவிகளிலும் துன்பப்படத்தக்க பாவம் செய்து கொள்பவர் ஆவோம்.

தவத்தை மேற்கொள்வது என்பது எளிதான செயல் அன்று. அரிதான செயலே ஆகும். பொன்னைப் புடம் இட இட அதன் ஒளி மிகுகின்றது அல்லவா? அதுபோலவே துன்பம் சுடச் சுடத் தவத்தை மேற்கொண்டவர்கட்கு ஞானம் பிரகாசிக்கத் தொடங்கும். ஞானம் பிரகாசிக்கப் பாவம் இல்லாமற் போகும். தவம் உடையவர்களை எல்லா உயிர்களும் தொழும் காரணம், தவம் வாய்க்கப் பெற்றவன் ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் படைத்தவன் ஆதலின் என்க. வன் தவத்தை மேற்கொண்டவரை இயமவாதனையினின்றும் நீங்கியவர் ஆவர். ஆகவே, இறப்பைக் கடத்தற்கும் தவம் துணை செய்ய வல்லது என்பதை அறிக. மேலும் உலகில், ஞானம் உடையவர் சிலராகவும், அஞ்ஞானம் நிறைந்தவர் பலராகவும் இருக்கக் காரணம் யாதென ஆராயின் தவம் செய்து ஞானம் பெற்றவர் சிலர் என்பதையும், தவம் செய்யாது அஞ்ஞானிகளாய் இருப்பவர் பலர் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். அறிந்து பலர் தவ நிலையை மேற்கொள்ள முந்தவேண்டும்.

## 4. கூடா ஒழுக்கம்

தவத்தை மேற்கொண்டால் மட்டும் போதுமோ போதாது. கூடா ஒழுக்கமும் இருத்தல் கூடாது. அதாவது தாம் விட்ட காம இச்சையை மேலும் விரும்பும் வழி தோன்ற அவ் வழியே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாகிய தீய ஒழுக்கமாம்.

மேலே தவ ஒழுக்கம் உள்ளே வஞ்சகமாகிய ஒழுக்கம் உடையவனைக் கண்டு தன்னிடம் கலந்து நின்ற ஐம் பெரும் பூதங்களே அவன் செயலைக் கண்டு நகைக்கும்.

ஆகவே தவம் செய்வோனுக்கு வஞ்சகமான நடத்தை கூடாது. எவ்வளவுதான் உயர்ந்த தவ ஒழுக்கம் உடையவனு னாலும், தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் படியு மானால் அவ்வுயர்ந்த தவ வேடம் பயன் அற்றுப் போகும். அறியாமல் செய்யும் குற்றத்திற்காகிலும் அக் குற்றத்தி லிருந்து நீங்க வழியுண்டு. தான் தெரிந்து குற்றம் செய்வ னாயின், அக் குற்றத்திலிருந்து நீங்கும் வழியில்லை என்க. இப்படித் தவ வேடத்தால் உலகத்தாரை வஞ்சித்தல் எது போன்றது எனில், தன் பால் வலிமை இல்லாமையால் பசு புலித் தோலைப் போர்த்து ஊரார் பயிரை மேய்ந்து வருவதற்கு ஒப்பாகும். புலி பசித்தாலும் புல்லை மேயாதே என்ற காரணத் தாலும், புலியைத் துரத்த அருகே சென்றால் ஆபத்து விளை யுமே என்ற காரணத்தாலும், எப்படி வயலுக்குரியவர் புலித் தோல் போர்த்த பசுவைத் துரத்தாரோ, அதுபோல, தவ வேடம் பூண்டவர், கூடா ஒழுக்கம் காரணமாகப் பிற மனை யாளை யிச்சித்து ஒழுகினால் தவ வேடங் காரணமாக, இத் தொழிலை இவர் செய்யார் என்று சும்மா இருப்பர். அருகே சென்று வினவினால் சாபம் இடுவர் என்றும் சும்மா இருப்பர். ஆதலின், இங்ஙனம் உலக மக்களுக்குத் துன்பம் வரும் நிலையில் தவசியர் கூடா ஒழுக்கம் மேற்கொண்டு நடத்தல் கூடாது. இங்ஙனம் தவ வேடம் பூண்டு, கூடா ஒழுக்கத்தை மேற்கொள்ளல் வேடன் மறைந்து இருந்து பறவைகளைப் பிடித்தற்குச் சமமாகும். எல்லாப் பற்றையும் ஒழித்தோம் என்று சொல்லிக்கொண்டு, கூடா ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுபவர் பலவிதத் துன்பத்திற்கு ஆளாவர். அத் துன்பங்களை அனுபவிக்கும்போது, "ஐயோ, சிறு இன்பம் கருதி இப் பெருந் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்ததே" என்று எண்ணி வருந்துவர்.

அந்தோ! இத்தகைய வஞ்சகர் மிகவும் கொடியவர் ஆவர். இவர்கள் வெளிக்குத் துறந்தவர் ஆவரே அன்றி தம் மனத்தால் சிறிதும் துறவாதவர் ஆவர். குன்றிமணி பெரிதும் செம்மை நிறம் பெற்று, சிறிது கரு நிறம் பெற்றிருப்பது போல, கூடா ஒழுக்கத்தினர், தோற்றத்தால் பெருந் தவசியர் போல் காணப்பட்டாலும், உள்ளத்தில் சிறிது வஞ்சகம் உடையவராய் இருக்கின்றனர். இவர்கள் பால் நாம் வெகு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவர்கள் உள்ளத்தில் உள்ள மாசுகளாகிய காமம், கோபம், மயக்கமாகிய மூக்குற்றங்களைப் போக்கமாட்டார். பிறர் தம்மை மிகவும் தூயவர் என்று கருதுதல் பொருட்டு, நீரில் மூழ்கிப் புற உடலைச் சுத்தம் செய்வர். ஆகவே நாம் புற ஒழுக்கத்தைக் கண்டு ஏமாறுதல் கூடாது. அம்பு நேராகத்தான் செவ்விதாக உள்ளது. ஆனால் அதன் செயல் கொடியதாகும் அல்லவா? யாழின் தண்டு வளைந்துதான் உள்ளது. ஆனால் அதனிடத்துப் பிறக்கும இசை இன்பம் பயக்கின்றது அன்றோ? அதுபோல நாமும் தோற்றத்தைக் கண்டு ஒரு முடிவுக்கு வருதல் கூடாது. அதாவது தவசியரது புற ஒழுக்கத்தைக் கண்டு உயர்ந்தவர் என்று கருதாமல், அவர்களின் செயலைக் கண்டு, நல்லவர் கெட்டவர் என்று கூறுதல் வேண்டும். இவ்வாறு நாம் உண்மை உணர வேண்டி இருத்தலின், தவசியாக இருப்பவரும் தம் தலை மயிரை வளரச் செய்தலோ அன்றி மழுங்க நீக்கிவிடுதலோ செய்யாமல், உலகம் பழிக்கும்செயல்களை மட்டும் செய்யாமல் இருந்தால் போதுமானது. உலகம் பழிக்கும் செயலாவது கூடாஒழுக்கத்தினை மேற்கொள்ளாதிருத்தலாம்.

## 5. கள்ளாமை

பிறர் பொருளைக் கவருவதும் கூடாது. கவர்வதற்கு நினைத்தலும் கூடாது. இல்லறத்தார் விளையாட்டின் நிமித்

தம் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளுதலும் உண்டு. அதுகூட ஒருவாறு ஒப்புக்கொள்ளக் கூடும். ஆனால் துற வறத்தை மேற்கொண்டவர் பிறர் பொருளைக் கவர எண்ணுதலும் கூடாது என்பது நம் முன்னோர் கருத்து.

முத்தியை அடைய வேண்டும். அதனை இகழ்ந்து வெறுத்தல் கூடாது என்னும் துறவி பிறர் பொருளை வஞ்சித்துப் பெறத் தன் மனம் நினையாதிருக்கப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதனை மேலும் தெற்றத் தெளிய கூறவேண்டுமாயின், பிறன் பொருளை அவன் அறி யாத வகையில் வஞ்சித்துக் கொள்வோம் என்று மனத்தால் நினைத்தலும் தீதேயாகும். ஏன் நினைத்தல் கூடாது என்று கேட்கலாம். ஏன் எனில், திருட்டினால் வந்த பொருள் வளர்வது போலப் பொய்த் தோற்றம் காட்டி, பின்பு தானே கெட்டு ஒழியும். அது கெடுங்காலத்தில் பாவத்தை யும் பழியையும் நிறுத்தி அறத்தையும் உடன் கொண்டு செல் லும். பிறன் பொருளை வஞ்சித்துக் கொள்ளுதலில் ஊன் றிய ஆசையானது பின் பெரும் துன்பத்தைத் தரும். இவர் கட்கும் அருளும் அன்பும் இல்லாமல் போகும். இவர்கள் கிருபை வழியிலே நடவார். காட்சி முதலிய பிரமாணங்க ளால் உயிர்ப் பொருளையும், அவ்வுயிர்ப் பொருளுக்கு அநாதியாய் வரும் குற்ற வினை விளைவுகளையும், அவை காரணமாக அவ்வுயிர்ப் பொருள்கள் பிறந்து இறத்தலையும் அப் பிறப்பு இறப்பு ஒழிதற்கு உபாயமான யோக ஞானங் களையும் அவை காரணமாக அவ்வுயிர்கள் அடையும் மோட் சத்தையும் அளவு செய்து உள்ளவாறு அறிவும் பெருமை நிறைந்த துறவற ஒழுக்கத்தினர், பிறர் பொருளை வஞ்சித் துப் பெற ஒருபோதும் மனத்தாலும் நினையார். பிறர் பொருளை அபகரிக்க எண்ணுபவர் மனத்தில் வஞ்சனை குடி

கொண்டு நிற்கும். இவர்கள் பாவங்களைச் செய்து அழிவர் அவர்களின் அழிவுக்குக் காரணம், பொருளுடையார் வஞ்சிக்க நினைந்தாலும், அவ் வஞ்சனையால் அதைக் கொள்ள நினைந்தாலும், கொண்ட பொருளாய் போகங்களை அனுபவிக்க நினைத்தாலும் என்க, தீய நினைவே அழிவுக்குக் காரணமாதலின், அந் நினைவுகள் செய்தவைக்கு உரிய பயன்களைத் தரும் என்க. எனவே மனத்தாலும் பிற பொருள்களை வஞ்சித்துப் பெற நினையாதவரைத் தேவர் உலகும் ஏற்றுக் கொள்ளும். களவு செய்ய எண்ணுவோரை நரகம் ஏற்று அவர்களை விடவும் எண்ணாது. மேலும் பிறர் பொருளைக் கவர எண்ணுபவர் இம்மையில் அரசால் தண்டனையும் பிறர் பொருளைக் கவர எண்ணாதவர் மறுமையில் தேவராயும் இன்பம் அடைவர் என்க.

## 6. வாய்மை

வாய்மையாவது உண்மை. தீமை யில்லாது மொழிதலும் வாய்மை எனப்படும். சில இடங்களில் பொய்யும் உண்மை தரத்தக்கதாக அமையும். அதாவது பொய்யே யாயினும் பிற உயிர்க்குத் தீங்கு வருங்காலத்து அத் தீங்கு நீங்கும் பொருட்டுப் பொய் கூறப்படுமாயினும் அது வாய்மைக்கு நிகராகும். எப்படியாயினும் தன் மனம் அறிந்த ஒன்றை மறைத்துப் பொய் கூறாது உண்மையே கூறுதல் வேண்டும். ஏனெனில் பொய் கூறினால் நம் மனமே நம்மை அழிக்கும். இப்படி மனத்திற்கு மாறாக நடவாமல் ஒருவன் உண்மையே கூறி வருவானாயின், அவனை உலக மக்கள் எல்லோருடைய மனத்திலும் குடி புகுந்தவன் ஆவான். உண்மை பேசுபவன் தவம் செய்வாரினும் தானம் செய்வாரினும் தலை சிறந்தவனாகக் கருதப்படுவான். பொய்யாமை போன்ற புகழ் வேறு எதுவும் இல்லை. அக் குணம்

நமக்கு எல்லா நன்மைகளைக் கொடுக்க வல்லதாகும். மேலும் பொய்யாமை யாகிய இக் குணம் மட்டும் அமையப் பெற்றால் வேறு அறம் ஒன்றையும் நாம் செய்ய வேண்டியதில்லை. பல அறங்களைச் செய்யத் தவறினால் குற்றம் உண்டாகும் அக் குற்றங்களை எளிதில் வராமல் தடுக்க வழி பொய் பேசாமையே யாகும்.

உடலைச் சுத்தஞ் செய்ய நீர் போதுமானது உள்ளத்தின் தூய்மையை எப்படிக் காட்டுவது? அதற்கு ஒரே வழி உண்மை பேசுதலாம். உண்மை பேசினால் உள்ளம் தூய்மையாகிவிடும். ஆகவே சான்றோர் என்ற பெயர் எடுக்க விரும்புபவர்க்கு வாய்மையே ஒளி தர வல்ல விளக்காகும். அதாவது அகத்தில் உள்ள அஞ்ஞான மாகிய இருளை நீக்க, வாய்மையாகிய ஒளி தேவை என்று உணர்தல் வேண்டும். எனவே எந்த நூல்களைப் புரட்டினாலும் வாய்மையினும் சிறந்த குணம் ஒன்று இருப்பதாக நாம் காண முடியாது. எனவே வாய்மையாகிய குணத்தினை யாவரும் மேற்கொண்டு ஒழுகவேண்டும்.

## 7. வெகுளாமை

கோபம் சண்டாளம். இந்தக் கோபம் வரவொட்டாமல் தடுத்தல் அரிது. குற்றம் செய்தவரிடத்தும் கோபம் கொள்ளாதிருத்தல் சிறந்த குணம். இக் குணம் இல்லறத் தாரிடமிருந்து எதிர்பார்த்தல் அருமை. ஆகவே இதனை அடக்கும் ஆற்றல் துறவறத்தை மேற்கொண்டவரிடமே உண்டு என்னலாம்.

சிலர் தாம் கோபம் கொண்டால், அக் கோபத்திற்கு எதிர் மாற்றம் கூறாதவரிடத்தில் கோபத்தைக் காட்டாமல் அடக்குதல் அறிவுடைமையாகும். அவ்வாறின்றித் தாம்

கோபம் பலிக்காத இடத்தில் கோபத்தை அடக்கிக் கொள்வதில் பயனில்லை. அங்கு அடங்கித்தான் போகவேண்டிவரும். ஏனெனில் அங்குக் கோபம் காட்டப் பெறின் பலிக்காது. ஏனெனில் நம்மினும் வலியாரிடத்தில் கோபத்தைக் காட்டினால் நமக்கே குற்றம் ஏற்படும். மெலியாரிடத்தில் கோபத்தைக் காட்டினும் அதைவிடப் பெருங்குற்றமாகும். அதாவது மறுமையிலும் பாவம் வந்து சம்பவிக்கும் என்க. ஆகவே, கோபம் வலியார் மெலியார் ஆகிய இரு திறத்தார் பாலும் காட்டா திருத்தல் நல்லது. யாரிடத்திலும் கோபக் குணம் உண்டாகாமல் அக் குணத்தை மறந்தே விடவேண்டும். அக் குணத்தை மறந்திலோம் எனில் தீமை வந்து சம்பவிக்கும். கோபம் தோன்றியபோது; அருளால் வரக்கூடிய நகையும், முகத்தில் தோன்றக்கூடிய மகிழ்ச்சியையும் கோபம் இல்லாமல் செய்து விடும். ஆகவே நாம் கோபத்தை நம்முடன் தோன்றிய பகை என்றே கருத வேண்டும். இது பகையாய் நின்று அருள் முதலியவற்றை நீக்கிப் பிறவித் துன்பத்தை அடைவிக்கும். எனவே ஒருவன் தன்னைக் குற்றத்திலிருந்து காத்துக் கொள்ள வேண்டினால் கோபம் வர வொட்டாமல் காத்துக் கொள்ள வேண்டும். அப்படிக் காக்கவில்லை என்றால், அக் கோபம் நம்மையே அழித்துவிடும். கோபத்தால் சபிக்க நேரிடும். அப்படிச் சபிப்பதனால் தேடிய தவப் பலன் அழிந்து போகும். பிறவித் துன்பமும் வந்து சேரும். கோபம் போன்ற கொடுமை செய்ய வல்லது பிறிதொரு குணமும் இல்லை என்னலாம். அது கோபம் கொண்டவரை மட்டும் அழிக்காமல், அவர்களுக்குப் பாதுகாவலாக அமைந்த இனத்தவரையும் அழிக்கும் என்றால் வேறு எம் முறையில் அதன் கோபத்தைக் கூற முடியும்? சிலர் இனத்தையே

தம் வல்லமைக்கு ஒரு சிறந்த கருவியாகக் கருதுவர். அந்தோ அவர் அறியாமையை என்னென்று கூறுவது! நிலத்தைத் தன் பலம் கொண்டு ஒருவன் அறைந்தால், அவ்வறையால் யார் துன்புறுவர்? நிலமா? அன்றி அறைந்தவனா? அறைந்தவன் கையன்றோ நோவுறும், அது போலக் கோபம் தனக்கே தீங்கு தருமே அன்றி எதிரிக்குத் தீமை செய்யாது.

இந்தக் கோபத்தை எந்தக் காலத்திலும் கொள்ளாதிருத்தல் நலமே. பிறன் நமக்கு நெருப்பைத் தழுவினாற் போன்ற வெம்மையான தீங்கு செய்தானாயினும் கோபம் கொள்ளாதிருத்தல் நலமே என்க. இதனால் என்ன பலன் என்று வினவலாம். பலன் பெரிது உண்டு. கோபம் கொள்ளாதிருப்பின் நினைத்தவைகளை எல்லாம் பெறலாம். இம்மை, மறுமை, வீடு ஆகிய மும்மை இன்பங்களையும் பெறலாம் என்க. கோபிகள் இறந்தவர்கட்கே சமம் என்பது பெரியோர் கருத்து. அதனை ஒழித்தவரே உயிருடன் உலகில் வாழ்பவர் என்று கருதப்படுவர். அதாவது கோபிகள் ஞானம் அடையார். கோபம் அற்றவர் ஞானம் பெற்று முத்தி அடைவர்.

## 8. இன்னா செய்யாமை

பிறர்க்குத் தீமையான செயல்களைச் செய்யாத குணமும் சிறிய குணமாகும். பிறர்க்குத் தீமை செய்யப் பல காரணங்கள் உண்டு. ஒரு பயனைக் கருதியோ, பகை காரணத்தாலோ, சோர்வினாலோ துன்பம் தரும் செயல்களைப் புரியலாம். குற்றமற்றவர், நல்லவர் எனக் கருதப்பட்டவர் யோகமாகிய சிறப்பினாலே, கைவரப் பெற்ற எண் வகைச் சித்திகளைப் பெற்றிருந்தாலும், பிறர்க்குத் தீமை செய்ய மனங் கொள்ளார். பிறர் தமக்குத் தீங்கு செய்வதைப் பற்றிக்

கவலை கொள்ளுதல் கூடாது. அப்படி அவர்கள் செய்தாலும் நாம் அவர்கட்கு மீண்டும் தீமை செய்யலாகாது. அப்படிச் செய்தால் செய்தவர்க்குத் துன்பமே மிகும். ஆகவே நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிக்க விரும்பினால், அவர்கள் வெட்க முறும்படி நன்மையே செய்ய வேண்டும். அறிவுடைமை யென்றால் தம் நோய்போல் பிறர்க்கு வரும் நோயையும் கவனித்துத் துன்பம் செய்யாதிருத்தலே யாகும். அதாவது பிறர்க்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்த துன்பம்போல் எண்ணி அதனைப் போக்க முந்த வேண்டும். இது செய்தால் துன்பம் வரும் என்று அறிந்தும் அத் துன்பத்தைப் பிற உயிர்கட்குச் செய்யலாமா? இஃது அறிவுடைமையாகுமா? ஆகவே, எந்தக் காலத்திலும், எவ்வளவு சிறிதாயினும், மனம் அறிந்த துன்பத்தைப் பிற உயிர்கட்குச் செய்தல் கூடாது; இப்படிச் செய்யாதிருத்தலே தலையாய தருமம் ஆகும். தன் உயிர்க்குத் தீங்கு வருதல் கூடாது என்னும் எண்ணமுடையவன், பிற உயிர்கட்கு மட்டும் தீங்கினைச் செய்ய எண்ணலாமோ? எண்ணக் கூடாது அல்லவா? எண்ணித் தீங்கு செய்தால், அடுத்தபடி நமக்கே தீங்கு சம்பவிக்கும். எனவே தம் உயிர்க்குத் துன்பம் இல்லாமையை விரும்புபவர் துன்பம் செய்தல் கூடாது.

## 9. கொல்லாமை

கொல்லாமையாவது எந்த உயிரையும் எக் காரணம் பற்றியும் கொல்லாதிருத்தலாம். அறவினை என்பது கொல்லாமையாகும். கொல்லும் குணம் பாவச் செயல்கள் எல்லாவற்றையும் தரும். நாம் உண்பதற்கு முன் பசித்த உயிர்கட்குப் பகுத்துக் கொடுத்த பின்பே உண்ண வேண்டும். இதுவே எல்லா நூல்களும் ஒப்புக் கொள்ளும்

உண்மையாகும். தனித்த சிறப்புடைய குணம் பிற உயிர்களைக் கொல்லாமையாகும். இதற்கு அடுத்த குணமாகக் கூறவேண்டுமானால் பொய் பேசாத பண்பைக் கூறலாம். நன்மார்க்கமாவது கொல்லாமையே ஆகும். துறந்தவர்கள் யாவரும் உயர்ந்தவர்கள் என்று கூறிவிட முடியாது. கொலைப் பாவத்திற்குப் பயந்து, அச் செயலைப் புரியாதவரே தலைசிறந்த துறவியாவார். இந்தக் குணம் அமையப் பெற்றவன் வாழ்நாள் மேல் இயமனும் செல்ல மனம் நடுங்குவான். அதாவது பிரமன் வகுத்த வயது குறையாது நிறை வயதுடையவனாகவே விளங்குவான். அதனால், காலம் நீடித்திருந்து, ஞானத்தைச் சம்பாதித்து, மோட்சத்தையும் அடைவான். ஆகவே நம் உயிர் போவதாயினும் பிற உயிர்களை அழிக்கும் செயல்களைச் செய்தல் கூடாது. கொலையால் பெருஞ் செல்வம் வருவதாயினும் சான்றோர் என்று தம்மைக் கருதிக் கொள்பவர் கொலை செய்யத் துணியார். கொலையால் செல்வம் வருமே எனில், யாகம் செய்யும் காலத்தில் அஸ்வம் முதலியவற்றை ஆடு முதலியவற்றைப் பசு முதலியவற்றைப் பலியிடுவது வழக்கம். அப்படிப் பசுவதை செய்து யாக கருமம் செய்யின் செல்வம் பெருகும் என்பது சிலர் கொள்கை. அப்படிச் செல்வம் பெருகுவதாயினும் பெரியோர்கள் பசுவதை புரியார். பசு வதையால் வரும் செல்வத்தை இழிந்ததாகக் கருதுவர். இதனால் யாகம் செய்பவர் சுவர்க்கலோக இன்பம் பெறுவர். கொலையைக் கடிந்தவர் வீட்டின்பம் பெறுவர். கொலைத் தொழிலோர் புலைத்தொழிலர் அன்றி வேறல்லர். இத்தகைய கொலைஞர்களே மறு பிறப்பில் வறுமையாலும் நோயாலும் வாடுவர். இப்போது நாம் கண் கூடாக வறிஞரையும் நோயாளிகளையும் காண்போமானால், அவர்கள் முற் பிறப்பில் பல உயிர்களைக் கொன்ற கொலைப் பாதகர் என்று கூசாமல் கூறி விடலாம்.

# 4. ஞானம்

## 1. நிலையாமை

ஞானம் எனினும் அறிவு எனினும் ஒன்றே. இஞ் ஞானம் விரதங்களினால் கரணங்கள் சுத்தமானபோது உண்டாவது, அத்துடன் மோட்சத்தையும் தர வல்லது. ஞானத்தால் நிலையாமையை அறிய முடியும். நிலையாமை என்பது தோற்றமுடைய எல்லாப் பொருளும் அழியும் தன்மையுடையது என்பதாம். அதனை அறிந்தால் பொருள்களிடத்தில் பற்று உண்டாகாது. நிலை பேறு இல்லாதனவற்றை நிலை பேறுடையனவாக கருதுவது ஒரு புல்லறிவாகும். இழிந்ததும் ஆகும். நிலையற்ற பொருளில் பற்றுச் செல்லுமானால் பிறவிக்கு ஏதுவாகும். பிறவிக்கு ஏதுவானால், மோட்சம் கிட்டாது போகும். பெரும்பாலும் எப்பொருளினிடத்துப் பற்று எழும் எனில் சிற்றின்பத்திற்குக் காரணமான செல்வத்தினிடத்தும், உடலினிடத்தும் என்னலாம்.

செல்வம் நிலைத்த பொருள் இல்லை. பெருஞ் செல்வமாயினும் அது திடுமென இருந்த இடம் தெரியாமல் அழியினும் அழியும். நாடகம் நடக்கும் கால் கூட்டம் திரள் திரளாகக் கூடும். அந் நாடகம் முடிந்ததும் அங்கு இருந்த அவ்வளவு கூட்டமும் இல்லாமற் போகும். அது போன்றதே செல்வம். உள்ளதுபோல் காட்டி இல்லாமல் போகும் இயல்புடையது. செல்வம் வந்துற்றபோது, அது நிலையற்றது என்பதை யுணர்ந்து, நிலைபேறுடைய அறச் செயல்களை அதைக் கொண்டு செய்யவேண்டும். செல்

வத்தை ஒருவன் பெறுகின்றான் என்றால் அது முன் பிறவியில் செய்த நல்வினை காரணம் என்று உணர வேண்டும். ஆகவே நல்வினையால் பெற்ற செல்வத்தைப் பயன் கருதாது, கடவுள் பூசைக்கும் தன்மத்துக்கும் செலவு செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் செயல் ஞானத்துக்குக் காரணமாய் இருந்து மோட்சத்தையும் கொடுக்கும்.

அடுத்தபடி உடல் நிலையாமையை உணரவேண்டும். உடல் நாளுக்கு நாள் வயது குறைந்து கொண்டே வரும். நாட்கள் காலத்தின் கூரிய வாள் போன்றவை. அந் நாட்களாகிய வாள் நம் ஆயுளைத் தினமும் அறுத்துக் கொண்டே வரும். ஆகவே நாவை அடக்கி, விக்குள் எழுவதற்கும், அதாவது அந்திம காலம் வருதற்கு முன் நல்வினைகளைச் செய்ய முந்த வேண்டும். ஏனெனில், விக்குள் வந்தபோது, நல்வினை செய்ய இயலாது. எப்போது இறப்பு வரும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. நேற்று இருந்தான் இன்று இறந்தான் என்று கூறும் பெருமையுடையது உலகம். இத்தகைய நிலையில் நம் வாழ்நாள் இருக்கும்போது பலவாறு எண்ணி எண்ணி அழிவதில் பயன் உண்டோ? பலவாறு எண்ணுவதாவன அனுபவிக்கப்படும் இன்பங்களுக்குரியவை ஆகும் விதமும், அதற்குப் பொருள் வேண்டிய விதமும், அது தம் முயற்சிகளால் வரும் விதமும், அம் முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும் அவைகளுக்கு வரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும் விதமும், நீக்கிய பின் அப்பொருளைச் சேர்க்கும் விதமும், அதைப் பிறர் கொண்டு போகாமற் காப்பாற்றும் விதமும், அதனால் சினேகித்தவரை ஆக்கும் விதமும், பகைத்தவரை அழிக்கும் விதமும் தாம் அவ்வின்பங்களை அனுபவிக்கும் விதமும் முதலியன என்க.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு பறவைக்கும் முட்டைக்கும் உள்ள தொடர்பு போன்றது. முட்டையை விட்டுப் பறவை வெளியே வந்ததும் அதனை விட்டுப் போவது போன்று உயிரும் உடலை விட்டுச் சென்றதானால் மீண்டும் அவ்வுடலில் வந்து புகுவதில்லை. உயிர் அறிவாகியும் அருவாகியும் நித்தியமாகியும் உள்ளது. உடல் அறியாமையுமாகியும் உருவாகியும், அநித்தமாகியும் உள்ளது. ஆகவே இரண்டிற்கும் நட்புக் கிடையாது. வினை காரணமாக இவ்விரண்டும் ஒன்று பட்டன. தீவினை குறைந்த பின் இரண்டும் பிரிந்துபோக வல்லன. இறப்பு உறங்குவதற்கு ஒப்பு, பிறப்பு உறங்கி விழிப்பதற்கு ஒப்பு. உறக்கமும் விழிப்பும் மாறி வருவது போன்று, இறப்பும் பிறப்பும் மாறி மாறி வர வல்லது. உடம்பு, வாதம், பித்தம் சிலேத்துமம் ஆகிய நோய்கட்கு இருப்பிடம். ஆனால் உயிர்க்கு மட்டும் என்றும் நிலைத்திருத்தற்குரிய பொருளாக மட்டும் அமையவில்லை. எப்போதாகிலும் உயிர் வெளி ஏறி விடுவது உறுதி. இதனை அறிந்து அவ்வுயிர் உள்ளபோதே செய்யக் கடவதான அறச் செயல்களைச் செய்தல் வேண்டும்.

## 2. துறவு

துறவு என்பது உடம்பினிடத்தும் செல்வத்தினிடத்தும் வைத்த பற்றைத் துறத்தலாம். ஐம்பொறிகளால் இன்புறும் பொருள்களிடத்து வைத்த ஆசையைத் துறந்தால், அவ்வைம்பொறிகளால் அனுபவிக்க வல்ல பொருள்களால் எக்காலத்திலும் துன்பம் என்பது ஏற்படாது. அவ்வாறு ஆசையை ஒழித்திலோம் எனில், அப் பொருள்களைத் தேடுதலாலும், காப்பாற்றுதலாலும், இழத்தலாலும், வரும் இம்மைத் துன்பமும் மறுமையில் வரும் பாவத் துன்பத்தையும் நாம் அனுபவித்தே தீரவேண்டும். ஆகவே எப்

பொருள்களிடத்தும் வைத்த ஆசையைத் துறத்தலே உண்மைத் துறவாகும். துறந்தால் இவ்வுலகில் பல இன்பங்களைப் பெறலாம். ஆகவே, காலம் உண்டானபோதே பொருள்களிடத்து வைத்த பற்றை ஒழிக்க வேண்டும். இப்படித் துறந்தால் மனம், வாக்கு, காயம் அலையாமல் நிலைத்து நின்று அவை நல்வழியில் செல்லும். ஆகவே, ஐம்புலன்களையும் அவற்றின் போக்கிலே போகவிட்டுப் பொருள்களிடத்தில் பற்றுதலைக் கொள்ள விடுதல் கூடாது. தாம் படைத்த பொருள்களை எல்லாம் விடுதல் வேண்டும். ஐம்புலன்களை அடக்கவில்லையானால், முத்தி வழியாகிய யோக ஞானங்களில் செல்ல இடம் ஏற்படாது. நல்ல துறவிகள் ஒரு பொருளிடத்தும் பற்றின்றித் தமக்கென ஒரு பொருளையும் இல்லாதிருத்தலே நல் இயல்பாகும். அவ்வாறின்றித் தமக்கு என ஒரு சிறு பொருளை வைத்திருப்பினும், அது மயக்கத்திற்கு ஏதுவாகும். ஒரு பொருளும் உடைமையாக இருப்பின், பின் வெறுத்து ஒதுக்கப்பட்ட எல்லாப் பொருளும் வந்து சேர்ந்து தவத்துக்கு விரோதமாய் இருந்து மனக் கலக்கத்தை உண்டு பண்ணும். பிறப்பு நீங்க எண்ணுபவர்க்கு உடம்பும் பெரும் பாரமாகும். மேலும், யான் என்னும் அகப்பற்றையும், எனது என்னும் புறப்பற்றையும் எவன் ஒழிக்கிறானோ அவன் தேவர்களாலும் அடைய முடியாத முத்தி உலகம் புகுவான். இப்பற்று ஒழிக்க வேண்டுமானால் குரு உபதேசத்தையும் யோக அப்பியாசத்தையும், மேற்கொள்ள வேண்டும். இவ்விருவகைப் பற்றுக்களையும் யார் விட்டிலரோ அவர்களைத் துன்பங்கள் விடாமல் பற்றித் தொடரும். எனவே தீரத் துறந்தவர்களே முத்தியை அடைவர். மற்றவர்கள் பிறப்பாகிய வலையில் சிக்கிக் கொண்டவரே ஆவர். பற்று அற்றால்தான் பிறப்பு அறும். அப்போதுதான் நிலையாமையும் உணர ஏதுவாகும்.

பற்று அற வேண்டின், பற்றற்றவரும் பொருளிடத்துப் பற்று வைக்கவேண்டும். அப் பற்று அவன் காட்டிய முத்தி வழியை அடையத் துணை செய்யும். பற்றற்ற பொருளி னிடத்து எப்படிப் பற்று வைத்தல் என்று யோசிக்க வேண்டா. தியானம் சமாதி முதலிய துணைகளால் பற்று வைக்கலாம்.

## 3. மெய்யுணர்தல்

தத்துவ ஞானம் என்பதே மெய் யுணர்தல் எனப்படும். அதாவது பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் கயிற்றைப் பாம்பு என்று அறிகின்ற விபரீத ஞானத்தா லும், கயிறோ பாம்போ எனத் துணிவு கொள்ளாத சந்தேக ஞானத்தாலும் அன்றி உண்மையால் எதையும் அறிதலே ஆகும். இத்தகை தத்துவ ஞானம் பற்றற்றான் பற்றினைப் பற்றினால்தான் உண்டாக வல்லது.

உண்மைப் பொருள் அல்லாதனவற்றையும் உண்மைப் பொருளென அறிதல் விபரீத ஞானமாகும். அவ் விபரீத ஞானம் பிறப்பை உண்டாக்கும். அப் பிறப்பு எந்தப் பிறப் பாயினும் துன்பமே. தேவர், மக்கள், நரகர் பிறப்பாயி னும் துன்பமே. பொருள் அல்லவற்றைப் பொருள் என உணர்தலாவது மறு பிறப்பு இல்லை என்றலும், நல்வினை தீவினை பயன்கள் இல்லை என்றலும், கடவுளும் இல்லை என்றலும் ஆகிய விபரீத ஞானமாம். யார் இந்த விபரீத ஞானத்திலிருந்து விலகினார்களோ அவர்கள் பிறவி நீங்கி, முத்தியை அடைவர். முத்தியாவது உயர் ஒப்பில்லாத இன்ப வீடாகும். இதற்குக் கேவல ஞானம் அதாவது மாசறு காட்சி தேவையாகும். சந்தேகத்திலிருந்து நீங்கிய வர்க்கு வீட்டுலகம் சேய்மையில் இராது வெகு அண்மையி

லேயே இருக்கும். ஆகவே அதனை அடைதல் எளிது. ஐயமாவது மறுப்பும் இருவினைப் பயன்களும் கடவுளும் உண்டோ இல்லையோ என்று எண்ணும் எண்ணம். ஒன்றிலும் துணிவு பெறாத உள்ளம். இந்த நிலை யோகிகள் பெறார். உண்மையைத் தம் மெய் அறிவால் உணர்வர். மெய் புணர்வு இல்லாமல் ஐம்புலன்களைத் தம் வசப்படுத்தி ஒடுக்கினாலும் பயன் ஏற்படாது. உண்மைப் பொருளைக் காண்பதுதான் அறிவு எனப்படும். மெய்ப் பொருள் அறிந்தவரே முத்தியின்பம் பெற்று மீண்டும் மண்ணுலகில் வந்து பிறக்கும் இழி நிலையை எய்தார். இதன் பொருட்டு ஞானாசிரியரை அடைதல் வேண்டும். அவர் உபதேசங்களைக் கேட்டல் வேண்டும். கேட்டுச் சிந்தித்து தெளிதல் வேண்டும். இவ்வுபதேசம் பிறவியினைத் தராது. ஆகவே பிறப்பு என்னும் பேதைமை நீங்க வேண்டுமானால் மோட்சத்திற்கு நிமித்த காரணமாகிய செவ்விய பொருளை அறிதல் வேண்டும். அதுவே மெய் புணர்வு எனப்படும். செவ்விய பொருள் நித்தியமாகியும், பரிசுத்தமாகியும், எங்கும் நிறைந்தும், விகாரம் இன்றியும், எக் காலமும் ஒரே தன்மையாக இருக்கும். அதனைக் காணவேண்டுமாயின் உயிர் தன் அஞ்ஞானத்தை ஒழித்து, அப் பொருளோடு ஒற்றுமையுற இடைவிடாமல் நினைத்தல் வேண்டும். இதுவே சமாதி கூடுதல் எனப்படும். அச் செம்பொருள் எல்லாப் பொருள்களுக்கும் சார்பாக உள்ளது. அதனை உணர்ந்து, இரு வகைப் பற்றுக்களையும் நீக்கினால் நம்மைத் துன்பங்கள் வந்து அணுகமாட்டா. எண்வகை யோக சாதனங்களால் அச் செம்பொருளை அடைய முயல வேண்டும். அவ் யோக வழிகளே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இயமமாவது கொலை களவு முதலியன நீக்கிப் புலனை அடக்குதல்.

நியமமாவது ஒழுங்கின்படி நடத்தல், இருக் கைகள் மூலம் புலன்களை அடக்குதல் ஆசனம் எனப்படும். மூச்சையடக்கி ஒரு வழிப்படுத்தல் பிராணயாமம் எனப்படும் பிரத்தியாகாரம் என்பது.

தாரணையாவது மனத்தை ஒரு வழி நிறுத்தலாம். தியானம் இறைவனைச் சிந்தித்தல். சமாதி என்பது மனத்தைப் பரம் பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துதல். இந்த எண் வகை யோக நிலைகளுக்கு முன், விளக்கின் முன் இருள் நில்லாதவாறு போல, நோய்கள் வர அஞ்சும். இந்த ஞான யோகங்களின் முதிர்ச்சியுடையவர்க்கு விருப்பம் வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படுகிற இம் மூன்று குற்றங்கள் இல்லாமற் போகும். நாம் குற்றம் மூன்று என்போம். வட நூலார் அநாதியாகிய அவித்தையாகிய அஞ்ஞானத்தையும், அது பற்றிய யான் என்னும் அகங்காரத்தையும், அது பற்றி எனக்கு இது வேண்டும் என்னும் அவாவும் அது காரணமாக அப் பொருளினிடத்துச் செல்லும் ஆசையும் அது காரணமாக மறுதலை இடத்துச் செல்லும் கோபமும் என ஐந்தாக்க் கூறுவர். எத்தனை வகைக் குற்றங்களாயினும் சரி, ஞான யோகங்கட்கு முன் இக் குற்றங்கள், காட்டுத் தீ முன் பஞ்சுபோல் கெடும். ஆகவே மெய்யுணர்வாகிய தத்துவ ஞானம் பெறுதலே அறிவுடைமையாம்.

## 5. ஊழ்

ஊழ் என்பது நல்வினைப் பயனாகிய இன்பமும் தீவினைப் பயனாகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்குக் காரணமாகிய நியதியாம். ஊழ், பால் முறை, தெய்வம், உண்மை, நியதி, விதி என்றும் இது கூறப்படும். இதுவே அறத்திற்கும் பொருளுக்கும் இன்பத்

திற்கும் காரணம் ஆதலின் இடையே வைத்து நாயனாரால் கூறப்பட்டது.

முயற்சியினால் பொருள் சேர்க்கவேண்டும் என்னும் ஊக்கமும், அப் பொருளைச் சேர்க்க ஊக்கம் எழாமையாகிய மனச் சோம்பலும் உண்டாதற்குக் காரணம் ஊழேயாகும். அறிவில்லாமைக்குக் காரணம் போகும் ஊழ். அறிவுடைமைக்குக் காரணமாகும் ஊழ். நுட்ப அறிவுடையனாயினும், பல நூல்களைக் கற்றவனாயினும், ஊழின் காரணமான அறிவுதான் திகழுமே அன்றிக் கற்ற கல்வியினால் அறிவு திகழாது.

ஏழை, பணக்காரர், அறிவீனன், அறிஞன் முதலான இரட்டைகளுக்குக் காரணம் போகும் ஊழும், ஆகும் ஊழுமே. சிலர் செல்வராகவும், சிலர் அறிவுடையராக வும் இருத்தற்குக் காரணமும் இவ்வூழே ஆகும். செல்வத் தைப் படைத்தலும், காப்பாற்றுதலும் பயன் கொள்ளுதலும் அறிவுடையார்க்கே அமையும் பண்பு. விதிக்கு இருக்கும் ஆற்றல் மிகுதி. அவ் விதியால் நல்லவை தீயவையாகும். தீயவை நல்லவை ஆகும். நல்லூழ் இல்லையானால் நம்மிடம் உள்ள பொருள்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகும். நாம் எவ்வளவுதான் அவை நீங்கா திருக்க வழி கோலினாலும் நீங்கியே போகும். அவ்வாறே நல்லூழ் நம்மிடம் இருக்குமாயின் பொருள்களை வேண்டா என்று வெறுத்தாலும் புறத்தே போட்டாலும், நம்மை விட்டு அவை நீங்கா. பெருஞ் செல்வர்கள் அச் செல்வத்தின் பயன் முழுமையும் பெற்று அநுபவிக்க இயலாது. இவ் வளவுதான் இப் பெருஞ் செல்வத்தின் பயனை அநுபவிக்க உண்டு என்ற விதியின் ஏற்பாட்டின்படி தான் அநுபவிக்க இயலும். செல்வர் பாலே பழமே சாப்பிட வேண்டும் என்று

விரும்பினால், மருத்துவர் கஞ்சிதான் சாப்பிடவேண்டும் இல்லையானால் உம் உடம்பு கெடும் என்று கூறினால், அப்படிக் கூறுதற்குக் காரணம் அவ்வூழின் வன்மை அல்லவா? வறுமை அனுபவம் இல்லாரும் துறப்பர். அதற்கும் காரணம் ஊழேயாகும். நல்லது அனுபவிக்கும்போது, நல்லூழ் காரணம் என்றும் தீயதை அனுபவிக்கும்போது, தீவினை காரணம் என்றும் கருதவேண்டும். அப்படிக் கருதாமல், தீவினை அனுபவிக்கும்போது வருந்தினால் பயன் இல்லை. ஆகவே இதுவரை கூறிவந்த காரணங்களாய் ஊழை விட வன்மையுடையது எதுவும் இல்லை என்பது உறுதியாயிற்று. ஏனெனில், நாம் எவ்வளவுதான் அதனை வெல்ல சூழ்ச்சி செய்தாலும், அவ்வூழே முன் வந்து நிற்கும் தன்மையுடையது.

இன்னோரன்ன நம் வாழ் நாட்களில் அமைந்திருத்தலின் இவற்றிற்கு ஏற்றவாறு நடந்து நாம் நல்வழிப்படுதல் வேண்டும். இதுவே நமது வாழ்க்கையின் இலட்சியமாக இருத்தல் வேண்டும்.